


லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ கனல் வீசும் காதல்... ★ முத்துலட்சுமி ராகவன்




முத்துலட்சுமி ராகவன்
கனல் வீசும் காதல்...
லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ கனல் வீசும் காதல்... ★ முத்துலட்சுமி ராகவன்
லட்சுமி பாலாஜி பதிப்பகம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

# கனல் வீசும் காதல்..

## 1

மும்பையின் ஜனக்கடலின் மத்தியில் திலீபனின் கார் நீந்தி முன்னேறியது.. பக்கவாட்டில் இருந்த சாலையின் பக்கம் திரும்பி மாதுங்காவிற்குள் சென்றது.. கடற்கரையின் ஓரமாக இருந்த பெஞ்சுகளில் மக்கள் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க.. கடலின் ஓரமாக போடப்பட்டிருந்த பாசிபடர்ந்த கருங்கற்களின் மீதும் சிலர் நின்று பேசிக் கொண்டிருந்தனர்..

'பேச்சு.. பேச்சு.. எப்போது பார்த்தாலும் பேச்சுத் தானா..?' திலீபன் அலுப்பாக உணர்ந்தான்.. அவனுக்கு சதா பேசிக் கொண்டே இருப்பவர்களைப் பார்த்தால் பிடிக்காது.. நிற்க நேரமில்லாமல் இறக்கை கட்டி அவன் பறந்து கொண்டிருக்க.. எப்படித்தான் இவர்களால் இவ்வளவு நேரம் பேச முடிகின்றதோ.. என்று அவன் ஆச்சரியப்படுவான்..

'எப்போதும்.. எங்கேயும்.. எதற்காகவோ..

பேச்சுகள்.. பேசப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன..

சப்தங்களின் மத்தியில்

மௌனத்தைக் கேடயமாகக் கொண்டு

நான் பயணம் செய்கின்றேன்..'

அவன் டைரியில் இப்படி ஒரு கவிதையை எழுதி வைத்திருக்கிறான்.. திலீபனுடன் பழகியுள்ளவர்களுக்குக் கூட அவன் கவிதை எழுதுவான் என்பது தெரியாது.. சொன்னால் மறுப்பார்கள்..

"திலீபனா..? கவிதை எழுதுவாரா.. நோ சான்ஸ்.. ஒரு வார்த்தைகூட அதிகமாக பேச யோசிக்கும் இரும்பு மனிதன் அவர்.. அவராவது கவிதை எழுதுகிறதாவது.. அதற்கும் ஒரு மனம் இருக்க வேண்டும்.. அவர் மனதில் பிஸினஸ்

மட்டும்தான் இருக்கும்.. ஒரு வினாடியைக் கூட வீணடிக்காமல் காசு பார்க்கிறவர் அவர்.. கவிதையெல்லாம் எழுத மாட்டார்.."

அவன் கவிதை எழுவான்.. அவனது இரும்பு மனத்திலும் ஈரமான ஒரு பக்கம் உண்டு என்று யாருக்குமே தெரியாது.. அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் திலீபன் ஒரு வியாபாரி.. ஒவ்வொரு நொடியையும் வியாபாரமாக்கும் சாமர்த்தியம் படைத்தவன் என்பது தான்..

காரில் ஏ.ஸி.யை அணைத்துவிட்டு காரின் வேகத்தை குறைத்து கார் கதவின் கண்ணாடி ஜன்னல் கதவுகளை திறக்க ரிமோட்டை இயக்கினான் திலீபன். ஜன்னல் கதவுகள் திறந்துகொண்டு.. மாலைநேரக் கடல் காற்று முகத்தில் படிந்தது.. அதை அனுபவித்தபடி காரை ஓட்டுவது பரம சுகமாய் அவனுக்கு இருந்தது..

இப்படிப்பட்ட உணர்வுகளும் அவனுக்குள் உண்டு என்பதை அவனுடைய தாய் குந்தவை அறிந்திருந்தாள்.. அவளுக்கு மகனின் மனஉணர்வுகள் தெரியும்... ஏனென்றால் சிறு வயதிலிருந்து திலீபன் தன் மன உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வது தாயிடம் மட்டும் தான்..

"அம்மா.. அந்த நாய்க்குட்டி ரோட்டில் கிடக்கே.. சாப்பிட அதுக்கு யார் இட்லி கொடுப்பாங்க.."

சாலையோரம் அநாதையாய் கிடக்கும் நாய்க் குட்டியின் மீது அவனுக்கு கருணை பொங்கி வழியும்.. குந்தவைக்கு மகனின் மனது புரியும்.. ஆனால், இதில் அவர்கள் செய்ய எதுவுமில்லை என்பதை மகனுக்குப் புரியும்படி எப்படி அவளால் எடுத்துச் சொல்ல முடியும்..?

இந்த ஒரு நாய்க்குட்டி மட்டும் ரோட்டில் கிடப்ப தில்லை.. நூற்றுக்கணக்கான நாய்கள் ரோட்டில் கிடக்கின்றன.. ஒரு பிரசவத்திற்கு ஒரு குழந்தை பெறும் மானிட இனத்தைதான்..

'நாம் இருவர்.. நமக்கு மூவர்..'

'நாம் இருவர்.. நமக்கு இருவர்..'

'நாம் இருவர்.. நமக்கு ஒருவர்..'

என்று அரசாங்கம் கட்டுப்படுத்தி மக்கள் தொகையைக் குறைக்க பாடுபட முடியும்..

'நாம் இருவர்.. நமக்கு எதற்கு ஒருவர்..?' என்ற விளம்பரம் வராமல் இருந்தால் சரி என்று மனித குலம் தவித்துக் கொண்டிருக்கையில், ஒரு பிரசவத்திற்கு ஏழு குட்டிகளுக்குக் குறையாமல்தான் பெற்றெடுப்பேன், அதுவும் வருடா வருடம் பெற்றுப் போடுவேன், வாழ்நாள் முழுவதும் பெற்றுப் போடுவேன் என்று நாய்க்குலம் கங்கணம் கட்டிக் கொண்டு அலைந்தால் வீதியோர நாய்க்குட்டிகளின் விதியைப் பற்றி கவலைப் பட்டு ஆக போவதென்ன..?

இதையெல்லாம் திலீபனுக்கு எடுத்துச் சொல்ல முடியாமல் வேறு வகையில் அவனைச் சமாதானப் படுத்துவாள் குந்தவை..

"பாரு திலீப்.. ஒவ்வொரு இனத்திற்கும் அதுகளுக் கென்று இடம் உண்டு.. அதை மாற்றினால் கஷ்டப்படப் போவது அவைதான்.. உதாரணத்திற்கு மீனை எடுத்துக் கொள்ளேன்.. அது இருக்குமிடம் தண்ணீர்தான்.. அதை விட்டு வெளியே எடுத்தால் அது இருக்குமா..?"

"இருக்காது.."

"வாத்தை எடுத்துக் கொள்.. தண்ணீருக்குப் பக்கத்தில் இருந்தால்தான் அதற்குக் கொண்டாட்டம்.. அதைக் கொண்டு போய் பாலைவனத்தில் மேய விட்டால் அதற்கு எப்படியிருக்கும்..?"

"திண்டாட்டமாக இருக்கும்.."

"பறவைகள் கூடு கட்டித்தான் வாழும்.. வீடு கட்டி வாழுமா..?"

"வாழாது.."

"அதைப் போலதான் நாய்க்குட்டிகளும் வீதியில்தான் இருக்க வேண்டும்.. அதெல்லாம் நிற்காமல் சுத்துகிற ஜாதிடா, நீ ஒரு பழமொழியைக் கேட்டதில்லையா..?"

"என்னதும்மா..?"

"நாய்க்கு வேலையில்லை.. நிற்க நேரமில்லை.."

"ஓ.. அதனால்தான் எப்போது பார்த்தாலும் நாய் ஓடிக்கொண்டே இருக்கிறதா..?"

"ஆமாம்டா ராசா.. அதுக்கு இருக்கு ஆயிரம் வேலைகள்.. நமக்கு அதுகளோட கவலை எதற்கு..? நாம் நம் வேலையைப் பார்க்கலாம்.."

ஒருவழியாய் மகனைச் சமாதானப்படுத்தி சாப்பிட வைத்து தூங்க வைத்துவிட்டு நிம்மதியாக படுத்து கண்மூடுவாள் குந்தவை.. நடுநிசியில் அவளை எழுப்புவான் திலீபன்.. அவள் பதறிப் போய் எழுந்து கொள்வாள்..

"என்னடா கண்ணா.. எதுவும் கெட்ட கனவு கண்டியா..? பயமாய் இருக்கா..?"

"ஊஹும்.. அதில்லைம்மா.."

"வேறு எதுடா..?"

"ஏம்மா.. அந்த நாய்க்குட்டி தனியாய் படுத்திருக்குமோ.. அதுக்கு துணைக்கு யாரிருப்பா..? அதுக்கு பயமாய் இருக்காதா..?"

"திலீப்.."

குந்தவை அவனை அணைத்துக் கொள்வாள்.. மறுநாள் காலையில் அந்த நாய்க்குட்டியை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு வந்தால்தான் மகன் நிம்மதியாய் தூங்குவான் என்ற உணர்வில் அவள் திலீபனையும் அழைத்துக் கொண்டு நாய்க்குட்டியைத் தேடிப் போன போது.. அந்த நாய்குட்டி தெருவோர டீக்கடையில் அலுமினிய தட்டில் ஊற்றப்பட்டிருந்த பாலைக் குடித்துக் கொண்டு ஹாயாய் வாலை ஆட்டிக் கொண்டிருந்தது..

"காவலுக்கு நாய் வேணுமுன்னு ரொம்ப நாளாய் நினைத்துக்கிட்டு இருந்தேன். இது வாலை ஆட்டிக் கொண்டு வந்தது.. என்ன கடையில் இருக்கிற பாலையும் பன்னையும் போட்டால் முழுங்கிட்டு கடையைச் சுற்றி வரும்.. எனக்கும் செலவில்லை காவலுக்கும் நாயாச்சு.." டீக்கடைக்காரர் சொல்லிக் கொண்டிருந்தார்..

"எல்லாம் சரி நாயரே.. உன் டீக்கடை பன்னு எந்தக் காலத்தில் இறக்குமதி ஆச்சுன்னு உனக்கே தெரியாது..

அதைப் போய் நாய்க்குப் போட்டால் ஃபுட் பாய்சனாகி அது மண்டையைப் போட்டுவிடாதா.." கடையில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தவர் கேட்டு வைத்தார்..

"யோவ்.. நானும் இந்தக் கடையை வைத்த காலத்தில் இருந்து தினமும் நீ வருகிற.. ஒரு நாளாவது நீயும் டீ வாங்கிக் குடித்துவிட மாட்டாயான்னு நானும் பார்க்கிறேன்.. ஓசியில் பேப்பரைப் படித்துவிட்டு நடையைக் கட்டிவிடுவ.. நீயெல்லாம் என் கடைபன்னைக் கிண்டலடிக்கிறாயா..? பேசாம எழுந்து போய்விடு.. இல்லைன்னா சுடுதண்ணியைப் பிடித்து மூஞ்சியில் ஊற்றி விடுவேன்.." டீக்கடைக்காரர் கொந்தளித்தார்..

அதை திலீபனுக்கு காட்டினாள் குந்தவை.. "பார்த்தாயா திலீப்.. இப்படித்தான் எல்லா நாய்க்குட்டிகளும் ஏதாவது ஒரு கடையில் ஐக்கியமாகிவிடும்.. காவலுக்கு நாய் வேண்டும்னு நினைக்கிறவங்க அதுகளை காப்பாத்தி விடுவாங்க.. நீ கவலைப்படாதே.."

அன்று இரவு திலீபன் அமைதியாக உறங்கினான்..

இன்றைய திலீபனின் இளம்வயதில் இப்படிப்பட்ட கவலைகளை அவன் பட்டான் என்று சொன்னால் யாருமே நம்ப மாட்டார்கள்.. சொன்னவரைத்தான் ஏற இறங்கப் பார்ப்பார்கள்..

"போட்டிருக்கும் கோட்டில் லேசாக தூசிபட்டால் கூட அவர் அந்தக் கோட்டை அவிழ்த்து எறிந்துவிடுவார்.. அது அப்போதுதான் வாங்கிய புதிய கோட்டாக இருந்தாலும் சரி.. அதைப் பற்றி யோசிக்க மாட்டார்.. அந்தக் கோட்டைத் திரும்பவும் போட மாட்டார்.. அவராவது தெருவோர நாய்க்குட்டியைப் பற்றிக் கவலைப்படுவதாவது.. அதை திரும்பிப் பார்க்கக்கூட அருவருப்பு படுவார்.."

இதுதான் திலீபனின் வெளியுலக பிம்பம்.. சென்னையில் சிறிய அளவில் கம்ப்யூட்டர் கம்பெனியை ஆரம்பித்து அதன் கிளைகளை பெங்களூர் ஹைதரா பாத், மும்பையென்று விரிவுபடுத்தி பல வெளிநாட்டு ஒப்பந்தங்களைப் போட்டு வருடத்தின் அனைத்து நாள்களிலும் உள்நாட்டிற்கும்

வெளிநாட்டிற்குமாய் விமானத்தில் பறந்துகொண்டிருக்கும் கோடீஸ்வர இளம் தொழிலதிபன் அவன்..

"மாம்.. மும்பைக்கு நாம் ஷிஃப்ட் ஆக வேண்டும் க்விக்.."

"என்னடா இது.. சென்னையில் நிம்மதியாக இருந்தவளை பெங்களூரில் குடியேற வைத்தாய்.. பெங்களூர் பிடித்துப் போய் ஒருவழியாய் நான் செட்டில் ஆகிக் கொண்டிருக்கும்போது மும்பைக்கு கூப்பிடுகிறாய்.. இது உனக்கே சரின்னு படுதா..?"

"சரின்னு பட்டதனால்தானே மம்மி அங்கே போகலாம்ன்னு சொல்கிறேன்.. எங்கேயிருந்தால் என்ன..? எல்லா ஊர்களிலும் சொந்த வீட்டில்தானே இருக்கப் போகிறீங்க.. சென்னை ஆபீஸைவிட மும்பையில் எனக்கு பிஸினஸ் அதிகமாக நடக்கிறது.. இங்கே நான் அதிக நாள் இருக்க வேண்டி இருக்கிறது.. ஸோ.. என் வீடும் இங்கேதானே இருக்கனும்..?"

"நீ எல்லா ஊர்களிலும் வீட்டை வாங்கிப் போட்டு வைத்திருக்கிறாய்.. போதாக்குறைக்கு கேரளாவில் ஒரு குட்டித் தீவையே வளைத்துப் போட்டு வாங்கிவிட்டாய், கேட்டால், அங்கே ஒரு தீம் பார்க் கட்டப் போகிறேன்னு சொல்கிறாய்.. நடுக்கடலில் இருக்கும் அந்த பங்களாவில் என்றைக்கு என்னை குடியேறச் சொல்லப் போகிறாயோ.. தெரியவில்லை.."

குந்தவை விளையாட்டாய் சொன்ன இந்த வார்த்தைகள் வினையாய் முடியுமென்று அவளும் நினைத்துப் பார்க்கவில்லை, திலீபனும் நினைத்துப் பார்க்கவில்லை.. திலீபன் நடுக்கடலில் இருந்த அந்தத் தீவில் ஒரு பெண்ணை குடிவைத்தான்.. அது குந்தவையல்ல..

# 2

திலீபனின் அப்பா பார்த்தசாரதி கொடுத்து வைத்தவர் என்று குந்தவை அடிக்கடி சொல்வாள்.. எதிலும் மாட்டிக் கொள்ளாமல் அதேசமயம் எல்லாமும் அவரைச் சுற்றியே நடக்குமாறு பார்த்துக் கொள்வதில் அவர் கெட்டிக்காரர்,

மகனிடம் உட்கார்ந்து கதை பேசமாட்டார்.. ஆனால், அவனின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் பெருமையாக தன்னை இணைத்துக் கொள்வார்.. குந்தவை அடிக்கடி அவரை வியப்பாள்..

"ஆயிரம் சொல்லு.. உன் அப்பாவின் கெட்டிக்காரத் தனம் யாருக்கும் வராதுடா திலீப்.. எல்லாம் நடந்தது என்னால்தான்னு பெருமை பீற்றல் களஞ்சியமாய் பேசிக் கொள்வதில் அவருக்கு நிகர் அவரேதான்.. நான் கேணைடா.. அன்றிலிருந்து இன்று வரை பூஜ்யமாக வீட்டுக்குள் ஆக்கப்படுவதைத் தெரிந்தும் வாய் திறக்காமல் மூலையில் கிடக்கிறேன் பார்.."

குந்தவைக்கு மகனின் மேல் அபார பிரியம் உண்டு.. அதனால் அவன் கண்ணுக்குத் தெரியாத குச்சியை கையில் வைத்துக் கொண்டு மிரட்டுவது தெரிந்தும் ஈடுகொடுத்து ஓடுவாள்.. பார்த்தசாரதிதான் தன் வசதி குறைந்தால் முணுமுணுவென்று குந்தவையைப் பிடித்துக் கொள்வார்...

"ஏண்டி.. நானுண்டு திருவல்லிக்கேணி பார்த்த சாரதி உண்டுன்னு கிடந்தவனை பெங்களூருக்கு இழுத்துக் கொண்டு வந்தாய்.. பெங்களூரில் ஒரு வழியாய் பெருமாள் கோயிலைக் கண்டுபிடித்து இப்போதுதான் அவருடன் ஃப்ரெண்ட்ஷிப்பாகி இருக்கிறேன்.. இப்போது மும்பைக்கு வா என்கிறாய்.. அது குண்டு வெடிக்கும் ஊர்டி.. அங்கே போய் நாம் இருக்க முடியுமா..? எந்த ஏரியாவில் எந்தக் குண்டு இருக்கும்னு யாருக்குத் தெரியும்..? சொல்லு.."

"இதோ பாருங்க.. ஊர் விட்டு ஊர் கடத்துவது நானில்லை.. உங்க மகன்தான்.. எது பேசுவதாக இருந்தாலும் நீங்க அவனிடம் பேசிக் கொள்ளுங்க.. எனக்கும் இதற்கும் சம்பந்தம் கிடையாது.."

"ஏண்டி.. நான் எப்படிடீ அவனிடம் போய் இதைப் பேசுவேன்..? நீதான் சொல்லனும்.."

"ஏன் தந்தியடிக்கிறீங்க.. மகனிடம் பேச இவ்வளவு யோசனையா..? அதிலும் எப்படிப் பேசுவதுன்னு கேள்வி

வேறு கேட்கறீங்க.. வாயால்தான் பேசணும்னு.. தெரியாதா..?"

"அதெல்லாம் எனக்குத் தோதுப்படாது.. நீயே சொல்லு.."

"எனக்கும் அது தோதுப்படாது.. அதனால் நீங்களே சொல்லிவிடுங்க.."

"இப்ப என்னை என்னதாண்டி செய்யச் சொல்கிற..?"

"பெருமாள் இல்லாத இடம் எங்கேயிருக்கு..? அவர் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார்.. பெங்களூரில் நீங்கள் கண்டுபிடித்த பெருமாளை மும்பையில் கண்டு பிடிக்க மாட்டீங்களா.. பேசாமல் கூட வாங்க.."

பார்த்தசாரதிக்கு மகனிடம் இருப்பது பயமல்ல.. தயக்கமுமல்ல.. தந்தை மகன் உறவு கெட்டுவிடக் கூடாது என்ற அக்கறை.. அவர் மகனிடம் பேசும்போது பார்த்துத்தான் பேசுவார்.. அதேபோல் திலீபனும் தாயிடம் காட்டும் கோபத்தை தந்தையிடம் காட்ட மாட்டான்.. எல்லா விதத்திலும் தந்தையிடம் இணக்கமாக பேசுபவன் ஒரு விஷயத்தில் மட்டும் அவருக்கு பிடிகொடுக்க மறுத்து விட்டான்..

"அந்தப் பெண் மேனகாவிற்கு என்ன குறைச்சல் திலீப்.. ஃபாரின் போய்ப் படித்திருக்கிறாள்.. அவளுடைய அப்பா சென்னையையே விலைக்கு வாங்கும் அளவுக்கு கோடீஸ்வரர்.."

"எனக்குப் பிடிக்கவில்லை அப்பா.."

"அப்போ.. மும்பை இன்டஸ்ட்ரியலிஸ்ட் சுதாங்கனின் மகளைப் பேசி முடித்துவிடலாமா..?"

"ஐ ஆம் நாட் இன்ட்ரஸ்ட் டாடி.."

"ஹோம்லி லுக் வேண்டுமானால் கோயம்புத்தூர் மில் ஓனரின் மகளை போன வாரம் ஒரு கல்யாணத்தில் அறிமுகப்படுத்தி வைத்தேனே.. அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா..?"

"வேண்டாம் டாட்.. விட்டுவிடுங்கள்.."

"அப்பா.. சொல்வதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்கக்கூடாதா திலீப்..?"

"என் காதில் நான் கேட்க எனக்கு ஆயிரம் அர்ஜெண்ட் வொர்க் மேட்டர்ஸ் இருக்கிறதும்மா.. இதைக் கேட்க நேரமில்லை.."

"உனக்கும் வயதாகிறது திலீப், காலா காலத்தில் நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டாமா..?"

"எனக்கு நூறு வயதா ஆகிவிட்டது மம்மி..? அப்படியே ஆனாலும் எனக்குக் கல்யாணத்தில் இன்ட்ரஸ்ட் இல்லைன்னா அது வேண்டாம்தான்.."

"திலீப்.. நான் எது செய்தாலும் உனக்கு நன்மையை நினைத்துத்தானே செய்வேன்..? அந்த நம்பிக்கை உனக்கு இருக்கிறதில்லையா..?"

"மேரேஜ் ஒன்றைத் தவிர நீங்கள் எது செய்தாலும் நன்மைக்கு என்றுதான் நினைப்பேன்.."

"ஏண்டா இப்படி இருக்கிறாய்..?"

"நான் இப்படித்தான் மம்மி இருப்பேன்.."

"உன் மனதில் ஏதும் எண்ணம் இருக்கிறதா திலீப்.."

"மனதென்று இருந்தால் எண்ணமென்று ஒன்று இருந்துதானே ஆகும்..? அம்மா.. குந்தவைன்னு பெயர் இருந்தால் எதையாவது ஆக்டிவ்வாய் செய்து கொண்டிருக்கணும்னு ஒன்றும் கட்டாயம் இல்லை மம்மி.. அமைதியாய் மகன் சம்பாதிப்பதை அனுபவித்துக் கொண்டு வீட்டிலேயும் இருக்கலாம்.."

"மருமகளுடன் சண்டை போடாமல்.. பேரன் பேத்திகளைக் கொஞ்சாமல் இருக்கும் அமைதி எனக்கு வேண்டாம்.."

"ஆனால்.. நிம்மதியாக பிஸினஸ் பண்ணும் அமைதி எனக்கு வேண்டும்.. ஆளை விடுங்க.."

"திலீப்.. பொறுடா.."

"என்னம்மா..?"

"உன் மனதில் யார் மேலாவது காதல் இருக்கிறதா.. இதைத்தாண்டா அப்படிக் கேட்டேன்.."

திலீபன் எதுவும் பேசாமல் கழுத்து டையை முடிச்சுப் போட்டுக் கொண்டே கண்ணாடியைப் பார்த்தான்..

'சொல்ல வேண்டியதுதானே..'

கண்ணாடியில் இருந்த பிம்பம் கேட்டது.. தோள் களைக் குலுக்கிக் கொண்டு மாடிப்படிகளில் இறங்கி விட்டான்..

அதற்குப் பிறகு பல முறை பார்த்தசாரதியும் குந்தவையும் அவனது திருமணப் பேச்சை எடுக்க முயன்றனர்.. திலீபன் கண்டிப்பாக மறுத்துவிட்டான்.. நடக்கிறபோது அது நடக்கட்டும் என்று அவர்களும் அவன் போக்கில் விட்டுவிட்டனர்..

கடற்கரைச் சாலையைத் தாண்டியதும் மீண்டும் காரின் ஜன்னல் கதவுகளை மூடிவிட்டு ஏ.ஸி-யை ஆன் செய்தான் திலீபன்.. செல்போன் ஒலிக்க.. எடுத்துப் பேசினான்..

"சார்.. சென்னை ஆபீஸில் இருந்து ரிப்போர்ட் வந்திருக்கிறது.."

"எனிதிங் இம்பார்டண்ட்..?"

"யெஸ் சார்.. கம்ப்யூட்டர்ஸ் எல்லாமே லாக் ஆகி விட்டதாம்.. ஏதோ வைரஸ் பிராப்ளமாம்.. கண்டுபிக்க முடியவில்லையென்று சொல்கிறார்கள்.."

"இடியட்ஸ்.. எத்தனை டெக்னீஷியன்கள் இருக்கிறார்கள்.. ஒருவருக்குக்கூட அதை சரிபண்ண முடியவில்லையா..?"

"முடியவில்லையாம்.."

"இம்மீடியட்டாய், எனக்கு சென்னைக்கு ஃப்ளைட் டிக்கெட் புக் பண்ணு.."

"இதற்கெல்லாம் நீங்கள் போக வேண்டுமா சார்..?"

"வேறு வழி என்ன இருக்கிறது சதீஷ்.."

"போனில் பேசிப் பார்க்கலாமே.."

"அதைத்தான் நீங்கள் செய்துவிட்டீங்களே.."

"இருந்தாலும் சார்.."

"நோ அதர் வே சதீஷ்.. அடுத்த வாரம் நாம் ஒப்புக் கொண்ட அஸைன்மெண்டையெல்லாம் முடித்து அனுப்பியாக வேண்டும்.. டே அண்ட் நைட் வொர்க் பண்ண வேண்டிய

கட்டாயம்.. இந்த நேரத்தில் போய் கம்ப்யூட்டரில் பிராப்ளம் வந்தால்.. நாம் சரியான நேரத்தில் நம் புராஜெக்டை சப்மிட் பண்ண முடியாது.. எனக்கு வேலை முக்கியம்.."

அன்று மாலை சென்னை செல்லும் விமானத்தில் பறந்து விட்டான் திலீபன். குந்தவை கெஞ்சிப் பார்த்தாள்..

"டேய்.. திலீப்.. சென்னைக்கு நானும் உன்கூட வருகிறேன்டா கண்ணா.. அங்கே நம் வீடு எப்படியிருக் கிறதோ.."

"அதெல்லாம் கவனித்துக் கொள்ள வேலையாட்கள் இருக்கிறார்கள் அம்மா.. நான் பிஸினெஸ் விஷயமாய் போகிறேன்.. நீங்கள் கூட வர வேண்டாம்.."

"நான் வந்தால் உன்னை என்னடா செய்யப் போகிறேன்.. வேலை செய்ய விடாமல் உன் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தப் போகிறேனா..?"

"சென்னையில் இருப்பதுதான் வீடா..? இங்கே மும்பையில் இருப்பதெல்லாம் வீடாகத் தெரிய வில்லையா.."

"அதுக்கில்லைடா திலீப்.."

"எதுக்குன்னாலும் என்னால் உங்களைக் கூப்பிட்டுக் கொண்டு போக முடியாது.."

குந்தவை வாய்க்குள் முணுமுணுத்துக் கொண் டிருப்பதை புன்னகையுடன் ரசித்தபடி அவன் கிளம்பி விட்டான்..

சென்னை விமான நிலையத்தில் இறங்கியதும் தயாராய் காத்திருந்த கம்பெனி காரில் ஏறி நேராக கம்பெனிக்குப் போய்விட்டான்..

"வாட் இஸ் தி பிராப்ளம்..? இதைச் சரிசெய்ய முடியாமல் நீங்கள் எல்லோரும் என்ன படித்துக் கிழித்தீங்க..?"

அடுத்த மணித்துளிகளில் அலுவலகத்தில் இருந்த அனைவரும் பம்பரமாய் சுழன்றனர்.. ஆனாலும் கம்ப்யூட்டர் உயிர் பெறவில்லை.. 'எனக்கென்ன..' என்று ஊமையாய் உயிர்ப்பில்லாமல் இருந்தது..

"கம்ப்யூட்டர் சர்வீஸ் சென்டருக்குப் போன் பண்ணுங்க.."

"சார்.. யூசுவலா நம் கம்ப்யூட்டர்ஸை சர்வீஸ் பண்ணும் டெக்னீஷியன்கள் வந்து பார்த்துவிட்டு கையை விரித்துவிட்டுப் போய்விட்டார்கள்.."

"இதைச் சொல்லவா நீ டீம் லீடராக இருக்கிறாய்..?"

"ஐ ஆம் ஸாரி சார்.."

"உலகத்திலேயே எனக்குப் பிடிக்காத வார்த்தை இதுதான்.."

நெற்றியில் விரலால் தட்டியபடி யோசித்த திலீபனுக்கு அப்போதுதான் பிரதீப்பின் நினைவு வந்தது..

பிரதீப்.. ஒரு கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் இன்ஜினீயர்.. கம்ப்யூட்டரை அக்குவேறு ஆணிவேராக பிரித்து மாட்டுவதில் திறமைசாலி.. பெங்களூரில் வேறு ஒரு கம்ப்யூட்டர் கம்பெனியில் வேலை செய்கிறான்.. சென்னைதான் பிறந்த ஊர், திலீபனின் நண்பனின் ஃபேக்டரியில் பிரதீப்பின் அப்பா மேனேஜராக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்.. அவனுடைய நண்பனின் சிபாரிசு லெட்டரோடு திலீபனிடம்தான் முதலில் பிரதீப் வேலை கேட்டு வந்தான்.. அப்போது தெரிந்ததுதான் அவனது கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட அறிவு..

பிரதீப்பை சாதாரண புரோகிராமராக வேலைக்கு சேர்ப்பதில் திலீபனுக்கு விருப்பமில்லை.. சில நாள் பொறுத்திருக்கச் சொன்னான்.. தகுதியான வேலை காலியானதும் அவனுக்குத் தகவல் தருவதாக வாக்களித்தான்..

ஆனால்.. அதற்குள் பிரதீப்பிற்கு வேறு கம்பெனியில் வேலை கிடைத்துவிட்டது.. அதன் பின்னால் அவனைத் தன் கம்பெனிக்கு அழைப்பது சரியில்லை என்ற காரணத்தினால் திலீபன் மௌனித்து விட்டான்..

அந்த பிரதீப்பை இப்போது அழைத்தான் திலீபன்.. சென்னைக்கு தனது திருமண நிச்சயதார்த்தத்திற்காக வந்திருந்த பிரதீப்பும் உடனே திலீபனின் வேண்டுகோளை ஏற்று வந்துவிட்டான்.. நடக்கப்போவதை அறியாமல் இருவரும் கைகொடுத்து கொண்டனர்..

# 3

பிரதீப் இரண்டு மணி நேரத்தில் கம்ப்யூட்டரில் இருந்த குறைபாட்டைக் கண்டறிந்து சரிசெய்து விட்டான்.. திலீபன் ஆச்சரியத்துடன் பிரதீப்பை பாராட்டினான்..

"குட் ஜாப் பிரதீப்.. உங்களை இழந்துவிட்டோ மென்று நான் வருந்துகிறேன்.. உங்களுக்கு தகுதியான வேலை காலியானதும் உங்களை என்னிடம் அழைத்துக் கொள்ளலாம் என்று நினைத்திருந்தேன்.. பட்.. நீங்கள் அதற்குள் அவசரப்பட்டு வேறு ஒரு கம்பெனிக்கு போய் விட்டீங்க.."

"சார்.. காத்திருக்கும் அளவுக்கு என் குடும்ப நிலைமை இல்லை.."

"உங்கள் அப்பா அபிஷேக்கின் கம்பெனியில் மேனேஜர்தானே.. அவன் நல்ல சேலரி கொடுப்பானே.."

"எவ்வளவு வந்தாலும் போதாத குடும்ப நிலை சார், என்னுடைய குடும்ப நிலை.. நாங்கள் அளவில் பெரிய குடும்பம்.. வயதான தாத்தா, பாட்டி, அவங்களுக்கு சாப்பாடு, துணிகளைக் கொடுத்தால் மட்டும் போதாது.. ட்ரீட்மெண்டும் கொடுக்க வேண்டும்.. என் அத்தை.. அதாவது அப்பாவின் அக்கா.. சிறு வயதிலேயே விதவையாகி என் அப்பாவின் பராமரிப்பில் வந்து சேர்ந்து விட்டாங்க.. அப்புறம் நான்.. என் படிப்புச் செலவு, பராமரிப்புச் செலவு மற்ற நாள்களிலேயே மாதா மாதம் கடன் வாங்காமல் குடும்ப பட்ஜெட்டை சரிபண்ண அப்பா திணறுவார்.. இந்த லட்சணத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னாலேயே முடிந்துவிட்ட தங்கையின் கல்யாணத்திற்கு வாங்கிய கடன் தலைக்கு மேல் பாரமாய் அழுத்திக் கொண்டிருந்தது.."

"ஓ.. ஐ ஸீ.. உங்கள் குடும்பத்தின் பொருளாதார நிலைமை இவ்வளவு மோசமாய் இருக்குமென்று எனக்குத் தெரியாது.. ஐ ஆம் ஸாரி.. நான் வேறு ஒன்றை நினைத்து விட்டேன்.. இவ்வளவு திறமைசாலியான உங்களுக்குப்

பொருத்தமான பெரிய வேலையைத் தர வேண்டும்.. அதுதான் உங்களின் திறமையை நான் மதிப்பதற்கான அர்த்தமாக இருக்கும் என்று நினைத்தேன்.."

"அதனால் என்ன சார்.. அவசரத்திற்கு வேறு ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தேன்.. இப்போது.. அதே சம்பளத்தோடு உங்கள் கம்பெனியில் வேலை கிடைத்தால் வேண்டாமென்றா சொல்லிவிடுவேன்..?"

திலீபன்.. பிரதீப்பின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும்.. விடுதலையான ஒரு மனஉணர்வைப் பெற்றான்.. இவ்வளவு பெரிய திறமைசாலியை கை நழுவ விட்டு விட்டோமே என்ற உறுத்தலும் வேறு ஒரு கம்பெனியில் வேலைபார்ப்பவனை எப்படித் தன் கம்பெனிக்கு அழைப்பது என்ற சங்கடமும் மாறியதில் அவனுக்குள் ஆனந்தம் பொங்கியது..

"தேங்க்யூ பிரதீப்.. தேங்க்யூ வெரிமச்.."

"நான்தான் சார் உங்களுக்குத் தேங்க்ஸ் சொல்ல வேண்டும்.. எனக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணப் போகிறார்கள்.. மனைவியை அழைத்துக் கொண்டு நான் தனிக்குடித்தனம் போய்விடுவேனோ என்ற கவலை என் அப்பா அம்மாவின் மனதை அரித்துக் கொண்டிருக்கிறது.. பட், நான் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.. எனக்கு என் குடும்பம் தான் ஃபர்ஸ்ட்.. மற்றதெல்லாம் நெக்ஸ்ட்தான்.."

'எங்கேயோ பிறந்து வளர்ந்து.. உன் கை பிடித்து.. நீயே சகலமும் என்று உன்னை நம்பி உன் பின்னால் வருபவளை மற்றது என்று சொல்வாயா..? அவள் என்றும் உனக்கு கடைசிதானா..?'

கேட்க நினைத்த கேள்வியை மனதிற்குள் புதைத்துக் கொண்ட திலீபன்.. மற்றவர்களின் பிரச்சினை நமக்கு எதற்கு என்ற நினைவில் தோளைக் குலுக்கிக் கொண்டான்..

"பெங்களூரில் நீங்கள் வேலை பார்க்கும்போது மனைவியை உடன் அழைத்துக் கொண்டு போய்த்தானே ஆக வேண்டும் பிரதீப்..?"

"நான் அப்படிச் செய்வதாக இல்லை சார்.. இங்கே சென்னையில் என் குடும்பத்துடன் அவளை விட்டு விட்டு வழக்கம் போல் நான் வேலைக்கு பெங்களூர் போய் விடலாமென்றுதான் இருக்கிறேன்.. மாதா மாதம் இரண்டு நாள் லீவில் என் வீட்டினரைப் பார்க்க வரும்போது அவளையும் பார்த்துக் கொண்டால் போயிற்று.."

'நெல்லுக்கு இறைக்கும் தண்ணீரில் புல்லுக்கு கொஞ்சம் பாய்ந்துவிட்டுப் போகட்டும் என்று கருணை காட்டுகிறாய்..'

"ஓ.. இதற்கு பெண் வீட்டில் சம்மதித்து விட்டார்களா..?"

"அவர்கள் யார் சம்மதிப்பதற்கு..? அவர்கள் என்னவோ.. அவங்க வீட்டுப் பெண்ணை கல்யாணம் முடிந்த கையோடு நான் பெங்களூருக்கு அழைத்துப் போய்விடுவேன் என்று கனா கண்டுகொண்டிருக் கிறார்கள்.."

'பெண் கணவனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்று பெண்ணைப் பெற்றவங்க நினைப்பது கனவா..'

"நீங்கள் முன்கூட்டியே அது முடியாதென்று சொல்லி விட்டீங்களா..?"

"அது எதற்கு தேவையில்லாத ரிஸ்க்..? அதெல்லாம் சொல்லத் தேவையில்ல.. கல்யாணத்தை முடித்து கையைப் பிடித்துவிட்டால் அப்புறம் நாங்கள் சொல்வதைத் தானே அந்தப் பெண் கேட்டாக வேண்டும்..?"

'தாலி' என்பது விலங்கு என்று உங்களைப் போன்ற ஆண்கள் நினைத்துவிட்டீர்கள்.. ஒரு தாலியைக் கட்டி விட்டால் பெண்ணைச் சிறை பிடித்து ஆயுள் தண்டனை கைதியாக்கி அவளை வாழ்நாள் முழுவதும் வருத்தப்பட வைக்க வேண்டுமென்பதுதான் உங்கள் குறிக்கோள்..'

"இப்படி ரிஸ்க் எடுக்கவேண்டிய அவசியம் என்ன பிரதீப்..? நீங்கள் தனிக்குடித்தனம் போனால் உங்கள் குடும்பம் ஏன் பயப்பட வேண்டும்..?"

"கடன் சார்.. எக்கச்சக்க கடன்.. அதை அடைக்க என் சம்பளம் பணம் பூராவுமே என் குடும்பத்திற்கு தேவைப் படுகிறது.. முதலில் என் படிப்பிற்காக கடன் வாங்க ஆரம்பித்தார் என் அப்பா.. அதன்பின் என் தங்கையின் படிப்பு.. அவள் படித்துக்

கொண்டிருக்கும் போதே காதல் என்று வந்து நின்றுவிட.. அவள் காதலனின் வீட்டில் கல்யணம் பேசப் போனோம்.. அவர்கள் முழ நீளத்திற்கு சீர்வரிசை லிஸ்ட்டை நீட்டினார்கள்.. கடன் வாங்கி கல்யாணம் செய்து வைத்தோம்.."

"அந்தக் காதலன் எங்கே போனான்..?"

"அவனுடைய அப்பா அம்மாவின் பின்னால் ஒளிந்து கொண்டான்.."

"உங்களுடைய தங்கை இப்போது எங்கே இருக்கிறாங்க..?"

"அவளுடைய கணவனுடன் சந்தோஷமாக கல்கத்தாவில் இருக்கிறாள்.. அவர் அங்கே மெக்கானிக்கல் இன்ஜினீயராக வேலை பார்க்கிறார்.."

"உங்கள் தங்கையின் மாமனார் மாமியார் கூட இருக்கிறாங்களா..?"

"அது எதற்கு தேவையில்லாத சுமை..? கல்யாணம் ஆன உடனேயே அவங்களை சென்னையிலேயே

கழட்டி விட்டு விட்டோம்.. என் தங்கை அவளுடைய கணவனுடன் தனிக் குடித்தனமாக இருக்கிறாள்.. வருடத்திற்கு ஒருமுறை வந்து மாமனார் மாமியாரை பார்த்து விட்டுப் போவதே பெரிது.."

திலீபன் திகைத்தான்.. இது என்ன நியாயம் என்று அவனுக்கு விளங்கவில்லை.. இதைப் பேசுபவன் திறமையான ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினீயர்.. இவன் வீட்டிற்கு வரும் பெண்ணிற்கு ஒரு நியாயத்தையும் இவன் வீட்டில் பிறந்த பெண்ணிற்கு வேறு ஒரு நியாயத்தையும் இவன் பேசுகிறான்.. இதை எங்கே போய் சொல்வது..?

"அப்படியானால் உங்கள் கடன்களை அடைத்து விட்டே நீங்கள் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமே பிரதீப்..?"

"இந்தக் கல்யாணத்தை நான் பண்ணிக் கொள்வதே என் கடன்களை அடைப்பதற்காகத்தானே சார்.."

"புரியவில்லை.."

"பெண் வீட்டில் ரொக்கமாக வரதட்சணை வாங்கப் போகிறேன்.. அவளுக்கு ஐம்பது சவரன் நகை

போடுகிறாங்க.. என் தங்கைக்குப் போட வேண்டிய நகை இருபது சவரன் பாக்கியிருக்கு.. என் தங்கைக்கு இருபது சவரன் கொடுத்தது போக மீதி முப்பது சவரனை விற்று விட்டால் அதிலும் பணம் கிடைக்கும்.."

"ஏன் அடமானம் வைக்கலாமே.."

"அதில் குறைவாகத்தானே பணம் கிடைக்கும்..?"

'கெட்டிக்காரன்டா நீ.. கழுத்து நிறைய நகைகளோடு வரும் பெண்ணை வழிப்பறி கொள்ளைக்காரன்

போல நகைகளைப் பறித்துக் கொள்ளத் திட்டம் போட்டிருக்கிறாய்..'

"ஓஹோ.."

"இது போக கார் வாங்கித் தருகிறார்கள்.."

'அடப்பாவி... இதை வேறு செய்து தொலைக் கிறார்களா..?'

"நீங்கள் அதையும் விற்றுவிடுவீர்களே.."

"எப்படி சார் கரெக்டா கண்டுபிடித்தீர்கள்..?"

'இதைக் கண்டுபிடிக்க நான் குறி கேட்கவா போக வேண்டும்..? கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருப்பதற்குள் உன் புத்தி போகும் போக்கை கணித்து விட்டேனே..'

"ஒரு யூகம்தான்.."

"ஆமாம் சார்.. காரை வாங்க ஆளை ரெடி பண்ணிவிட்டேன்.. என் ஃப்ரெண்ட் வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லியிருக்கிறான்.. என்ன ஒரு ஐம்பது ஆயிரம் குறைத்துக் கொடுப்பான்.. நஷ்டம்தான்.."

"யாருக்கு..?"

"எனக்குத்தான்.. பின் வேறு யாருக்குன்னு நினைத்தீங்க..?"

'அந்த பெண்ணுக்கும் பெண்ணைப் பெற்றவர் களுக்கும் என்று நினைத்தேன்.. அதை விடு.. வாழ்க்கையே நஷ்டமாகப் போகிறது.. பணத்தைப் பற்றியா அவர்கள் கவலைப்படப் போகிறார்கள்..?'

"உங்கள் ஃப்ரெண்ட் கார் வாங்கும் ஆசையில் இருக்கிறாரா..?"

"ஆமாம் சார்.. அவனுக்குப் போன வருடம்தான் கல்யாணம் ஆனது.. முதல் வருட திருமண நாளுக்கு அவனுடைய மனைவிக்கு காரை வாங்கிப் பரிசளிக்கப் போகிறானாம்.."

'தன் மனைவி சீதனமாகக் கொண்டு வரும் காரை.. நண்பன் வாங்கி அவன் மனைவிக்குப் பரிசாக கொடுக்கப் போவதை எந்தவித குற்ற உணர்வும் மனஉறுத்தலும் இல்லாமல் இயல்பாக எப்படி இவனால் சொல்ல முடிகின்றது..'

திலீபனுக்கு தன் அலுவலக கம்ப்யூட்டர்கள் சரியாகி விட்ட சந்தோஷம் மறந்து இப்படி ஒரு மனிதனிடம் பேசிக் கொண்டிருக்கிறோமே என்ற அலுப்பு மேலிட்டது..

ஆனால்.. இவன் திறமைசாலி.. கம்ப்யூட்டர்களின் சூட்சமம் தெரிந்த கில்லாடி.. இவனைப் பயன்படுத்திக் கொண்டுதான் ஆக வேண்டும்.. இவன் குணாதிசயம் எப்படி இருந்தால் திலீபனுக்கென்ன..? அவனுக்கு வேண்டியது வேலை திறமை.. அது பிரதீப்பிடம் கொட்டிக் கிடந்தது. அவனை இழக்கக்கூடாதென்று திலீபன் முடிவு செய்தான்..

"சொல்லுங்கள் பிரதீப்.. என் சென்னை பிராஞ்சில் டீம் லீடராகப் பொறுப்பேற்றுக் கொள்ள உங்களுக்கு சம்மதமா..?"

"இருநூறு சதவிகிதம் சம்மதம் சார்.. இதை உங்கள் வாயால் சொல்ல மாட்டீர்களா என்றுதான் இத்தனை நாளாய் காத்திருந்தேன்.."

"இன்னொருவர் கம்பெனியில் வேலை பார்க்கும் நபரை நான் எப்படிக் கூப்பிடுவது என்ற தயக்கத்தில் தான் நான் இத்தனை நாளும் இருந்தேன் பிரதீப்.."

"இதில் என்ன சார் இருக்கிறது..? ஒன்றைவிட வேறொன்று பெட்டர் என்று தோன்றினால் இதைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்க் கொண்டே இருக்க வேண்டியது தானே.."

'இவன் பிராக்டிகல் மேன்..' என்று திலீபன் நினைத்துக் கொண்டான்..

"உங்களுக்கான அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் இப்போது வந்துவிடும் பிரதீப்.. கம்பெனியில் குவார்ட்டர்ஸ் கொடுப்போம்.. கார் அலவன்ஸ் உண்டு.. மற்றபடி இப்போதைய உங்களின் வேலைக்கான சம்பளம், உங்கள் பழைய வேலையைவிட நான்கு மடங்கு அதிகமாக இருக்கும்.."

"தேங்க்யூ சார்.. தேங்க்யூ வெரிமச்.. சென்னை யிலேயே எனக்கு வேலை கிடைத்துவிட்டால் என் பேரண்ட்ஸ் ரொம்ப சந்தோஷப்படுவார்கள்.."

"வரப்போகும் உங்கள் மனைவியும் சந்தோஷப் படுவாங்கதானே..."

"அதைப் பற்றியென்ன சார், எனக்கு என் பேரண்ட்ஸைப் பற்றித்தான் கவலை.."

'இவனுக்கு வரப்போகும் மனைவி மிகவும் துரதிர்ஷ்ட சாலி..' என்று நினைத்துக் கொண்டான் திலீபன்..

'பாவம்.. எத்தனை கனவுகளுடன் இவனைக் கைபிடிக்கக் காத்திருக்கிறாளோ.. இங்கே அவளுக்காக காத்திருக்கும் வாழ்க்வைப் பற்றி அவளுக்குத் தெரியாது..'

இந்தியப் பெண்களின் தலைவிதியைப் பற்றி நினைத்து பரிதாப்பட்டான் திலீபன்..

# 4

அபிஷேக்கின் அலுவலக அறைக்குள் திலீபன் நுழைந்தபோது தன் முன்னாலிருந்த கம்ப்யூட்டரில் வந்திருந்த ஈமெயில்களை ஆராய்ந்து கொண்டிருந்தான் அபிஷேக்..

"ஹாய் அபிஷேக்.." என்ற திலீபனின் குரலில் நிமிர்ந்தவன்,

"ஹலோ திலீப்.." என்று எழுந்து அவனைக் கட்டிக் கொண்டான்..

"என்னடா ஃபேக்டரி முதலாளி, எப்படிப் போகிறது உன் பிஸினஸ்..?" என்றபடி சுவாதீனமாய் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான் திலீபன்..

"நன்றாகப் போகிறது.. நீ சென்னைக்கு எப்போது வந்தாய்..?" என்று வினவியபடி இருவர் அமரும் அந்த சோபாவில் நண்பனுக்கு அருகே அமர்ந்த அவன் தோளைச் சுற்றி கை போட்டுக் கொண்டான் அபிஷேக்..

"நேற்றுதான் கம்ப்யூட்டர் காலை வாரிவிட்டு விட்டது.. திடீர்னு எல்லாமே ஆஃப் ஆகிவிட்டதாம்.. இந்த வீக் எண்டில் புராஜெக்ட்டை முடித்துக் கொடுக்க வேண்டும்.. மும்பையின் பிஸினஸ்ஸை போட்டது போட்டபடி விட்டுவிட்டு ஃப்ளைட் பிடித்து பறந்து வந்து விட்டேன்.."

"இப்போது பிராப்ளம் சால்வ் ஆகிவிட்டதா..?"

"ம்ம்.. உன் ஃபேக்டரி மேனேஜரின் மகன் பிரதீப் தான் வந்து சால்வ் பண்ணினான்.."

"அவனுக்கு கல்யாணம் ஃபிக்ஸ் ஆகியிருக்கிறதாம்.."

"சொன்னான்.."

"அதற்கு லோன் கேட்டு அவனுடைய அப்பா அப்ளிகேஷன் கொடுத்திருக்கிறார்.."

'ஒரு கல்யாணத்தை வைத்து இவர்கள் எத்தனை வழிகளில் பணம் பார்க்கிறார்கள்..' திலீபன் மனதிற்குள் வியந்து கொண்டான்..

"கல்யாணம் பெண் வீட்டைச் சேர்ந்தது இல்லையா..?"

"நிஜம்தான்.. ஆனால், இவருக்கு லோன் வாங்க இது ஒரு சாக்கு.. இருக்கும் லோனையெல்லாம் வாங்கி விட்டார்.. இன்னும் லோன் கேட்கிறார்.."

"நீ முடியாதென்று மறுத்துவிட வேண்டியது தானே.."

"ப்ச்.. அப்பா காலத்தில் இருந்து இங்கே வேலை பார்க்கிறார்.. வேலையில் திறமைசாலி.."

"அப்பாவும் மகனும் அந்த விஷயத்தில் ஒற்றுமை போல.."

"அதனால்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.."

"என்னவோ போ.. நானும் அந்த பிரதீப்பிற்கு வேலை போட்டுக் கொடுத்து விட்டேன்.."

"ஈஸிட்..?"

"யெஸ்.. அவனுக்கு கம்ப்யூட்டர் நாலெட்ஜ் அதிகப் படியாகவே இருக்கிறது.. அதை யுடிலைஸ் பண்ணிக்க வேண்டுமில்லையா..?"

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அறையின் கதவு லேசாக தட்டப்பட்டது. அபிஷேக் லேசாகத் திரும்பி..

"யெஸ் கமின்.." என்று கூறினான்..

ஐம்பதைத் தாண்டிய வயதுடன் ஒருவர் உள்ளே வந்தார்..

"ஓ.. நீங்களா.." என்ற அபிஷேக் திலீபனிடம்..

"இவர்தான் பிரதீப்பின் அப்பா மிஸ்டர் சந்தானாம்.." என்றான்..

"ஓ.. ஐ ஸீ.."

"சந்தானம் சார்.. இவன்தான் என் நண்பன் திலீபன். இவனுடைய கம்பெனியில்தான் உங்கள் மகன் இனிமேல் வேலை செய்யப் போகிறான்.."

"தேங்க்யூ சார்.."

"என்ன விஷயமாக வந்தீங்க சந்தானம்..?"

"இன்றைக்கு என் மகனுக்கு நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறது.. சாயந்திரம் கல்யாண மண்டபம் பிடித்து ஃபங்ஷனை நடத்தப் போகிறோம்.. நீங்கள் வந்திருந்து நடத்திக் கொடுக்க வேண்டும்.."

"ஈவினிங்தானே.. எந்த மண்டபம்..?"

சந்தானம் விவரம் சொல்லிவிட்டு திலீபனின் பக்கம் திரும்பி கை குவித்தார்..

"சார்.. நீங்களும் அவசியம் வரணும்.."

இதற்கெல்லாம் போக திலீபனுக்கு நேரம் ஏது..? அவன் திருமண விழாக்களுக்கே போனதில்லை..

உறவினர் வீட்டுத் திருமணங்களுக்கு பார்த்தசாரதியும் குந்தவையும் போய் வந்து விடுவார்கள்.. கம்பெனியில் வேலை பார்ப்பவர்களின் திருமணங்களுக்கு அவன் சார்பாக அவனுடைய செகரெட்டரி சதீஷ் போய் வருவான்..

நிலவரம் இப்படியிருக்க.. இவர் வந்து ஒரு நிச்சயதார்த்த விழாவிற்குப் போய் கூப்பிடுகிறாரே என்று இருந்தது

திலீபனுக்கு.. அவன் அபிஷேக் கின் முகம் பார்த்தான்..

"நேரம் இருந்தால் அவனும் வருவான்.. நீங்க கிளம்புங்க.." என்று சந்தானத்தை அனுப்பி வைத்து விட்டான் அபிஷேக்..

"என்னடா இது.. உன் மேனேஜர் கண்ணில் படுகிற எல்லா ஆள்களையும் கூப்பிடுவார் போல இருக்கே.."

"என் பக்கம் வருகிற பெரிய மனிதர்களின் கணக்கைப் பார் என்று பெண்வீட்டாரிடம் காட்ட வேண்டாமா..? அதற்குத்தான்.."

"அதற்கு நான்தான் இவருக்குக் கிடைத்தேனா..?"

"என்னவோ தெரியாத்தனமாய் கேட்டு விட்டார்.. விடு.."

"எவ்வளவு எளிதாக எங்கேஜ்மெண்ட் ஃபங்ஷனுக்கு வா என்கிறார்.."

"திலீப்.. இது ஒருவகையான நாகரிகம்டா.. இரண்டு பேர் உட்கார்ந்திருக்கும் இடத்தில் ஒருவரை மட்டும் விருந்துக்கு அழைத்துவிட்டு இன்னொருவரை கூப்பிட வில்லையென்றால் அது நன்றாக இருக்குமா..? நீயே சொல்.."

"நான் சொல்ல என்ன இருக்கிறது.. இன்றைக்கு ஒரு நாள் வேஸ்டானதற்கே நான் எத்தனை நாள் அதிகப்படி வேலை பார்க்க வேண்டுமோ.."

ஆனால்.. திலீபன் அந்த நிச்சயதார்த்த விழாவிற்கு போக வேண்டித்தான் வந்தது.. அவனுடைய அன்றைய நாள் முழுவதும் வீணாகத்தான் செய்தது..

மும்பைக்கு கிளம்ப அவன் ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது அவனுடைய செல்போனின் மணி யொலித்தது.. அவனுடைய சென்னை அலுவலகத்தில் இருந்ததுதான் அழைத்தார்கள்..

"சார்.. கம்ப்யூட்டர் திரும்பவும் கொலாப்ஸ் ஆகிறது.."

"உங்களுக்கெல்லாம் வேறு வேலையே இல்லையா..?"

"நாங்கள் என்ன செய்வது சார்..?"

"அந்த பிரதீப் சரிபண்ணியபோதே எதனால் பிராப்ளம்.. அதை எப்படி சால்வ் பண்ணுவதுன்னு அவனிடம் கேட்டுத்

தெரிந்து கொள்ள வேண்டாமா..?"

மறுமுனை மௌனம் சாதிக்க.. எரிச்சலுடன் பிரதீப்பைத் தொடர்பு கொண்டான் திலீபன்..

"சார்.. நான் மண்டபத்தில் இருக்கிறேன்.."

"ஜஸ்ட் ஒன் அவர் வந்தால் போதும் பிரதீப்.."

"ஃபங்ஷன் முடிந்துதான் சார் வர முடியும்.."

அவன் சொல்வதில் இருக்கும் நியாயம் புரிய, அபிஷேக்கிற்கு போன் பண்ணினான் திலீபன்..

"என்ன திலீப்.."

"நானும் உன்னுடன் அந்த பிரதீப்பின் எங்கேஜ் மெண்டிற்கு வருகிறேண்டா.. நாம் சேர்ந்தே போகலாம்.."

"என்னடா.. திடீர்ன்னு புரோகிராமை மாற்றி விட்டாய்..?"

"வேறுவழி..? திரும்பவும் கம்ப்யூட்டரில் பிராப்ளம்.. சரிபண்ண பிரதீப்தான் வந்தாகனும்... அவனுடைய என்கேஜ்மெண்டை அவாய்ட் பண்ணிவிட்டு அவனுடைய வொர்க்கை மட்டும் யுடிலைஸ் பண்ணிக் கொள்வது சரிவராது.. அதனால் என்கேஜ்மெண்டை அட்டெண்ட் பண்ணிவிட்டு கையோடு அவனைத் தூக்கி காரில் போட்டுக் கொண்டு வரப் போகிறேன்.."

"இவனைக் கடத்தி என்ன ஆகப் போகிறது திலீப்..? ஏதாவது ஃபிகரைக் கடத்தினாலாவது உன் அம்மா சந்தோஷப்படுவாங்க.. போன தடவை என் குழந்தையின் பிறந்த நாள் விழாவிற்கு வந்து ரொம்பவும் ஏக்கமாய் பேசினாங்க.."

"என்ன பேசியிருப்பாங்க.. இதைப் போல ஒரு பேரன் பேத்தியை என்றைக்கு நான் கையிலெடுத்துக் கொஞ்சப் போகிறேனோன்னு பேசியிருப்பாங்க.."

"எப்படிடா சரியாய் சொன்னே..?"

"இதையேதான் தினமும் என்னிடம் புலம் புறாங்களே.. அவங்க ஏக்கத்தைத் தீர்க்க எவளையாவது ஒருத்தியை கடத்திக் கொண்டு போய் தாலியைக் கட்டச்

சொல்கிறாயா..? என்னைப் பார்த்தால்.. பெண்ணைக் கடத்துபவன் போலவா தெரிகிறது..?"

இயல்பாக இதைச் சொல்லிச் சிரித்த திலீபன்.. பெண்ணைக் கடத்தும் நாள் ஒன்றும் வந்தது.. எதிர் காலத்தில் நண்பன் சொன்னது போலவே ஒரு பெண்ணைத் தூக்கி காரில் போட்டுக் கொண்டு பறக்கப் போவதை அறியாமல் வெள்ளையாய் சிரித்த படி வேடிக்கையாய் பேசிக் கொண்டிருந்தான் திலீபன்..

அன்று மாலை.. அபிஷேக்கின் காரும் திலீபனின் காரும் ஒன்றின் பின் ஒன்றாக சந்தானம் கூறிய மண்டபத்தை நோக்கி விரைந்தன..

அவர்கள் இருவரும் கார்களில் வந்து இறங்கியதில் சந்தானம் வாயெல்லாம் பல்லானார்..

"வாங்க.. வாங்க.." என்று வரவேற்று அழைத்துச் சென்று முன்வரிசையில் அமர வைத்தார்..

"ஆற அமர இருந்து சாப்பிட்டு விட்டுத்தான் போகனும்.." என்று கூறிவிட்டு சென்றும் விட்டார்..

"இங்கே உட்கார்ந்து சாப்பிடவா நான் வந்தேன்..? எவ்வளவு சீக்கிரம் ஃபங்ஷன் முடிகின்றதோ அவ்வளவு சீக்கிரமாய் பிரதீப்பை அழைத்துக் கொண்டு இடத்தைக் காலி பண்ண வேண்டும்.."

எவ்வளவு நேரம் இருக்க முடியுமோ அவ்வளவு நேரம் அங்கே இருக்கப்போவதை அறியாமல் திலீபன் கடுகடுத்தான்..

"விடுடா.. விடுடா.. இதெல்லாம் ஒரு உபசார மொழி.."

"என்ன மொழியோ.. எனக்கு முள்மேல் இருப்பது போல் இருக்கின்றது.. சட்டுபுட்டென்று நடக்க வேண்டியதை இவர்கள் நடத்தினால்தான் என்ன..?"

"உன் அவசரத்திற்கே எல்லாம் முடியுமா..? கொஞ்சம் பொறுமையாகத்தான் இரேன்.."

"என்னத்தை பொறுமையாய் இருப்பது..?"

மேடையில் இரு தரப்பு வீட்டினரும் அமர்ந்து நிச்சயதார்த்த பத்திரிகையை வாசித்துவிட்டு ஒருவரின் முழங்கையில்

இன்னொருவர் சந்தனத்தை தடவிக் கொண்டார்கள்..

"ஏண்டா அபிஷேக்.. இதையெல்லாம் அவரவரே பூசிக் கொண்டால் ஆகாதா..?" என்று சந்தேகம் கேட்டான் திலீபன்..

"இதோ பார்.. உன் அவசரத்திற்கு எதுவும் நடக்காது.. வந்தது வந்துவிட்டோம்.. பொறுமையாய் இருந்துதான் ஆகவேண்டும்.. புரிந்ததா..?" என்று அதட்டல் போட்டான் அபிஷேக்..

இரு வீட்டாரும் தட்டை மாற்றிக் கொண்டு எழுந்துவிட.. மேடையில் ஒரு நாற்காலியைக் கொண்டு வந்து போட்டார்கள்..

"இது எதற்குடா..?"

"திருமணம் ஆகப் போகிற பெண் வந்து உட்காருவாள்.."

"இங்கே வந்து ஏன் உட்காருவாள்..?"

"நலங்கு வைப்பாங்கடா.."

"இது வேறா.. ம்ஹும்.."

திலீபன் சலிப்புடன் கூறிக்கொண்டே மேடையைப் பார்த்தான்.. பார்த்தவனின் விழிகளில் ஒரு கோடி சூரியன்களின் ஒட்டுமொத்த வெளிச்சமும் வர.. அவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது..

'இவளா..!!!?'

# 5

ஆறு வருடங்களுக்கு முன்னால் திலீபனின் இருபத்து எட்டாம் வயதில் ஒரு ரயில் பயணத்தில் அவளைச் சந்தித்தான்..

அவசரத்தில் கிளம்பியவனுக்கு முதல் வகுப்பு டிக்கெட் கிடைக்காமல் போய்விட.. இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்ய நேர்ந்ததில் ஏற்கெனவே கடுப்பில் இருந்தவனுக்கு

அவனுடைய ஸீட்டிற்கு எதிர்புறமாகவும் பக்கவாட்டிலும் அடுத்தடுத்த இருக்கைகளிலும் அரட்டை அடித்துக் கொண்டு வந்த கல்லூரி மாணவிகளைப் பார்க்கும்போது பற்றிக் கொண்டு வந்தது..

அது முக்கியமான பிரயாணம்.. எதிர்பாராதவிதமாக காலில் அவனுக்கு அடிபட்டிருந்ததால் காரிலும் விமானத்திலும் பயணம் செய்ய முடியாமல் போனது.. நல்லவேளையாய் ஏ.ஸி. கோச்சாவது கிடைத்ததே என்ற நிம்மதியுடன் இருந்தவனின் நிம்தியைக் குலைத்தது அந்த கல்லூரி மாணவிகளின் உற்சாகக் கூச்சல்..

குன்னூருக்கு பயணமாகிக் கொண்டிருந்த திலீபன் எரிச்சலுடன் ஜாடையாய் எதிரே அமர்ந்திருந்த பெண்களை முறைத்தான்... அவர்கள் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.. கடைசியில் பொறுக்க மாட்டாமல் கத்திவிட்டான்..

"கொஞ்சம் அமைதியாய் வரமாட்டீங்களா.."

அவனுடைய கத்தலில் எதிர் ஸீட்டில் உட்கார்ந் திருந்த பெண்களில் ஒருத்தி சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டு மருண்ட விழிகளோடு அவனை நோக்கினாள்.. திலீபனின் கோபம் அந்தப் பார்வையைக் கண்டதும் பஞ்சாகப் பறந்துவிட்டது.. ஆனால்.. அந்த மான்விழியாளின் பக்கத்தில் அமர்ந்திருந்த இன்னொரு வாயாடிப் பெண் வரிந்து கட்டிக்கொண்டு திலீபனிடம் பதிலுக்கு சண்டைக்கு வந்தாள்..

"ஹலோ சார்.. அமைதியைப் பத்தியெல்லாம் நீங்க பேசாதீங்க.. யூ ஆர் அன்ஃபிட் பார் தட்.."

மான்விழியாளை மயக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்த திலீபனிடம் பறந்தபோன கோபம் மீண்டும் வந்து ஒட்டிக்கொண்டது..

"சின்னப் பெண்ணாக இருந்து கொண்டு என்ன வெல்லாம் பேசுகிறாய்..? நான் யார்ன்னு உனக்குத் தெரியுமா..? யாரைப் பார்த்து அன் ஃபிட் என்கிறாய்..?"

"ஏன்.. உங்களைப் பார்த்துதான் அப்படிச் சொல்கிறேன்.. இப்ப அதுக்கு என்னஙகறீங்க..? இந்த டிரெயினில் நீங்கள்

மட்டும்தான் டிக்கெட் வாங்கிக் கொண்டு வருகிறீங்களா..? நாங்கள் மட்டும் வித்தவுட்டில் வருகிறோமா..? நாங்களும் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொண்டுதான் வருகிறோம் சார்.. எங்களுக்கும் ஃபுல் ரைட்ஸ் இருக்கின்றது... நீங்கள் யாராக இருந்தால் எங்களுக்கென்ன..? நீங்கள் பெரிய அமெரிக்க ஜனாதிபதியாகவே இருங்க.. எங்களுக்கென்ன போச்சு..?"

"அடேங்கப்பா.. என்ன பேச்சு பேசுகிறாய்..? திறந்த வாயை மூடவே மாட்டாய் போல.. உனக்கு மட்டும்தான் ரைட்ஸ் இருக்கிறதா..? எனக்கு இல்லையா..?"

"உங்கள் ரைட்ஸை பாதிக்கும்படி நாங்கள் என்ன செய்தோம்..? உங்கள் வழிக்கு நாங்கள் வந்தோமா..? எங்கள் பேச்சுக்குத்தான் நீங்க வருகிறீங்க.."

"ஏம்மா.. நீ அமைதியாய் இருந்தால் நான் ஏன் உங்கள் பேச்சிற்கு வரப் போகிறேன்..? நீங்கள் ஆடும் ஆட்டத்தில் இந்த கம்பார்ட்மெண்டே கலகலத்துப் போகுதேம்மா.."

"ஏய்.. சார் சொன்னதைக் கேட்டீங்களாடி.. நாம் ஆடுகிறோமாம்.. சார்.. நாங்கள் எல்லோரும் யூத் சார்.. அப்படித்தான் ஆடுவோம்.."

"அப்போ.. நான் என்ன தடியை ஊன்றிக் கொண்டு நடக்கும் தொண்டுக் கிழவனா..?"

"இல்லைதானே.. அப்போ ஏன் எங்களைக் கண்டிக்கறீங்க.. ஒன்று, எங்களுடன் நீங்களும் ஜாயின் பண்ணிக்கொண்டு லூட்டி அடியுங்க.."

"ஏம்மா.. என்னைப் பார்த்தால் லூட்டி அடிப்பவன் போலவா தெரிகிறது.. யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் தெரியுமா..?"

"இதையே எத்தனை தரம்தான் சொல்லுவீங்க சார்.. நீங்கள் யாராயிருந்தால் எங்களுக்கென்னன்னு நான் அப்போதே பதில் சொல்லிவிட்டேன்.. லூட்டி அடிக்க முடியாவிட்டால் எங்கள் லூட்டியையாவது வேடிக்கை பாருங்கள்.."

திலீபனுக்கு சின்ன பெண்களிடம் சரிக்கு சரியாக இறங்கி வாதிட விருப்பமில்லை.. தவிரவும் அவனுக்கு எதிரே

அமர்ந்திருந்த பெண் ஏதோ ஒரு வகையில் அவனைக் காந்தமாய் கவர்ந்தாள்.. அவளுடைய தோழிகளிடம் மல்லுக்கு நிற்க ஏனோ அவனுக்கு மனம் வரவில்லை..

அவன் இருக்கையில் சாய்ந்து அமர்ந்து கொண்டு..

"ஆமாம்.. நீங்களெல்லாம் என்ன படிக்கறீங்க.." என்று அந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டே அவளது தோழியிடம் வினவினான்..

"ஏன் சார்.. உங்கள் பெயர் என்ன பிருத்விராஜனா..?"

"இல்லை.. ஏன் அப்படிக் கேட்கிறாய்..?"

"என்னிடம் கேள்வி கேட்டுக் கொண்டே சம்யுக்தாவை சைட் அடிக்கிறீங்களே.. அதனால்தான் அப்படிக் கேட்டேன்.. இவளைத் தூக்கிக் கொண்டு போகும் திட்டம் ஏதாவது மனதில் இருக்கிறதா சார்.." அந்தத் தோழி அப்பாவி போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள்..

அன்று அந்தத் தோழி கேட்டது போல அப்போதே ஏன் சம்யுக்தாவை தான் தூக்கிக் கொண்டு போக வில்லை என்று பின்னாள்களில் பல முறை நினைத்து திலீபன் வருந்தியிருக்கிறான்..

இந்த அளவிற்கு சம்யுக்தா அவனைப் பாதிக்கக் கூடும் என்பதை மட்டும் அவன் அப்போதே அறிந்திருந்தால் அவளை ரயிலை விட்டு இறங்கியிருக்க விட்டிருக்க மாட்டான்..

ஆனால்.. அதன் தீவிரம் அவனுக்கு அப்போது உறைக்கவில்லை.. அந்தத் தோழி சொன்னதைக் கேட்ட சம்யுக்தா முகம் சிவந்து..

"வாணி.. என்ன இது.. பேசாமல் வா.." என்று அதட்டியதைக் காண அவனுக்கு சுகமாக இருந்தது மட்டும்தான் அவனுக்கு அப்போது நினைவில் இருந்தது..

திலீபனுக்கு எரிச்சலைத் தந்த அந்த ரயில் பயணம் இதமாய் மாறிவிட்டது.. அவன் ஸீட்டில் நன்றாக சாய்ந்து அமர்ந்து சம்யுக்தாவை நேரடியாகப் பார்த்தான்..

"ஏன் சார்.. இவளை இப்படிப் பார்க்கறீங்க..? இவளுக்கு இப்போது பதினேழு வயதுதான் ஆகிறது.. இப்போதுதான்

நானும் இவளும் டிகிரி ஃபர்ஸ்ட் இயரை முடிக்கப் போகிறோம்.." என்றாள் வாணி..

அவள் கூறியதைக் கேட்டு கடகடவென்ற சிரித்தான் திலீபன்.. பயந்துவிட்டது போல பாவனை காட்டினாள் வாணி..

"நாங்கள் அரட்டை அடித்தால் மட்டும் இந்த கம்பார்ட்மெண்டே கலகலத்துப் போய்விட்டதாகக் குற்றம் சொல்லிவிட்டு இப்படி இடிச் சிரிப்பை சிரித்து வைக்கிறீங்களே சார்.. இந்த கம்பார்ட்மெண்டே ஆடிப் போய்விட்டது பாருங்கள்.."

"ஹா.. ஹா.. வாணி.. நீ ஜோக்கடிக்கிறாய்.."

"இதற்குப் பெயர் ஜோக்கா..? சார் சொன்னதைக் கேட்டிங்களாடீ.. நான் ஜோக்கடித்தேனாம்.. ஏண்டி உனக்குச் சிரிப்பு வந்ததா..? ஏய்.. உனக்குச் சிரிப்பு வந்ததாடி.. பாருங்க சார்.. யாருக்குமே சிரிப்பு வரவில்லையாம்.."

திலீபன் இன்னும் அதிகமாகச் சிரித்துக் கொண்டே கைகளை உயர்த்தினான்..

"ஓகே.. நாம் சமாதானமாக போய்விடலாம்.. வாணி.. நீங்கள் அடிக்கும் லூட்டியை நான் வேடிக்கை பார்க்க ஒப்புக்கொள்கிறேன்.. போதுமா.."

"ஹேய்ய்.."

அவர்கள் சந்தோஷக் கூச்சலுடன் திலீபனை சொற்போரில் வெற்றி கண்ட வாணியைக் கட்டிப் பிடித்துக் கொண்டார்கள்.. திலீபனோ ரகசியமாய் விழியுயர்த்திப் பார்த்துக் கொண்டிருந்த சம்யுக்தாவையே பார்த்துக் கொண்டிருந்தான்..

"ஏய்.. வாங்கடி.. ஆளுக்கு ஒரு சீட்டை எடுங்க.."

"எடுத்து..?"

"அதைப் பிரித்துப் படிக்க வேண்டும்.."

"படித்து..?"

"ஏண்டி.. நீ குறை மாதத்தில் பிறந்தாயா..? எதையும் அரைகுறையாகத்தான் கேட்பாயா..? அந்த சீட்டில்

உள்ளதைப் படித்துவிட்டு அதில் எழுதியுள்ளது போல் செய்ய வேண்டும்.."

"ஹோய்.."

அவர்கள் அனைவரும் உற்சாகத் கூச்சலுடன் ஆளுக்கு ஒரு சீட்டை எடுத்துக் கொண்டார்கள்..

"ஏய்.. நான் ஆட வேண்டுமாம்.. ஆடவா..?"

"ஐயோ.. வாணி.. நான் ஓடவா..?"

"எங்கேயடி ஓடுவாய்..? டிரெய்னில்ல ஓடிக்கிட் டிருக்கு.."

"அப்போ நான் என்னதான் செய்வது..?"

"உனக்கு இவள் ஆடுவதைப் பார்க்கக்கூடாது.. அவ்வளவுதானே.. கண்களை இறுக மூடிக்கொள்.."

அந்தப் பெண் ஆடி முடித்தாள்.. அனைவரும் கையை வாய்மேல் குவித்துக் கொண்டு..

"ஊய்ய்.." என்றார்கள்..

"நான் ஜோக் சொல்ல வேண்டுமாம்.."

"ஆனால், எங்களையெல்லாம் சிரிக்கச் சொல்லி கொடுமைபடுத்தக் கூடாது.."

அந்தப் பெண் அழாக்குறையாய் ஜோக்கை சொல்லி முடித்தாள்.. எல்லோரின் கைகளிலும் இருந்த சீட்டுகளை படித்துவிட்டு அதில் உள்ளதைச் செய்ய.. சம்யுக்தாவின் கையில் இருந்த சீட்டில் என்ன இருக்கும் என்று அறிய திலீபனுக்கு ஆவலாக இருந்தது..

"வாணி.. உனக்கென்னடி போட்டிருக்கு.."

"மிமிக்ரி செய்ய வேண்டுமாம்.."

"அதற்கு உனக்குச் சொல்லியா தரவேண்டும்..?"

எல்லோரும் கைதட்ட.. எழுந்து நின்ற வாணி.. திலீபனின் குரலில்..

"கொஞ்ச அமைதியாய் இருக்க மாட்டீங்களா.." என்று கத்த.. திலீபன் அசந்துபோய் கைதட்டிவிட்டு.. வாணிக்கு கை கொடுத்தான்..

"யூ ஆர் வெரி எபிஸியெண்ட்.. ஸோ கிளவர்.."

"தேங்க்யூ சார்.."

சம்யுக்தாவின் கையிலிருந்த சீட்டை அவள் பிரித்தாள்..

"பாட வேண்டுமாம்.."

"அப்போ பாடு.."

சம்யுக்தா ஏன் அந்தப் பாடலைப் பாடினாள் என்று பின்னாளில் பல முறை திலீபன் தனக்குள் கேட்டுக் கொண்டிருக்கிறான்..

அந்த முன்னிரவு நேரத்தில், ரயிலின் தொட்டில் ஆட்டுவதைப் போன்ற சுகமான ஆட்டத்தில், மெல்ல விழியுயர்த்தி அவனைப் பார்த்துக் கொண்டு அப்படியொரு பாடலை அவள் பாடுவாள் என்று கொஞ்சமும் திலீபன் எதிர்பார்த்திருக்கவில்லை..

"உன்னை நான் சந்தித்தேன்..

நீ ஆயிரத்தில் ஒருவன்..

என்னை நான் கொடுத்தேன்..

என் ஆலயத்தின் இறைவன்..

ஆலயத்தின் இறைவன்.."

திலீபனின் உடலில் ஒரு புதுவித ரசாயன மாற்றம் நிகழ்ந்தது.. அவன் மனதில் அதுவரை அவன் உணர்ந்திராத கிளர்ச்சி தோன்றியது..

"பொன்னைத்தான் உடலென்பேன் - சிறு

பிள்ளைபோல் மனமென்பேன்..

கண்களால் உன்னைக் கவர்ந்தேன் - தொட்ட

கைகளால் நான் மலர்ந்தேன்..

உள்ளத்தால்.. வள்ளல்தான்..

ஏழைகளின் தலைவன்.."

அவளது பார்வை அவன் மீதே படிந்திருந்தது.. அது எதையோ அவனிடம் சொல்லத் துடித்தது.. அவளது தவிப்பை அவனுக்கு உணர்த்தியது..

"எண்ணத்தால் உன்னைத் தொடர்ந்தேன் - ஒரு

கொடிபோல் நெஞ்சில் படர்ந்தேன்..

சொல்லத்தான் அன்று துடித்தேன் - வந்த
நாணத்தால் அதை மறைத்தேன்..
மன்னவா..! உன்னை நான்..
மாலையிட்டால் மகிழ்வேன்.."

யாரென்று ஊர் பெயர் தெரியாத பெண்ணொருத்தி ரயில் பயணத்தின்போது இப்படியொரு பாடலைத் தன்னைப் பார்த்துப் பாடி வைப்பாள் என்று கொஞ்சம் கூட எதிர்பார்த்திராத திலீபனின் உடல் சூடேறியது..

சம்யுக்தாவின் பாடலோடு அந்தப் பெண்களின் அரட்டைக் கச்சேரி முடிந்துவிட.. அவர்கள் எல்லோரும் படுத்துத் தூங்க ஆரம்பித்தனர்.. திலீபனும் சம்யுக்தாவும் எதிர் எதிர் இருக்கைகளில் சரிந்து படுத்துக் கொண்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர்..

எதையும் வேகமாக செய்து பழக்கப்பட்ட திலீபன் அன்று ஏன் அப்படி அமைதி காத்தான் என்பது அவனுக்கே விளங்காத புதிர்..

சம்யுக்தாவிடம் அவன் பேசியிருக்கலாம்.. அவளது முகவரியை அறிந்து கொண்டிருக்கலாம்.. அவளது கல்லூரியின் பெயரையாவது கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கலாம்..

இப்படி ஆயிரம் 'இருக்கலாம்'களை அவன் பிற்காலத்தில் எண்ணி நொந்து போயிருக்கிறான்.. ஆனால், அன்றைய இரவில் எதுவும் பேச முடியாமல் ஒருவித மோன நிலையில் அவன் ஆழ்ந்து போனது மட்டுமே நிஜம்..

அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் மிக இளம்வயதில் இருக்கும் பெண்ணுக்கேயுரிய புதிதாய் பூத்த மலரின் தன்மை அவளது முகத்தில் தெரிந்தது.. அவனது பார்வையை உணர்ந்து விழி மூடிக்கொண்டபோது குடை போன்ற அடர்ந்த அந்த இமைகளின் அமைப்பு.. அவனைக் கவர்ந்தது.. நிலவுமுகத்தில் நீள்வடிவமாய் இருந்த பெரிய கண்களில் காந்தப் பார்வையில் அவன் விழுந்து விட்டான்..

முடிவேயில்லாமல் அந்த ரயிலில் பயணம் செய்ய அவர்களால் முடியுமா என்ன..? ஏதோ ஒரு ஊரில் அவர்கள்

அனைவரும் இறங்க ஆயத்தமாக.. திலீபன் பதறிப் போய் எழுந்து அமர்ந்தான்..

விளக்கின் வெளிச்சத்தில் தோழியரின் மத்தியில் எழுந்து சென்று கொண்டிருந்தவளின் முகத்தில் பிரிவின் தவிப்புத் தெரிந்தது..

மற்றவர்களின் முன்னிலையில் அவளுடன் பேச முடியாமல் ரயில் பெட்டியின் வாசலுக்கு அவன் ஓடி வந்து நின்றபோது.. அவள் மற்ற தோழிகளுடன் பிளாட்ப்பாரத்தில் இறங்கி விட்டாள்..

தானும் இறங்கிவிடலாமா என்று திலீபன் யோசித்துக் கொண்டிருந்தபோது ரயில் கிளம்பிவிட்டது..

அவசரமாய் அவள் அவனை ஏறிட்டுப் பார்த்த அந்த கடைசி வினாடியை அதன்பின் ஒருபோதும் திலீபன் மறந்ததில்லை..

அந்தக் காட்சி அப்படியே உறைந்துபோய் அவன் நெஞ்சத்தில் பொக்கிஷமாய் பதிந்துவிட்டது..

அந்தக் கடைசி வினாடியில் அவள் இதழ் விரித்து அவனைப் பார்த்துச் சிரித்தாள்.. திலீபன் ஸ்தம்பித்துப் போய் நிற்கையில் அந்தச் சிரிப்பு மாறாமலேயே தன் கையை அசைத்து விடைகொடுத்தாள்..

அடுத்த ஆறு வருடங்களில் திலீபன் பல பெண்களைச் சந்தித்தான்.. எவராலும் அவள் தட்டிய மனக்கதவை தட்ட முடியவில்லை.. அவளைவிட அழகிகளை பார்த்தான்.. அவளுடைய பார்வை உண்டு பண்ணிய கிளர்ச்சியை எவராலும் தர முடியவில்லை.. பலருடன் பேசிப் பழகினான்.. அவள் பாடல் ஈர்த்ததைப் போல எவராலும் அவனை ஈர்க்க முடியவில்லை..

வெளியே தெரியாமல் டிடெக்டிவ் ஏஜென்ஸியின் உதவியைக்கூட அவன் நாடிவிட்டான்.. பலன் பூஜ்யம் தான்.. யாராலும் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை..

"என்ன சார் இது.. ஏதாவது ஒரு நுனியைக் காட்டுங்கள்.. நாங்கள் மொத்தத்தையும் கண்டு பிடிக்கிறோம்.. எதுவுமே

இல்லாமல் எப்படி சார் கண்டு பிடிப்பது..?" என்று கேட்டார்கள்..

எதுவும் இல்லையா..? இரவு பகலாய் திலீபனை பைத்தியமாக அடிக்கும் அவளது பார்வை இல்லையா..? ஓரவிழியில் அவனைப் பார்த்துக் கொண்டே அவள்

பாடிய பாடல் இல்லையா..? பின்னிரவின் மெல்லிய வெளிச்சத்திலே ரயிலடியில் நின்று கடைசியாய் அவள் இதழ் விரித்து சிரித்த சிரிப்பு இல்லையா..? அவனுக்கே அவனுக்காக அவள் விடை கொடுத்து கை அசைத்த கை அசைவு இல்லையா..?

இத்தனையும் இருக்கிறதென்று வெளியில் சொன்னால் அவனைப் பைத்தியக்காரன் என்பார்கள்.. அவ்வளவு பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை உருவாக்கி வைத்திருப்பவனின் மனதில் முகவரி தெரியாத ஒரு முகம் பதிந்திருப்பதை அறிந்தால் விழி உயர்த்திப் பார்த்து பரிகசிப்பார்கள்..

திலீபன்.. தன் மன உணர்வுகளை தனக்குள் புதைத்துக் கொண்டான்.. எத்தனை பெண்களை பார்த்தாலும் எவரையும் பிடிக்கவில்லையென்று சொல்லி பார்த்தசாரதியையும் குந்தவையையும் தலையால் தண்ணீர் குடிக்க வைத்தான்.. பிடிவாதமாக திருமணத்தை மறுத்து விட்டான்..

அவளைத் திரும்பவும் பார்ப்போமென்ற நம்பிக்கை அவனுடைய அடிமனத்தின் ஆழத்தில் புதைந்து கிடந்தது.. அப்படிச் சந்திக்க முடியாமல் போய்விட்டால் மணவாழ்வை தவிர்த்துவிட வேண்டும் என்ற வைராக்கியம் வேர் விட்டு விருட்சமாய் வளர்ந்து நின்றது..

'மன்னவா.. உன்னை நான்..

மாலையிட்டால் மகிழ்வேன்..'

என்று அன்று பாடினாளே.. அவளை விட்டு வேறு ஒருத்தி தனக்கு மாலை சூடுவதா என்ற எண்ணம் அவன் மனதில் அசையாமல் நிலைகொண்டிருந்தது..

திசைதோறும் தேடியபோது கிடைக்காதவள் இன்று தேடாமல் இருக்கும்போது யதேச்சையாய் அவன் முன் வந்து நிற்கிறாள்.. அதுவும் எப்படி..? மாற்றானுக்கு மாலைசூடப் போகும் பெண்ணாக.. இதயம் கொந்தளிக்க திலீபன் நிமிர்ந்தான்.. இதை அவன் கொஞ்சம்கூட எதிர் பார்க்கவில்லை..

மேடையில் இருந்த நாற்காலியில் அவளை உட்கார வைத்தார்கள்.. இது அவளா..? இருக்காது.. அவளாக இருக்க முடியாது.. இருக்கக் கூடாது..

திலீபன் உன்மத்தம் பிடித்தவனாய் மேடையை வெறித்துக் கொண்டிருக்க.. யாரோ ஒரு பெண் சப்தமாக..

"சம்யுக்தா.. கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்.. வீடியோவுக்கு முகம் தெரியவில்லையாம்.." என்று கூறினாள்..

'அவளேதான்..' திலீபனின் கண்கள் சிவந்தன..

இதற்காகவா அவன் இத்தனை நாள் காத்திருந்தான்..? அவளுக்கு அட்சதை போட்டு வாழ்த்தவா அந்த மண்டபத்திற்கு வந்து நின்றான்..?

'இல்லை..' என்றது அவன் மனம்.. எப்படி அவன் ஏறிய அதே ரயிலில் அவளும் ஏறிப் பிரயாணம் செய்ய கடவுள் கட்டளையிட்டாரோ அதைப்போல அவளுடைய திருமணம் முடியும் முன்னால் அவளை திலீபனுக்கு அடையாளம் காட்டியதும் கடவுளின் செயல் என்றே அவன் நம்பினான்..

இன்னும் திருமணம் முடியவில்லை.. நடந்திருப்பது நிச்சயதார்த்தம்தான்.. மணமேடைக்கு வந்தால்கூட அவளைக் கடத்திவிடும் காதல் அவனுக்குள் கனன்று கொண்டு இருக்கும்போது மற்றவன் எப்படி அவளுக்கு மாலை சூட முடியும்..? திலீபன் அது நடக்க ஒரு நாளும் விடமாட்டான்..

"சாப்பிட வாங்க.." சந்தானம் அழைத்தார்..

"இல்லை.. நேரமாகி விட்டது.." என்று அபிஷேக் எழுந்து கொள்ள முயல..

"வாடா சாப்பிட்டு விட்டுப் போகலாம்.." என்ற படி திலீபன் சாப்பிடும் இடத்தை நோக்கி நடந்தான்..

'இது திலீபன்தானா..' என்று அபிஷேக்கிற்கு சந்தேகம் வந்துவிட்டது..

"என்னடா.."

"எனக்குப் பசிக்கிறது.."

"நீ இதுமாதிரி இடங்களில் எல்லாம் சாப்பிட மாட்டியே.."

"பழகிக் கொள்ள வேண்டியதுதான்.."

"உன்னைப் புரிந்துகொள்ளவே முடியவில்லைடா.."

"ஹா.. ஹா.."

"என்னவோ போ.. ரொம்ப நாளைக்குப் பிறகு இப்போதுதான் நீ சிரித்து நான் பார்க்கிறேன்.."

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த இடத்திலிருந்து மேடை நன்றாகத் தெரிந்தது.. வரிசையாய் மேடையேறி சந்தனத்தை தொட்டு சம்யுக்தாவின் கன்னங்களில் தடவி பெண்கள் நலங்கு வைப்பதை பார்த்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான் திலீபன்.. அவன் கண்களில் காதல் இருந்தது.. கோபம் தெரிந்தது.. கனல் எரிந்தது..

# 6

கைகழுவிக் கொண்டிருந்த அபிஷேக்கிடம்..

"ஒரு நிமிடம் பொறுடா.. பாத்ரூம் போய்விட்டு வந்துவிடுகிறேன்.." என்று சொல்லிவிட்டு நகர்ந்தான் திலீபன்..

மெதுவாக மணமகள் இருந்த அறைப் பக்கம் வந்தான்.. உள்ளே சில பெண்கள் பேசிக் கொண்டிருக்க.. சம்யுக்தா நடுவில் அமர்ந்திருந்தாள்..

"எல்லோரும் சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டால் வேலை முடியுமாம்.. இரண்டு சம்பந்தகாரர்களும் இந்த ஒரு விஷயத்தில் ஒன்றாய் சேர்ந்துகிட்டு சத்தம் போடுகிறாங்க.." என்றபடி நடுத்தர வயதுப் பெண்ணொருத்தி அங்கே நுழைந்தாள்..

"அதுவும் சரிதான் ஆனால்.. சம்யுக்தாவின் பக்கத்தில் யார் இருப்பது..?" என்று கேட்டாள் அங்கிருந்த பெண்ணொருத்தி..

"இதோ காவ்யா இருக்கிறாளே.. இவளைப் பக்கத்தில் உட்கார வைப்போம்.."

"என்னடி காவ்யா.. சம்யுக்தாவின் பக்கத்தில் இருக்கிறாயா..?" அந்தப் பெண்களின் கூட்டம் வெளியேறி விட.. அறைக்குள் சம்யுக்தாவும் அந்தக் காவ்யாவும் மட்டும் இருந்தனர்..

'காவ்யாவை எப்படி வெளியேற்றுவது..'

யோசனையுடன் சுற்று முற்றும் பார்த்தவன். அங்கே விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனை அழைத்து..

"அதோ.. கல்யாணப் பெண்ணின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாளே காவ்யா அக்கா.. அவளை அவளுடைய அம்மா கூப்பிட்டதாகப் போய் கூப்பிடு.."

"ஏன்.. நீங்களே போய் கூப்பிடுங்க.."

"பையனாக இருந்தும் என் நிலை புரியாமல் பேசுகிறாயேடா.."

"உங்கள் நிலைமைக்கு என்னவாம்..?"

"நீ குட்டிப் பையன்.. நான் வளர்ந்த பையன்டா.."

"அங்கிள்.. இது அநியாயம்.. நீங்கள் என்ன பையனா..?"

"அங்கிளா..? உனக்கெல்லாம் அங்கிள் ஆகும் அளவிற்கு எனக்கு ஒன்றும் வயதாகி விடவில்லை.. நான் போய் சின்ன வயதுப் பெண்ணிடம் பேசினால் தப்புடா.. அதுவே நீ பேசினால் அது கரெக்ட்.."

திலீபன் பேசிய விதம் அந்தச் சிறுவனைக் கவர்ந்து விட்டது.. அவன் அறைக்குள் சென்று காவ்யாவை அழைக்க.. அவள் வெளியேறினாள்.. அடுத்த நொடி திலீபன் உள்ளே நுழைந்தான்.. யாரென்று நிமிர்ந்து பார்த்த சம்யுக்தா பதறி எழுந்தாள்.. திலீபன் அறைக் கதவைச் சாத்தித் தாழிட்டான்.. சம்யுக்தா பயந்து போய் கத்த வாய்

திறந்தபோது அவளது வாய் பொத்தி சுவரோடு அவளைச் சாய்த்து நிறுத்தினான்..

"கத்தாதே.. உன்னிடம் நான் பேச வேண்டும்.. அதை விட்டுவிட்டு கத்திக் கூச்சல் போட்டாயானால் அசிங்கம் உனக்குத்தான்.. எனக்கு இல்லை.. நான் கதையை மாற்றிவிடுவேன்.. கல்யாண மாப்பிள்ளை என்னிடம் வேலை செய்பவன்.. நான் சொல்வதைத்தான் நம்புவான்.. புரிந்ததா..?"

அவள் மிரட்சியுடன் விழிக்க.. அவளது வாயைப் பொத்திய தன் கரத்தை விலக்கிக் கொண்டான் திலீபன்.. அவளது பார்வை அவனை என்னவோ செய்தது..

"யார் நீங்க..?"

"நீ யார் என்பதை நான் உன்னைப் பார்த்த அடுத்த நொடியிலேயே கண்டுபிடித்து விட்டேன்.. உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை.."

சம்யுக்தா திகைத்துப் போனாள்.. அவன் முகத்தையே எதையோ தேடுவதைப் போல் பார்த்தாள்..

"நான் யாரென்று தெரிகிறதா..? ஒரு சின்னக் க்ளூ கொடுக்கிறேன்.. கண்டுபிடிக்கிறாயா..?"

"ம்ம்ம.."

"ஒரு நாள் இரவு.. ரயில் பயணம்.. ஒரு பாட்டு.. சில பார்வை.. கடைசியாய் ஒரு சிரிப்பு.. கையசைப்பு.."

சம்யுக்தாவின் விழிகளில் மின்னல் வெட்டியது.. அவள் அவனை இனம் கண்டுகொண்டாள்..

"நீங்களா..!"

திலீபன் கண்களை மூடித் திறந்தான்..

'இவள் மறக்கவில்லை.. எங்கே எனது காதல் கானல் நீராகி விடுமோ என்று பயந்துபோனேன்.. இவள் என்னைக் கைவிடவில்லை.. காப்பாற்றிவிட்டாள்..'

"நானேதான்.."

"நீங்கள் எப்படி இங்கே..?"

"நான் பிரதீப்பைத் தேடி வந்தேன்.."

சம்யுக்தா சங்கடத்துடன் மௌனமானாள்.. ஆறு வருடங்களுக்கு முன்னால் அவள் முகத்தில் தெரிந்த அந்த அறியாமை கலந்த குழந்தைத்தனமான இளமையின் மெருகு.. இப்போது பக்குவப்பட்டு ஒரு தேவதையின் அழகோடு இருந்தாள்..

"நான் உங்களை இங்கே.. இப்போது.. இப்படிப் பார்ப்பேன் என்று நினைக்கவேயில்லை.."

"ம்ம்ம்.. ஆனால்.. என்னைப் பற்றி நினைக்கவே யில்லையா..?"

சம்யுக்தா பதில் சொல்லாமல் மௌனித்தாள்.. என்னவென்று சொல்வது..? இளம்வயதில் கண்ணுக்கு முன்னால் கருத்தைக் கவரும் வகையில் ஒருவனை சந்தித்தபோது பக்குவப்படாத இளம்வயது மனது அலைபாய்ந்தது..

அவளுக்கும் பல நாள்கள் அந்த ரயில் பயணத்தின் நினைவு இருந்தது.. என்றேனும் ஒரு நாளில் அவன் அவளைத்தேடி வந்துவிடுவான் என்ற நம்பிக்கை இருந்தது..

ஆனால்.. அவன் வரவேயில்லையே.. நாளாக ஆக அவனைப் பற்றிய கனவு மறைந்து போய்விட்டது.. அவள் யதார்த்த வாழ்விற்கு திரும்பி விட்டாள்..

பிரதீப் - அவளுடைய வீட்டினர் அவளுக்காக தேர்ந்தெடுத்திருக்கும் மாப்பிள்ளை.. எம்.எஸ்ஸி. முடித்தவுடன் அவளுக்குத் திருமணம் முடித்துவிட வேண்டுமென்று ஏற்கெனவே பேசி வைத்திருந்த வீட்டினர்.. நினைத்தபடி தேடி வைத்திருக்கும் மாப்பிள்ளை..

# 7

"இதோ பாருங்கள் சார்.."

"என் பெயர் திலீபன்.."

"உங்கள் பெயர்கூட எனக்குத் தெரியாது.."

"தெரிந்து கொள்ளாமல் விட்டது உன் தவறு.. நான் உன் பெயரை தெரிந்து கொள்ளவில்லையா..?"

ஊர் பெயர் தெரியாத ஒருவன் ஏதோ ஒரு ரயில் பயணத்தில் சந்தித்துவிட்ட உரிமையில் இப்படி நிச்சய தார்த்தம் நடக்கும் இடத்தில் கலாட்டா செய்வதா என்று சம்யுக்தாவிற்கும் கொதிப்பு வந்துவிட்டது.. எனவே.. திலீபனின் முகம் பார்த்து நிதானமாகக் கேட்டாள்..

"தெரிந்து வைத்துக் கொண்டு என்ன செய்தீர்கள்..? என்னைத் தேடி வந்துவிட்டீர்களா.."

"தேடவில்லையென்று உனக்குத் தெரியுமா..? உன் பெயரைத் தவிர அன்றைய இரவின் நிழலைத் தவிர வேறு எதை எனக்கு நீ விட்டுப் போனாய்..? நான் அடையாளம் கண்டுபிடித்து உன்னைத் தேடிவ வந்துவிட..?"

"தெரிகிறது இல்லையா..? ஒருவரை ஒருவர் தேடிக் கண்டுபிடிக்க நமக்குள் எந்தவித பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை.. அப்படியிருக்கையில் எந்த தைரியத்தில் என் கல்யாண நிச்சயதார்த்தத்தில் வந்து கலாட்டா பண்ணுகிறீர்கள்..?"

திலீபனின் கோபம் கரையுடைக்க பொங்கி யெழுந்தது.. அவன் கண்கள் சிவந்தன.. அவன் நினைவில் நின்ற நிமிடங்கள் அவனுக்கு நினைவுக்கு வந்தன.. அவன்.. அவளைத் தேடிக் களைத்த ஆறு வருடங்களும் அவன் கண்முன் ஆடின..

அவை அத்தனையும் விழலுக்கு இறைத்த நீரா..? வீணான ஒன்றா.. அவளுடைய கண்கள் பேசிய கதை பொய்யா..? அதை நினைத்து பித்தாய்.. பேயாய் அலையும் அவனுடைய நிலையைக் கண்டு அவள் எள்ளி நகைக்கிறாளா..?

சம்யுக்தாவை திலீபன் பார்த்த பார்வையில் கடுகளவும் மரியாதை இல்லை..

"வாயினால் பேசவில்லைதான்.. உன் மனச் சாட்சியைத் தொட்டுச் சொல்லு.. கண்களால் நீ என்னிடம் பேசவில்லை..?"

சம்யுக்தாவின் வாய் அடைத்துப் போனது.. அவள் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.. நடுங்க ஆரம்பித்த கைகளை முந்தானைச் சேலையில் மறைத்துக் கொண்டாள்..

"என்ன பதிலைக் காணோம்..?"

"சார்.. நீங்கள் என்னைவிட படிப்பிலும் பணத்திலும் அனுபவத்திலும் பெரியவர்.. உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை.. ஆறு வருடங்களுக்கு முன்னால் எனக்கு வெறும் பதினேழு வயதுதான்.."

"அதற்கு என்ன..?"

"நல்லது கெட்டது தெரியாத வயது சார்.."

"இப்போது நீ என்ன சொல்ல வருகிறாய்..? என்னைக் கெட்டவனென்று சொல்ல வருகிறாயா..?"

"ஐயோ சார்.. நான் அப்படிச் சொல்லவில்லை.. முன்பின் தெரியாதவங்களைப் பார்த்து அது வந்து நான் என்ன சொல்ல வருகிறேனென்றால்.. அது வந்து.."

"சைட் அடித்திருக்கக் கூடாது என்கிறாயா..?"

"இப்படி நேரடியாய் பேச எனக்கு வராது சார்.."

"ஆனால், கள்ளப் பார்வை பார்க்க மட்டும் வரும்.. யாருக்கும் தெரியாமல் சிரித்துக் கொண்டே டாட்டா காட்ட வரும்.."

"அது ஒரு பெரிய தப்பா..?"

"இதோ பார்.. அது சரியா.. இல்லை தப்பா என்பதல்ல என் பிரச்னை.. அந்த ஒரு நாள் இரவிலிருந்து உன்னை நான் ஒரு வினாடிகூட மறந்ததில்லை.. அதை முதலில் தெரிந்து கொள்.."

சம்யுக்தா திகைத்துப் போனாள்.. அவள் இதை கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.. அவளுக்கும் சில நாள் அந்த மயக்கம் இருந்தது உண்மைதான்.. தினமும் அவனை நினைத்துக் கொள்வாள்.. நாளடைவில் மறந்து விட்டாள்..

ஆனால், அவன் மறக்கவில்லையாமே.. அவளையே நினைத்துக் கொண்டு தேடிக் கொண்டிருந்தானாமே.. இது எப்படிச் சாத்தியம்..?

"அதற்காக இப்படி வந்து இப்படிப்பட்ட நேரத்தில் கலாட்டா பண்ணலாமா..?"

"வேறு என்ன செய்யச் சொல்கிறாய்.. அன்று பார்த்தவளை இன்றுதான் திரும்பவும் பார்க்கிறேன்.. ஊடே ஆறு வருடங்கள் ஓடிவிட்டன.. பார்த்த அடுத்த நொடியிலிருந்து உன்னிடம் பேசிவிடத் துடித்துக் கொண்டிருக்கிறேன்.."

"பேசுவதா.. என்னிடம் நீங்கள் பேச என்ன இருக்கிறது..?"

"எவ்வளவோ இருக்கிறது..? இனி நான் உன்னை நழுவவிட மாட்டேன் சம்யுக்தா.. உன்னை யாருக்கும் விட்டுக் கொடுக்கவும் மாட்டேன்.."

அவனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்டதும் கதிகலங்கிப் போனாள் சம்யுக்தா..

'இது என்ன.. இவன் இப்படி உளறுகிறான்.. யாராவது இதைக் கேட்டுவிட்டால் என்ன ஆவது..?'

"சார்.. உங்களைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன்.."

"கும்பிட்டுக் கொள்.."

"தயவுசெய்து என்மேல் கருணை காட்டுங்கள்.."

"காதலையே காட்டுகிறேன்.."

"இம்சை செய்யாதீர்கள் சார்.."

"யார்..? நான் உன்னை இம்சை செய்கிறேனா..? நல்ல கதையாய் இருக்கே.. சும்மா இருந்தவனை சைட் அடித்து உசுப்பி விட்டு ஆறு வருஷமாய் எங்கேயிருக் கிறாய் என்று தெரியாமல் கண்ணாமூச்சி காட்டி என்னை இரவும் பகலும் இம்சித்தவள் நீ.. நான் உன்னை இம்சை செய்வதாய் என் மேல் பழியைப் போடுகிறாய்..."

இவன் என்னதான் செய்ய உத்தேசித்திருக்கிறான் என்ற பயத்தில் சம்யுக்தாவிற்கு நா உலர்ந்து விட்டது..

# 8

சம்யுக்தாவின் அப்பா பலராமன் கண்டிப்புக்குப் பெயர் போனவர்.. ஸ்டேட் கவர்ன்மெண்டில் அதிகாரியாய்

பணிபுரிபவர்.. சம்யுக்தாவையும் அவளுடைய அண்ணன் சந்தோஷையும் கட்டுக்கோப்பாக வளர்த்தவர்..

சந்தோஷ்.. சம்யுக்தாவைவிட எட்டு வயது மூத்தவன்.. கல்லூரி லெக்சரர்.. அதனால் அவனுக்கு முதலில் திருமணம் செய்து வைத்து பேரன் ராகுலையும் பார்த்து விட்டார்..

"சந்தோஷ்.. கல்யாணம் பண்ணிக்கிட்டோம்.. குடும்பப் பொறுப்பிலிருந்து கழன்று கொள்வோமு'ன்னு நினைக்கக் கூடாது.. சம்யுக்தாவின் கல்யாணப் பொறுப்பு உன்னையும் சேர்ந்தது.." என்ற கண்டிப்புடன் அவர் கூறியபோது..

"அது என்ன அப்பா அப்படி ஒரு வார்த்தையைச் சொல்லிட்டீங்க.. சம்யுக்தாவின் கல்யாணம் மட்டுமா என்னைச் சேர்ந்தது..? கடைசி வரை இந்தக் குடும்பத்தின் மூத்த மகனாக இருந்து பொறுப்பாக குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளும் கடமையும் என்னைச் சேர்ந்தது அப்பா.." என்று உடனடியாகப் பதில் கூறினான் சந்தோஷ்..

இதுதான் பலராமன் வளர்த்த வளர்ப்பின் அடையாளம்.. சந்தோஷின் மனைவி தான்யா.. எப்படியாவது கணவனை தன் கட்டுக்குள் கொண்டு வந்து தனிக்குடித்தனம் போய்விடப் படாதபாடு பட்டாள்..

உன் கட்டுக்குள் வேண்டுமானால் வருகிறேன்.. ஆனால், தனிக்குடித்தன ஆசையை மட்டும் வைத்துக் கொள்ளாதே என்று சந்தோஷ் பிடிவாதமாக இருந்து விட.. வேறுவழியின்றி தான்யா போராட்டத்தைக் கைவிட்டு அந்த குடும்ப ஜோதிக்குள் தானும் ஐக்கியமாகி விட்டாள்.

சம்யுக்தாவின் தாய் பூரணி.. அதிர்ந்து ஒரு வார்த்தை பேசத் தெரியாத சாது.. மற்றவர்களின் சிறு கேலிப் பேச்¡க் கேட்க நேர்ந்தாலும் அவள் முகம் வாடிவிடும்..

இப்படிப்பட்ட குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சம்யுக்தாவின் திருமண நிச்சயத்தின்போது அவளின் அறைக்குள் வந்து கதவை மூடித் தாழிட்டுவிட்டு ஒருவன் அவளை மிரட்டுவதை இந்த ஊர் அறிந்தால் என்ன சொல்லும்..? கண்.. காது.. மூக்கு.. வைத்து கதை கட்டிவிடாதா..?

அவளுடைய குடும்ப கௌரவம் காற்றில் பறந்துவிடாதா..? பூரணி உயிரையே விட்டு விடுவாள்..

நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் நடுங்கிய சம்யுக்தா.. அவனிடம் தன்மையாப் பேசிப் பயனில்லை என்று ஆன பின்பு வேறுவழியின்றி வன்மையாகப் பேசினாள்..

"என்ன சார்.. என் இடத்திற்கு வந்து என்னையே மிரட்டுறீங்களா..?"

"இங்கே பாருடா.. பூ ஒன்று புயலாகி விட்டது.. பேசு சம்யுக்தா பேசு.. உன் தேனிலும் இனிய வாய் மொழிகளைக் கேட்க ஓடிவந்த என்னிடம் தேன்போல் பேசு.."

"ப்ச்சு.. இந்த செந்தமிழ் டயலாக்கையெல்லாம் வேறு யாரிடமாவது வைத்துக் கொள்ளுங்கள்.."

"இப்படிச் சொல்லிவிட்டால் எப்படி..? நீதானே என்னைப் பார்த்துச் சிரித்து கை அசைத்தவள்.. வேறு யாரும் அப்படிச் செய்யவில்லையே.. அப்புறம் எப்படிம்மா வேறு யாரிடமும் இதையெல்லாம் நான் வைத்துக் கொள்ள முடியும்..?"

"நான் போலீஸைக் கூப்பிடுவேன்.."

"கூப்பிடு.. கூப்பிட்டு என்ன சொல்வாய்..?"

"நீங்கள் வேண்டுமென்றே என்னிடம் கலாட்டா பண்ணுகிறீங்கன்னு சொல்லுவேன்.."

"நான் ஏற்கெனவே உன்னிடம் சொல்லிவிட்டேன்.. நான் பிளேட்டை மாற்றிப் போடுவேன் என்று.."

"என்ன சொல்வீங்க..?"

"ஓரளவு உண்மையைச் சொல்லுவேன்.."

"ஓரளவு உண்மையா..?"

"ஆமாம்.. நீ காதலித்து என்னைக் கைநழுவி விட்டாய் என்று சொல்லுவேன்.. நியாயம் கேட்பேன்.."

"இது பொய்.."

"பாதி மெய்.."

"நான் எப்போது உங்களைக் காதலித்தேன்..?"

"எப்போதென்று உனக்கு நினைவில்லையா..?"

திலீபனின் கூர்மையான பார்வை அவளைக் குற்றம் சாட்டியது.. அவள் தலைதாழ்த்திக் கொண்டாள்.. மணப்பெண் அலங்காரத்தில் தோளின் இருபுறமும் பூச்சரிய நெற்றிச் சுட்டி லேசாக பிறண்டு விழ.. அவள் தலைதாழ்த்தி நின்ற கோலம்.. தாமரைப் பூ ஒன்று தலைதாழ்த்தி நின்றதைப் போல இருந்தது..

"சார்.. அது விளையாட்டுத்தனமான நிகழ்வு.."

"உனக்கு அது விளையாட்டு.. எனக்கு அப்படி யில்லை.."

"எனக்குக் கல்யாணம் முடிவாகிவிட்டது.."

"இன்னும் நடக்கவில்லை.. அது என்னுடன்தான் நடக்கும்.."

"நடக்க முடியாததைப் பேசாதீர்கள்.."

"நான் நடத்திக் காட்டுகிறேன்.."

"எப்படியோ செய்து கொள்ளுங்கள்.. இப்போது இந்த அறையை விட்டு வெளியே போங்க.. யாராவது பார்த்தால் என்னைத் தவறாக நினைத்துக் கொள்வாங்க."

"இப்படி நினைப்பவள் எப்படி அந்த இரவில் தூங்காமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாய்.."

'சுளீர்' என்ற சாட்டையடி போல விழுந்தது திலீபனின் வார்த்தைகள்..

# 9

என்றோ ஒரு நாள் செய்த சிறு செயல் இப்படி ஒரு வினையாய் வந்து முடியும் என்று சம்யுக்தா கொஞ்சம்கூட எதிர்பார்த்திருக்கவில்லை..

இப்போதும்கூட அதை அறியாமல் செய்த பிழை என்று அவளால் நினைக்க முடியவில்லையென்ற நிஜம் அவளது நெஞ்சத்தை சுட்டது..

அன்றைய இரவுநேர ரயில் பயணத்தில் அவன் இருந்த பெட்டியில் அவர்கள் ஏறி அமர்ந்தபோது.. வாணி அவள் காதுகளில் கிசுகிசுத்தாள்..

"ஏய்ய்.. செம ஸ்மார்ட் அண்ட் ஹேண்ட்சம்டி இந்த ஆள்.. முகத்திலிருக்கும் முசுட்டுத்தனம்கூட என்னமாய் அழகாய் இருக்கிறது.."

வாணி சொன்னதையேதான் அப்போது மனதில் நினைத்துக் கொண்டிருந்த சம்யுக்தாவிற்கு தான் நினைத்ததை வாய்விட்டுச் சொல்லிவிட்ட வாணியின் மேல் கோபம் வந்தது..

'இவள் எப்படி அவனை ரசிக்கலாம்..'

ஆனால், வாணி அவனை ரசித்ததோடு நிறுத்திக் கொள்ளாமல் மேலும் சம்யுக்தாவிடம் சன்னமான குரலில் கூறினாள்..

"இந்த ஜர்னி முடிவதற்குள் நான் இந்த ஆளை என்னிடம் பேசவைக்கிறேனா இல்லையா என்று பார்.."

வாணி சொன்னதை செய்து காட்டியபோது சம்யுக்தாவின் நெஞ்சில் ஓர் இனம் புரியாத தவிப்பு உருவானது..

'சொன்னபடி செய்துவிட்டாளே..'

அவள் விழிகள் லேசாக உயர்ந்து அவனைப் பார்த்த போது அவன் அவளுடைய பார்வையைக் கண்டுகொள்ள அவசரமாய் இமைகள் படபடக்க விழி தாழ்த்திக் கொண்டாள்..

'ஐயையோ.. நான் பார்ப்பதை அவன் பார்த்து விட்டானே..' அதன் பின் வாணியோடு மோதிக் கொண்டிருந்தவன் சட்டென்று அவர்களுடன் சமாதான மாகிவிட.. வாணியே ஆச்சரியப்பட்டுப் போய் சம்யுக்தாவின் காதினில் முணுமுணுத்தாள்..

"என்னடி இது ஆச்சரியமாய் இருக்கிறது.. இந்த ஆள் இவ்வளவு சீக்கிரமாய் மலை இறங்குவாருன்னு நான் எதிர்பார்க்கவே இல்லையே.."

அவன் சட்டென்று மலை இறங்கிவிட்டதற்கான காரணத்தை சம்யுக்தா மட்டுமே அறிந்திருந்தாள்.. அவனது பார்வை சம்யுக்தாவை விட்டு அகலாமல் அவள் மேலேயே படிந்திருக்க.. சம்யுக்தாவின் மனதில் முதன் முதலாக ஒரு பூ

மலர்ந்து விரிந்தது.. அதன் மணம் தந்த மயக்கத்தில் சம்யுக்தாவின் மனம் மயங்கியது..

சம்யுக்தாவினால் அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.. அவளை இதற்கு முன்னால் இவ்வளவு காதலுடன் யாரும் பார்த்ததில்லை.. விளையாட்டுத்தனமாய் அதுநாள் வரை இருந்தவளுக்கு அவள் பெண் ணென்பதை முதன் முதலாக உணர்த்தியவன் அவன் தான்..

அவனது பார்வை அவளுக்குள் உருவாக்கின சிலிர்ப்பை அதற்கு முன் அவள் உணர்ந்ததில்லை..

அவள் அறியாத பல உணர்வுகளை அன்று அறிய வைத்தான் அவன், தன் முன் அமர்ந்திருப்பவன் தன்னைக் காந்தமாக இழுப்பதை உணர்ந்தவள்.. தன்நிலை மறந்து அவனைத் தாகத்துடன் பார்த்துக் கொண்டே வந்தாள்..

அவனது தோற்றமும் நடையுடை பாவனையும் அவனது உயர்ந்த நிலையை உணர்த்த, சம்யுக்தா தன் ஏக்கத்தை மனதில் புதைத்துக் கொண்டு இந்த உணர்வுகளுக்கு ஓர் அர்த்தமும் இருக்கப் போவதில்லை என்று உணர்ந்தும் உணராதவளாய் அவனுடன் கழித்த அந்த ஒவ்வொரு நொடியையும் சிந்தாமல் சிதறாமல் தன் மனதிற்குள் சேகரித்தாள்.

தன் மனத்தை அவன் உணர வேண்டும் என்பதற் காகவே அவள் அந்தப் பாடலை தேர்ந்தெடுத்துப் பாடினாள்..

'மன்னவா.. உன்னை நான்..

மாலையிட்டால் மகிழ்வேன்..'

அந்த வரிகளைக் கேட்டபோது.. அவனது விழிகளில் தெரிந்த மின்னலைக் கண்டபோது.. அவள் நெஞ்சம் பூரித்தது.. எல்லோரும் உறங்க.. அவனும் அவளும் மட்டும் உறங்காத அந்த இரவின் ஒவ்வொரு மணித் துளியையும் ஒருவரையொருவர் பார்த்துக் கழித்தனர்..

இன்று சம்யுக்தா அவனைப் பார்த்துக் கேட்கிறாள்.. 'வெறும் பார்வைக்காகவா என்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறாய்..' என்று..

ஆனால், அவளின் மனச்சாட்சிக்குத் தெரியும்.. அந்தப் பார்வைகளுக்கு இணையானது வேறு ஒன்றும் கிடையாது என்பது.. சும்மாவா கண்ணதாசன் பார்வைகளைப் பற்றிப் பல பாடல்களைப் பாடிவைத்தார்..?

'பார்வை ஒன்றே போதுமே..

பல்லாயிரம் சொல் வேண்டுமா..?'

'ஓராயிரம் பார்வையிலே..

உன் பார்வையை நானறிவேன்..'

'பார்த்த ஞுபாகம் இல்லையோ..

பருவ நாடகம் தொல்லையோ..'

'பார்த்தேன்.. பார்த்தாள்..

சிரித்தேன்.. சிரித்தாள்..'

இதுபோலத்தான் அன்று சம்யுக்தாவின் பார்வைக்கு எதிர்பார்வையை திலீபன் தந்தான்.. இறங்க வேண்டிய இடம் வந்தபோது அவனிடம் எதுவும் பேச முடியாமல் பிரியப்போகும் துயரம் அவளை வாட்டியது.. அவனது விழிகளிலும் அந்த தவிப்புத் தெரிந்தது.. அவளுக்கு நிம்மதியாக இருந்தது..

அவள் ரயில் நிலையத்தில் இறங்கிவிட்டாள்.. அவன் ஓடிவந்து ரயில் பெட்டியின் வாசலில் நின்று கொண்டான்.. ரயில் கிளம்பிய அந்தக் கடைசி விநாடியில் அவளையும் அறியாமல் அவள் லேசான முறுவலுடன் அவனிடம் கையசைத்து விடைபெற்றாள்.. ரயில் வேகமெடுத்து மறைய.. அவன் அவளது பார்வையிலிருந்து மறைந்து போனான்.. காற்றோடு அவனைப் பற்றிய நினைவுகள் கரைந்துபோக.. அதை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ள முடியாமல் சம்யுக்தா ஊமையாகிப் போனாள்..

என்றேனும் ஒரு நாளில் அவன் அவளைத் தேடி வருவான் என்ற எதிர்பார்ப்பு சம்யுக்தாவின் மனதில் வெகுகாலம் இருந்தது.. நாளாக ஆக அந்த நம்பிக்கை நசித்துப் போய்விட.. அவள் பெற்றவர்களுக்கு மகளாக, அண்ணனுக்கு தங்கையாக பழையபடி தன் வாழ்க்கைக்கு மனம் திரும்பிவிட்டாள்..

ஏன் அவன் அவளைத் தேடி வரவில்லையென்ற துக்கம் வெகுகாலம் அவள் மனதை வாட்டியது.. இரவு நேரங்களில் அவள் விட்ட மௌனக் கண்ணீர் தலை யணையை நனைத்திருக்கிறது.. சொல்ல முடியாத சோகத்தில் நெஞ்சம் தவித்திருக்கிறது..

ஆனால், அதையெல்லாம் கனவு என்று அவள் உதறி மறந்து எத்தனை காலமாகிறது..! இப்போது போய் இவன் வந்து நிற்கிறானே..

இது மட்டும் சம்யுக்தாவின் அப்பா பலராமனுக்கு தெரிந்தால் மகளை உயிருடன் வெட்டிப் புதைத்து விடுவார்.. தாய் பூரணியோ அதிர்ச்சியில் உயிரையே விட்டு விடுவாள்.. அவளுடைய அண்ணன் சந்தோஷ்.. மனைவி பேசும் பேச்சுகளைத் தாங்க முடியாமல் உருக்குலைந்து விடுவான்..

'இதற்குத்தான் தங்கை தங்கையென்று தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினீர்களா..? அந்தத் தங்கை உங்களுக்கு வாங்கிக் கொடுத்த பட்டத்தைப் பார்த்தீங்களா.. இப்படிப்பட்ட ஒருத்திக்காக கட்டின பெண்டாட்டியின் பேச்சைக் கேட்கமாட்டேன்னு சொன்னீங்களே.. போதுமா..'

இதை மட்டுமா தான்யா பேசுவாள்..? இன்னும் என்னவெல்லாம் பேசுவாளோ.. அவளுடன் சேர்ந்து கொண்டு தான்யாவின் பிறந்தவீட்டினரும் பேசுவார்கள்..

அதையெல்லாம் நினைத்துப் பார்த்தவள்.. தன் தைரியத்தை ஒன்றுதிரட்டிக் கொண்டு திலீபனை ஏறிட்டுப் பார்த்தாள்..

இப்போதைக்கு இவனைச் சமாளித்து அனுப்பி விட வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவளுடைய மனத்தில்

இருந்தது..

"உங்கள் பெயர்கூட எனக்குத் தெரியாது.."

"இப்போதுதான் என் பெயரை நான் சொன்னேன்.. அதற்குள் நீ அதை மறந்துவிட்டாய்.. என்னைப் பற்றிய விவரங்களை மறப்பதானால் உனக்கு அல்வா சாப்பிடுவது போல இருக்கிறது."

"ஐ ஆம் ஸாரி திலீபன்.."

"இப்போது மட்டும் எப்படி என் பெயர் நினைவுக்கு வந்தது..? எதையும் கேட்கிற விதத்தில்தான் கேட்க வேண்டும் போல.."

"பிஸினெஸ் லைக்காய் பேசுகிறிங்க.."

"உன்னுடனான என் காதலை பிஸினஸ் லைனாக நான் நினைக்கவில்லை.. அது உண்மையானது.."

"இருக்கலாம்.. ஆனால், காலம் கடந்து நீங்கள் வந்திருக்கிறீர்கள்.. ஓர் உண்மையை நானும் சொல்லவா..?"

"சொல்லு.."

"நானும் உங்களுக்காக காத்திருந்தேன்.. எந்த நம்பிக்கையில் காத்திருந்தேன்னு எனக்கே தெரியாது.. ஆனால், எப்படியும் ஒரு நாள் என்னைத் தேடி நீங்கள் வருவீர்கள் என்று மனமார நம்பினேன்.. காத்திருந்தேன்.."

இந்த வார்த்தைகள் கொடுத்த நிறைவை கோடி கோடியாய் அவன் குவித்து வைத்திருக்கும் பணமும் செல்வமும் கொடுக்கவில்லையென்பதை அவன் அனுபவபூர்வமாக அப்போது உணர்ந்தான்..

"தேங்க்யூ சம்யுக்தா.."

"பட்... இதைப் பற்றியெல்லாம் பேச இது இடமில்லை.."

"வேறு எங்கே எப்போது பேசலாம்.."

"நான் சொல்கிறேன்.."

"வெல்.. என் செல் நம்பரைக் குறித்துக் கொள்.."

சம்யுக்தா தன் கைநடுங்க தன் செல்போனில் அவனது செல்போனின் நம்பர்களை பதிவு செய்து கொண்டாள்..

"நிச்சயம் கூப்பிடுவாயில்லை..?"

"கூப்பிடுகிறேன்.."

"மறந்துவிட மாட்டாயே... நீ மறதியின் மறு உருவமாயிற்றே.."

"மறக்க மாட்டேன்.."

"ஆனால்.. இப்போது மட்டும் என்னை ஏன் மறந்தாய்..?"

"அதைப் பற்றியும் நாம் பேசலாம்.."

'நாம் பேசலாம்..' என்ற அவளின் வார்த்தையில் பொங்கிக் கொண்டிருந்த திலீபனின் கோபம்.. தண்ணீர் பட்ட பாலாய் தணிந்து விட்டது..

"ஓகே.. நாம் நாளைக்கு மீட் பண்ணலாமா..?"

"அதைத்தான் சொல்கிறேன் என்றேனே.."

திலீபன் கதவைத் திறக்கப் போனான்.. சம்யுக்தா தடுத்தாள்..

"பொறுங்க.."

"ஏன்..?"

"வெளியில் இருப்பவர்கள் நீங்கள் இந்த அறையின் கதவைத் திறந்து கொண்டு வருவதைப் பார்த்து விட்டால் என் நிலைமை என்னாவது..?"

"நீ தேறிவிட்டாய்.. அப்போது நீ இப்படி இல்லை.. ஆறு வருடங்களில் நீ வளர்ந்துவிட்டாய்.."

திலீபனின் பார்வை அவள் உடல் மீது படிய.. சம்யுக்தா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவள் முகம் குங்குமமாய் சிவந்துவிட்டது.. மெல்ல அறைக் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்த்தாள்..

"யாரும் இந்தப் பக்கம் பார்க்கவில்லை.. போய் விடுங்க.."

"உன்னிடம் மாறாதது ஒன்றே ஒன்று அப்படியே இருக்கிறது.."

"எது..?"

"இந்தத் திருட்டுத்தனம்.."

மீண்டும்.. 'சுளீர்..' என்ற சாட்டையடி வார்த்தை களை வீசிவிட்டு திலீபன் வெளியேறிவிட்டான்..

'திருட்டுத்தனம்..!'

சம்யுக்தாவின் நெஞ்சில் துக்கம் பொங்கியது.. அவள் அப்படியே சுவரோடு சரிந்து அமர்ந்து முழங்கால்களில் முகத்தை புதைத்தாள்..

# 11

'உள்ளம் நிறைவிலோர்..

கள்ளம் புகுந்திடில்.

உள்ளம் நிறைவாமோ.. நன்னெஞ்சே..

உள்ளம் நிறைவாமோ..'

சிறுவயதில் பள்ளியில் படிக்கும்போது சம்யுக்தாவின் பாடல் ஆசிரியை சொல்லிக் கொடுத்த பாடலின் வரிகள் சம்யுக்தாவின் மனதில் ஒலித்தன..

கள்ளத்தனம் இல்லாத காதல் உண்டா..? சம்யுக்தா வின் காதலில் மட்டும் கள்ளத்தனம் இல்லாமல் எப்படிப் போய்விடும்..? முகம் மறைத்து திருட்டுத்தனமாய் பார்த்தவனைக் கண்டு அன்று அவள் மனதிற்குள்..

'கள்ளன்..' என்று சொல்லமாக கடிந்து கொண்டாள்.. இன்று அந்தக் கள்ளன்.. அவள் ஏங்கி நின்ற நேரத்தில் எல்லாம் வராமல் இன்னொருவனை மணக்கப் போகும் நேரத்தில் வந்து நின்று அவளுக்கு 'திருடி' என்ற பட்டத்தை சூட்டிவிட்டுப் போகிறான்..

'அவன் மட்டும் கொஞ்ச நாள்களுக்கு முன்னால் அவளைத் தேடி வந்திருந்தால்..?'

சம்யுக்தா ஏக்கப் பெருமூச்சுவிட்டாள்.. அவளுக்குத் தான் அது கொடுத்து வைக்கவில்லையே.. கண்ணதாசன் தான் இதற்கும் ஒரு பாடலை எழுதி வைத்துவிட்டுப் போய்ச் சேர்ந்திருக்கிறாரே..

'நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்..

தெய்வம் ஏதுமில்லை..

நடந்ததையே நினைத்திருந்தால்..
அமைதி என்றுமில்லை..
ஆயிரம் வாசல் இதயம் - அதில்
ஆயிரம் எண்ணங்கள் உதயம்..
யாரோ வருவார்.. யாரோ போவார்..
வருவதும் போவதும் தெரியாது..
ஒருவர் மட்டும் குடியிருந்தால்..
துயரம் ஏதுமில்லை..
ஒன்றிருக்க ஒன்று வந்தால்..
என்றும் அமைதியில்லை..'

என்று திலீபனை மறந்துவிட்டு மற்றவர்களை மணமுடிக்க பெண் பார்க்கும் படலங்களில் காட்சிப் பொருளாக சம்யுக்தா நிற்க ஆரம்பித்தாளோ அன்றே அவள் அமைதியைத் தொலைத்து விட்டாள்..

"சம்யுக்தா.. என்னம்மா.. ஏன் இப்படிச் சோர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்..?"

பூரணி பதறியபடி அறைக்குள் வந்து மகளின் அருகே உட்கார்ந்து கேட்டாள்.. அவ்வளவு நேரமும் அடக்கி வைத்திருந்த கண்ணீர் பெருக்கெடுக்க.. சம்யுக்தா தாயின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள்..

"தலை வலிக்கிறதும்மா.."

"அதற்குப் போய் அழலாமா..? அசடு.. யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க.. உனக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்டமில்லைன்னு நினைத்துவிட மாட்டாங்களா.."

'எனக்கு உண்மையிலேயே இந்தக் கல்யாணத்தில் இஷ்டம் இல்லைம்மா.. நிறுத்திவிடுங்கள்..' என்று தன்னால் சொல்ல முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்துப் பார்த்தாள் சம்யுக்தா..

ஆனால், அவளால் அதைச் சொல்ல முடியாது.. நினைத்ததைப் பேசிப் பழக்கமில்லாமல் வளர்ந்தவள் அவள்.. பலராமனின் மகள்.. சந்தோஷின் தங்கை..

சம்யுக்தா கண்களைத் துடைத்துக் கொண்டு தாயைப் பார்த்து புன்னகைக்க முயன்றாள்..

"சரிம்மா.."

"எழுந்திரு.. சாப்பிடலாம்.."

"வேண்டாம்மா.."

"ஏன் வேண்டாம்.."

"எனக்குப் பசிக்கலைம்மா.."

"அது எப்படி பசியில்லாமல் போகும்..? சாயந்திரம் ஒரு வாய் காபியை மட்டும் குடித்தாய்.. அது பசி தாங்குமா..? இப்போதுதான் புரிகிறது.. பசி தாங்காமல் தான் உனக்குத் தலைவலி வந்திருக்கிறது.."

பூரணி மகளின் தலைவலிக்கான காரணத்தை கண்டு பிடித்து விட்டவளாக அறைவாசல் பக்கம் திரும்பி அங்கே நின்று வந்திருந்த உறவினர் வீட்டுப் பெண்மணி ஒருத்தியிடம் பேசிக் கொண்டிருந்த சந்தோஷின் மனைவி தான்யாவை அழைத்தாள்..

"தான்யா.. தான்யா.."

'ஒரு வார்த்தை நின்று பேச விடுகிறதா.. இந்தம்மா..' மனதிற்குள் எரிச்சல்பட்டபடி அங்கே நின்று கொண்டே குரல் கொடுத்தாள் தான்யா..

"என்னங்கத்தை.."

"இங்கே கொஞ்சம் வாம்மா.."

'விடமாட்டாயே..' என்று மனதிற்குள் புதைந்தபடி வேண்டாவெறுப்பாக அறைக்குள் வந்து நின்றாள் தான்யா..

"என்ன..?"

"கொஞ்சம் டைனிங் ஹாலுக்குப் போய் சம்யுக்தா சாப்பிட டிபனை எடுத்துக் கொண்டு வந்துவிடும்மா.."

"என்னது..?"

தான்யாவின் கேள்வியில் இருந்த கோபத்தை வேறு நேரமாக இருந்திருந்தால் சம்யுக்தா கண்டுபிடித்திருப்பாள்.. இப்போதுதான் உடலில் உள்ள

தெம்பு அனைத்தும் பறந்து போனவளாக உட்கார்ந்திருக்கிறாளே.. அவள் தான்யாவின் குரல் வித்தியாசத்தை கவனிக்கவில்லை..

பூரணி என்றுமே மருமகளின் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்து கொண்டதில்லை.. அதை நன்கு அறிந்த பலராமன்.. அதைப்பற்றி மனைவியிடம் தெரியப்படுத்தியதுமில்லை.. சந்தோஷ் மனைவியின் பேச்சை கேட்க மாட்டான் என்கிறபோது வீட்டுப் பெண்களின் மனதில் ஏன் வீணாய் விரிசலை உண்டு பண்ண வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு..

என்றும் போல இன்றும் மருமகளை அப்பாவியாய் நிமிர்ந்து பார்த்தாள் பூரணி..

# 12

தான்யாவின் மனம் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது.. 'எவ்வளவு தைரியமிருந்தால் இந்த மாமியார்காரம்மா தன் மகளுக்கு என்னை டிபன் எடுத்துக் கொண்டு வரச் சொல்லும்..? என்னைப் பார்த்தால் இந்த அம்மாவிற்கு எப்படித் தோன்றுகிறது..? இந்தம்மாவின் மகள் என்ன பெரிய மகாராணியா..? நானென்ன இந்தம்மாவின் மகளுக்கு பணிவிடை செய்யும் வேலைக்காரியா..?'

மருமகளின் மனம் அறியாமல் தன்போக்கில் மகளின் முகத்தை தன் சேலை முந்தானையால் துடைத்துவிட்டுக் கொண்டிருந்தாள் பூரணி..

"ஏன் அத்தை.. சம்யுக்தா டைனிங் ஹாலுக்கு வந்து சாப்பிடலாமே.."

"அவளுக்கு தலைவலி தான்யா.."

'உன் மகளே பெரிய தலைவலி.. இதில் அவளுக்கே தலைவலி வந்துவிட்டதாமா..?' பல்லைக் கடித்தாள் தான்யா..

"அதனால் என்ன அத்தை.. கால் வலி என்றால் தான் இந்த ரூமிலிருந்து டைனிங் ஹால் வரை நடக்க சிரமமாக இருக்கும்.. தலைவலிதானே.. தாராளமாய் நடக்கலாம்.."

"அவள் அழுது கொண்டிருக்கிறாள் தான்யா.."

'அடிச்சக்கை.. உன் மகள் அழுதாளா.. அவளுடைய கண்ணீரை நான் பார்க்காமல் போய்விட்டேனே..'

தான்யா.. சம்யுக்தாவை கூர்ந்து கவனித்தாள்.. பூரணி முகம் துடைத்துவிட்டதால் தெளிந்த பால் போன்ற அந்த நிலவு முகத்தைக் காண அவளுக்கு வயிறு எரிந்தது..

"அழவில்லையே அத்தை.. நன்றாகத்தானே இருக்கிறாள்.."

"இப்போதுதான் அழுகை அடங்கியிருக்கிறது தான்யா.."

'அதுதானே.. என் முன்னால் ஒரு சொட்டுக் கண்ணீர்கூட உன் மகள் விட மாட்டாளே.. அப்படியே அப்பனுக்கு வாரிசு.. ம்ஹூம்.. உன் மகளின் கண்ணீரைப் பார்க்க எனக்கு கொடுத்து வைக்கவில்லை.. நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்..'

அப்போது பார்த்து.. "அம்மா.. அம்மா.." என்று அழைத்தபடி சந்தோஷ் அந்த அறைக்கு வந்தான்..

"என்ன சந்தோஷ்.."

"எல்லோரும் சாப்பிட்டாகி விட்டது.. நம் வீட்டு ஆள்களும் மாப்பிள்ளை வீட்டு ஆள்களும் மட்டும் தான் பாக்கி.. நீங்களும் சம்யுக்தாவும் வந்தால் நாம் போய் சாப்பிட்டுவிட்டு வந்துவிடலாம்.."

கணவரின் வார்த்தைகளைக் கேட்ட தான்யா பல்லைக் கடித்தாள்.. கணவனின் பக்கம் நகர்ந்து நின்று சன்னக்குரலில் அவனுக்கு மட்டும் கேட்கும்படி முணுமுணுத்தாள்..

"ஏன்.. என்னைப் பார்த்தால் உங்களுக்கு மனுஷி போலத் தெரியவில்லையா.."

"இல்லைடி.."

"என்ன சொன்னீங்க..?"

"தேவதை போல இருக்குன்னு சொன்னேன்.."

"சமாளிப்பு..? ம்ம்ம்.. அம்மாவையும் தங்கையையும் மட்டும் வருந்தி வருந்தி சாப்பிடக் கூப்பிடுகிறீங்களே.. இங்கே பெண்டாட்டின்னு ஒருத்தி கல்லுக் குண்டு

போல நின்று கொண்டிருக்கிறேன்.. நான் உங்கள் கண்ணில் படவில்லையா..? என்னைச் சாப்பிடக் கூப்பிட வேண்டும்ன்னு உங்களுக்குத் தோன்றவில்லையா..?"

"ஏண்டி.. எதுதான் சாக்கு இவனிடம் சண்டையிழுக்கலாம்ன்னு காத்துக் கொண்டிருந்தாயா..? நான் யதார்த்தமாகச் சொன்னேன்டி.."

"நைட்டு.. நம்ம ரூமுக்கு வாங்க.. பேசிக்கறேன்.."

"வேண்டாம்டி.. நாள் பூராவும் அலைந்திருக்கிறேன்.. நீ விடிய விடிய சண்டை போட்டால் எனக்கு அது தாங்காது.."

"தெரியுதில்ல.. அப்போ.. பேசும்போது யோசித்துப் பேசியிருக்கணும்.."

பூரணி மகனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து அறியாமையுடன் கேட்டாள்..

"என்னப்பா.. தான்யா என்ன சொல்லுது..?"

"உங்க மருமகள் வேறு என்ன சொல்வாள்..? மகன் சாப்பிட்டு விட்டானான்னு கேட்டுக் கொண்டிருந்தாள்.."

"ராகுல்தானே.. அவனை முதல் பந்தியிலேயே உட்கார வைத்து சாப்பிட வைத்துவிட்டேனே.. குட்டிப் பையன்.. பசி தாங்குவானா.."

சந்தோஷின் விழிகள் 'கேட்டுக்கொள்..' என்பதைப் போல தான்யாவை சுட்டெரித்தன..

"ஏண்டி...! பெற்ற தாய் நீ.. உன் பிள்ளையைப் பற்றி என்றைக்காவது அக்கறைப்பட்டிருக்கிறாயா..? அவன் பிறந்தது முதல் இன்றைக்கு வரை பார்த்துப் பார்த்து வளர்ப்பது என் அம்மாதான்.." அவன் சன்னக் குரலில் கடுகடுத்தான்..

"போதுமே.. உங்களின் அம்மாவின் பெருமையைப் பற்றி அள்ளி வீச வேண்டாம்.." அவள் நொடித்தாள்..

"நீங்க வாங்கம்மா.. சாப்பிடப் போகலாம்.."

"சம்யுக்தாவிற்கு தலைவலியாம்டா.."

"அடடா.. இது எப்போது.."

'ஏன் இப்படி அலட்டுகிறான்..' என்று எரிச்சல் பட்டாள் தான்யா..

"ஏங்க.. தலைன்னு இருந்தால் அதுக்கு வலின்னு ஒன்று வராதா..?"

"உன்னை...! ஏண்டி.. எந்த நேரம் எதைப் பேச வேண்டும்ன்னு உனக்குத் தெரியவே தெரியாதா..?"

"இனிமேல்தான் உங்ககிட்ட அதைக் கத்துக்கணும்.."

"உனக்கு டியூஷன் எடுக்க எனக்கு இப்போது நேரமில்லை.. இப்போது சம்யுக்தாவினால் டைனிங் ஹாலுக்கு வர முடியுமா.. இல்லை முடியாதாமா..?"

"பிள்ளை முகமெல்லாம் வாடிப் போயிருக்குடா.."

"அட.. ஆமாம் அம்மா.."

'அம்மாவும் மகனும் அடிக்கும் தாளத்தைப் பாரேன்.. வாடிப் போயிருந்தால் தண்ணீர் பாய்ச்ச வேண்டியது தானே..'

"அதுதான் தான்யாவிடம் சம்யுக்தாவிற்கு இங்கேயே டிபனை எடுத்துக் கொண்டு வரச் சொன்னேன்.."

"அதுவும் சரிதான் அம்மா.."

'நீ எப்போது உன் அம்மாவிற்கு ஜால்ரா போடாமல் இருந்திருக்கிறாய்..' தான்யாவின் விழிகள் சந்தோஷை முறைத்தன..

# 13

அனுபசவாலியான சந்தோஷ்.. மனைவியின் பார்வையில் இருந்த செய்தியை உடனடியாகப் புரிந்து கொண்டான்..

"இதோ நான் போய்க் கொண்டு வருகிறேன் அம்மா.. தான்யா.. அம்மாவின் பக்கத்தில் இரு.."

அவசரமாய் மனைவியை தங்கைக்கு டிபன் கொண்டு வரும் வேலையிலிருந்து விடுவித்த சந்தோஷ் அங்கிருந்து நகரப்

போனான்..

"கொஞ்சம் பொறுங்க.." என்று அவனையும் நிறுத்தி வைத்தாள் தான்யா..

"என்னடி.."

"இப்போ ஏன் உங்கள் அம்மாவைப் போலவே நீங்களும் புரிந்து கொள்ளாமல் பறக்கறீங்க..?"

"எனக்கா புரியாது..? எல்லாம் புரிந்தவன்தாண்டி நான்.." சந்தோஷ் இரு பொருள்படக் கூற.. இதற்கெல்லாம் நான் அசர மாட்டேன் என்பது போல சந்தோஷை பார்வையால் அதட்டி நிற்க வைத்தாள் தான்யா..

"ஏங்க.. டைனிங் ஹாலில் மாப்பிள்ளை வீட்டுக் காரங்க இருக்கும்போது சம்யுக்தா அங்கே போய் சாப்பிடாமல் அவளுடைய அறைக்கு நாம் டிபனைக் கொண்டு வந்தால் அவங்க என்ன நினைப்பாங்க..?"

"என்னடி நினைப்பாங்க..?"

"அவங்களை சம்யுக்தா மதிக்கவில்லைன்னு நினைத்துவிட மாட்டாங்களா..?"

இதுபோன்ற விஷயங்களில் மனைவி எப்படி இப்படி மதிநுட்பத்துடன் செயல்பட்டுப் பேசுகிறாள் என்பது இதுவரை சந்தோஷ் அறியாத ஒன்று..

என்றும் போல இன்றும் மனைவியின் சாகசப் பேச்சைக் கேட்டு அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்..

பூரணி பயந்து போய் மகனைப் பார்த்தாள்.. தாயை இரக்கத்துடன் பார்த்தான் சந்தோஷ்..

'இப்படிப்பட்ட அப்பாவியான மாமியாருக்கு எப்படி தான்யா வந்து மருமகளாய் வாயத்தாளோ..' என்று நினைத்தபடி அன்னையிடம் ஆறுதலாகப் பேசினான்..

"கவலைப்படாதீங்கம்மா.. சம்யுக்தாவிற்கு தலை வலின்னு நான் சொல்லிவிடுகிறேன்.."

அப்படி எளிதாக விட்டு விடுபவளா தான்யா..? அவள் அடுத்த கணையைத் தொடுத்தாள்..

"ஏங்க.. வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்கறீங்க.."

'இவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதை இத்தனை காலம் கழித்துச் சொல்கிறாளா...' என்ற நினைவுடன் மனைவியைப் பார்த்தான் சந்தோஷ்..

"என்ன சொல்ல வருகிற..?"

"பொண்ணுக்கு டைனிங்ஹாலுக்கு சாப்பிட வரக்கூட முடியாமல் தலைவலி வந்திருக்குன்னு மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கிட்ட சொன்னால் அவங்க என்ன சொல்லுவாங்க..?"

"என்ன சொல்லுவாங்க..? அதையும் நீயே சொல்லி விடு.."

"ஒன்று.. பெண்ணுக்கு வியாதி இருக்கு.. இப்படிப் பட்ட வியாதிக்காரப் பெண்ணையா கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறோமுன்னு பேசிக்கு வாங்க.."

"இன்னொன்று என்னவோ.."

"பெண்ணுக்கு இந்தக் கல்யாணத்தில் இஷ்ட மில்லைன்னு பழி சொல்லி விடுவாங்க.."

தான்யா கூறிய இந்த வார்த்தைகளைக் கேட்டதும் சம்யுக்தா சட்டென்று தலை உயர்த்தி அதிர்ச்சியுடன் பார்க்க.. அதை உடனடியாக இனம் கண்டு கொண்டு விட்டாள் தான்யா..

'இதைப் பாருடா.. சாது மாதிரி இருந்து கொண்டு இவள் காட்டும் எக்ஸ்பிரஷனை..! ஏன் இப்படி அதிர்ச்சியா கிறாள்..? இவளுக்கு உண்மையிலேயே இந்தக் கல்யாணத்தில் விருப்பம் இல்லையா..?'

நாத்தனாரைக் கண்காணிக்க வேண்டுமென்று அப்போதே மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டாள் தான்யா..

"என்னடா சந்தோஷ்.. தான்யா இப்படிச் சொல்லு கிறாள்..?"

"இவளுக்கு வேறு வேலையே இல்லை.. நீங்க சும்மா இருங்கம்மா.. நான் பார்த்துக் கொள்கிறேன்.."

"பொறு சந்தோஷ்.. தான்யா சொல்வதிலும் ஒரு அர்த்தம் இருக்கிறது.."

'ஐயோ அம்மா.. இப்படி உலகம் தெரியாத அப்பாவி யாய் இருக்கீங்களே.. இவள் சொல்வதில் ஆயிரம் அர்த்தங்கள்

இருக்கின்றன.. அதை விளங்கச் சொன்னால் நீங்க பயந்து போய் மயக்கம் போட்டு விழுந்து விடுவீங்க..'

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க கொஞ்சம் கறார் பேர்வழிகள்தான் சந்தோஷ்.. நாம்தான் கவனமாக இருக்க வேண்டும்.."

'ஆமாம்மா.. இதைப் போய் இவள் முன்னால் சொல்லி வையுங்க.. எனக்கென்று வந்து வாய்த்தீங்களே.. அவர்களைவிட நீங்க இவள் முன்னால் தான் கவனமாக இருக்க வேண்டும்.. அது புரியாமல் இவள் முன்னாலேயே எல்லா விஷயத்தையும் போட்டு உடைங்க..'

மனதிற்குள் கோபப்பட்ட சந்தோஷ்.. விட்டால் பூரணி, தான்யாவின் முன்னால் இன்னும் என்னவெல்லாம் சொல்லி வைப்பாளோ என்ற பயத்தில் தாயை அடக்க முனைந்தான்..

"இப்போ.. என்னதான் செய்யலாம்கறீங்க.."

"பேசாமல் சம்யுக்தா தலைவலியைப் பொறுத்துக் கொண்டு டைனிங் ஹாலுக்கே சாப்பிட வந்துவிடட்டும்.. என்ன தான்யா.. நான் சொல்வது சரிதானே.."

"நீங்க என்ன தப்பாகவா சொல்லிவிடப் போறீங்க.." வெற்றியுடன் மாமியாரை மிதப்பாகப் பார்த்துக் கேட்டாள் தான்யா..

# 14

எப்படித்தான் இவள் இவ்வளவு கெட்டிக்காரத் தனமாய் இருந்து தொலைக்கிறாளோ என்று எப்போதும் போல் மனைவியை மனதிற்குள் திட்டிக் கொண்டே தாயைப் பார்த்தான் சந்தோஷ்..

"ஓகே.. சம்யுக்தாவைக் கூப்பிட்டுக் கொண்டு வாங்க.."

"ஆமாம் அத்தை.. காற்றாட வெளியில கூப்பிட்டுக் கொண்டு போவதும் நல்லதிற்குத்தான்.."

இடக்காகக் கூறிய தான்யாவை சந்தோஷ் முறைத்துப் பர்க்க..

"தலைவலிக்கு நல்லதுன்னு சொன்னேன் அத்தை.." என்று இடைச்செருகல் ஒன்றைச் சேர்த்துக் கொண்டாள் தான்யா..

'திமிர்.. என் தங்கை என்ன நாலு கால் பிராணியா..? இவள் காற்றாட வெளியே அழைத்துப் போகச் சொல் கிறாளே..'

"ஏய்ய்.. வாடி.."

"எங்கே அத்தான்..?"

சந்தோஷ் தனியாகக் கூப்பிட்டு கன்னத்தில் ஒரு அறை கொடுக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் அழைக்க.. அவன் என்னவோ படுக்கையறைக்கு அழைப்பதைப் போல தான்யா கொஞ்சலாக வினவினாள்.. அவள் வினவிய விதம் கண்டு சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல சந்தோஷிற்கு இருந்தது..

"வேறு எங்கே.. எல்லாம் கொட்டிக் கொள்ளத்தான்.."

"அதை உங்கள் அம்மாவோடும் தங்கையோடும் சேர்ந்து கொட்டிக் கொள்கிறேன்.. நீங்க முன்னாலே போங்க அத்தான்.. நாங்கள், வீட்டுப் பெண்கள் எல்லோரும் சேர்ந்து பின்னாலே வருகிறோம்.."

இப்படிப்பட்ட நேரங்களில் கணவனிடம் தனியாகப் போய் மாட்டிக்கொள்ள தான்யா என்ன முட்டாளா..?

'இப்போது மட்டும் வீட்டுப் பெண்களா..'

மனைவியின் ரௌடியிசத்தை அதற்கு மேல் தாங்க முடியாமல் சந்தோஷ் அந்த இடத்தை விட்டு ஓடியே விட்டான்..

பிரதீப்பை கையோடு அழைத்துக் கொண்ட போக வேண்டிய கட்டாயத்தை மிகைப்படுத்திக் கூறி அபிஷேக்கை அனுப்பி வைத்துவிட்டு விச்ராந்தியாய் மணமகளின் அறையைப் பார்க்க, வசதியாக சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்த திலீபன், அறையை விட்டு வெளியே வந்த சம்யுக்தாவை விழுங்கி விடுவது போல பார்த்தான்..

தாயாரும் அண்ணியும் இரு பக்கமும் வந்து கொண்டிருந்தாலும் அவனைக் கடக்கும் வரை சம்யுக்தா

விற்கு உயிர் போய் உயிர் திரும்பி வந்தது.. வியர்த்துப் போய் விட்டாள்..

'யார் இவன்..? ஆளைப் பார்த்தால் பெரிய இடம் போலத் தெரிகிறது.. இவன் என்னடாவென்றால் நிச்சய தார்த்தம் நடக்கும் மண்டபத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டு கல்யாணப் பெண்ணையே ரூட் விட்டுக் கொண்டிருக்கிறான்..'

தான்யாவின் சந்தேகம் தோன்றி விட்டது.. அவனைப் பார்க்கக்கூடப் பயந்து சம்யுக்தா விழி தாழ்த்திக் கொள்வதைப் பார்க்கும்போது அவளுக்கு ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று தோன்றிவிட்டது..

'ஊஹும்.. எதுவோ சரியில்லை.. இவர்களுக்குள் ஏதோ லிங்க் இருக்கிறது..'

அவளது சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துவது போல சாப்பிட்டுக் கொண்டிருந்த பிரதீப்பிற்கு அருகே போய் அமர்ந்து கொண்டான் திலீபன்.. அவனுக்கும் இலை போட முனையும் போது..

"வேண்டாம்.. வேண்டாம்.. நான் ஏற்கெனவே சாப்பிட்டு விட்டேன்.." என்று மறுத்து விட்டான்..

இந்த வார்த்தைகள் தான்யாவின் செவிகளில் விழுந்ததும் அவள் ஆச்சரியத்துடன் திலீபனைப் பார்த்தாள்..

'சாப்பிட்டு முடித்தவன் வீட்டைப் பார்த்துப் போகாமல் இந்நேரம் வரை அங்கே உட்கார்ந்திருந்தான்.. இப்போது இங்கே வந்து உட்காருகிறான்.. சாப்பிடாத வனுக்கு டைனிங் ஹாலில் என்ன வேலை..?'

அதுநேரம் வரை லேசு பாசாக சம்யுக்தாவை நோட்டம் விட்டுக்கொண்டிருந்த பிரதீப்.. திலீபன் அருகே வந்து அமர்ந்ததும் பவ்யமாகி அவன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்வதையும் அவனிடம் கேள்வி கேட்டுக் கொண்டே அவனை விட்டுவிட்டு அவனுக்கு பதில் சம்யுக்தாவை திலீபன் நோட்டம் விட ஆரம்பிப்பதையும் பார்த்த தான்யாவிற்கு நொடிப் பொழுதில் எல்லாம் விளங்கி விட்டது..

'ஆசாமி கில்லாடிதான்.. கதை இப்படிப் போகிறதே.. அப்போ இந்தக் கல்யாணம் நடக்குமா.. நடக்காதா..?'

சம்யுக்தாவிற்கு செய்யப்படும் வரதட்சணை நகைகள், சீர்வரிசைகள், கார் இவையெல்லாவற்றையும் நினைத்து நினைத்து பொருமிக் கொண்டிருந்தவளுக்கு இப்போது ஜில்லென்று ஆகிவிட்டிருந்தது..

"நாங்கள் எங்கள் வீட்டுப் பெண்ணுக்குச் செய்கிறோம்.. உன் வீட்டிலிருந்து கொண்டு வந்ததை என் தங்கைக்கு கொடுத்தால் அப்போது நீ ஏனென்று கேள்.. அதை விட்டுவிட்டு எங்கள் வீட்டுப் பணத்தை எடுத்து என் தங்கைக்கு செலவழிப்பதற்கு கணக்குக் கேட்காதே.."

சந்தோஷ் இப்படி முகத்திலடித்தது போல் கேட்கவும் தான்யா சட்டென்று அடங்கிப் போய்விட்டாள்.. அவளுக்கு பிறந்தவீட்டிலிருந்து அதிகமாகச் செய்யவில்லை.. அதை பலராமனும் சந்தோஷும் பெரிதாக நினைக்கவுமில்லை..

அவளுக்குத் தெரியும்.. எங்கே அடங்கிப் போக வேண்டும், எங்கே பாயவேண்டும் என்று..

புலி பதுங்குவது பாய்வதற்கு என்பதை சந்தோஷும் புரிந்துதான் வைத்திருந்தான்.. அவனுக்கு தான்யாவைத் தெரியாதா..?

# 15

"என்னங்க.." என்றாள் தான்யா..

"என்னடி.." என்றான் சந்தோஷ் எரிச்சலுடன்..

"மாப்பிள்ளையின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் நபர் யார்..?"

"அவரைத் தெரியாதா..?"

"தெரியாததால்தானே கேட்கிறேன்.."

"அவர்தான் திலீபன்.. திலீப் குருப் ஆஃப் கம்பெனியின் எம்.டி"

'அவ்வளவு பெரிய கோடீஸ்வரனா இவன்..? ஊஹும் இந்தக் கல்யாணம் நிற்கக்கூடாது..'

"ஆமாம்.. ஏன் திடீர்னு அவர் யாருன்னு கேட்டாய்..?"

"சும்மாதான் கேட்டேன்.."

"நீ சும்மா கேட்கும் ஆளில்லையே.."

"ஏங்க.. கல்யாண வீட்டில் அவர் யார் இவர் யாருன்னு அடையாளம் கேட்டு வைத்துக் கொண்டால் அது தவறா..?"

"மத்தவங்களுக்கு வேண்டுமானால் இந்த கான்ஸெப்ட் பொருந்தும்.. உனக்குப் பொருந்தாது..

யாரு நீ..?"

"கட்டிக்கிட்ட பெண்டாட்டியைப் பார்த்துக் கேட்கும் கேள்வியா இது..?"

"பெண்ணைக் கட்டிக்கிட்டு இருந்தால் கேட்க மாட்டேன்.. நான்தான் உன்னைக் கட்டிக்கிட்டு இருக்கேனே.."

"ஏன்.. என்னைப் பார்த்தால் பேய் போல் இருக்கிறதா..?"

"தெரிந்தால் சரி.."

"நான் சொல்ல வேண்டியதை நீங்க சொல்றீங்க.. பேய்க்கு வாழ்க்கைப் பட்டதால்தான் இப்படி முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டு குப்பை கொட்டுகிறேன்.."

"என் வீட்டைப் பார்த்தால் உனக்கு முருங்கை மரம் போல் இருக்கிறதா..? பல்லைக் கழட்டி விடுவேன்.."

"ஆமாம்.. அதற்கு 'ஈ'ன்னு நான் பல்லைக் காட்டிக் கொண்டு நிற்பேனாக்கும்.. உங்களுக்கு மட்டும் என்னைப் பார்த்தால் பேயைப் பார்த்தது போல் இருக்கலாமா..?"

"நீ நடந்து கொள்ளும் விதம் அப்படி.."

"சரி.. சரி.. நீங்க சாப்பாட்டைக் கவனிங்க.."

"நீ யாரைக் கவனிக்கப் போகிற..?"

தன் கணவன் தன்னை எவ்வளவு சரியாக கணித்து வைத்திருக்கிறான் என்ற நினைவில் தான்யாவிற்கு சிரிப்பு வந்துவிட்டது.. அவள் அழகாக கணவனைப் பார்த்துச் சிரித்தாள்..

"ஏன்.. உங்களைக் கவனிக்கப் போகிறேன்னு தான் வைத்துக் கொள்ளுங்களேன்.."

"சில சமயம் நீகூட அழகாய் இருக்கேடி.."

கணவனை வீழ்த்திவிட்ட வெற்றியுடன் தான்யா.. திலீபனின் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.. அவன் கை கழுவ எழுந்து சென்ற சம்யுக்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்..

'நிச்சயமாய் இவன் சம்யுக்தாவிற்கு தெரிந்தவன் தான்.. இந்தப் பூனையும் பால் குடிக்குமான்னு இருக்கிற இடம் தெரியாமல் இருந்து கொண்டு இந்தக் குட்டிச் சாத்தான் இப்படிப்பட்ட வேலைகளையும் பார்த்து வைத்திருக்கிறதா..'

இப்போது என்ன செய்யலாம் என்று தான்யா யோசித்தாள்.. கணவனிடம் தன் சந்தேகத்தை சொல்வது சரியாக வராது என்ற யோசனை அவளுக்கு..

அவன்பாட்டுக்கு காதலுக்கு மரியாதை செய்கிறேன் பேர்வழியென்று அவனைத் திலீபனுக்குத் திருமணம் பண்ணிக் கொடுத்துவிட்டால் சம்யுக்தா மிகப் பெரிய உயரத்திற்கு போய்விடுவாள்.. அவளை அண்ணாந்து பார்க்கும் அளவிற்கு தான்யாவுக்கு மனத் தெம்பு கிடையாது..

எனவே.. இதை கண்டுகொள்ளாமல் இருந்து விட வேண்டும் என்று தான்யா அப்போதே மனதிற்குள் முடிவு செய்து கொண்டாள்..

சம்யுக்தா நகர்ந்ததும் பிரதீப்புடன் எழுந்து கொண்ட திலீபன்.. அவனுடன் பேசிக் கொண்டே காரை நோக்கிப் போவதைப் பார்த்த தான்யாவின் இதழ்களில் இகழ்ச்சிப் புன்முறுவல் உதயமானது..

'பாலுக்கும் காவல்.. பூனைக்கும் தோழனா..? இவன் பலே ஆள்தான்.. கல்யாணப் பெண்ணையும் சைட் அடித்துக் கொண்டு கல்யாண மாப்பிள்ளையின் தோளின் மீது கை போட்டுக் கொண்டு போக இவனால் மட்டும் தான் முடியும்..'

திலீபன் தன்னால் எதுவும் முடியும் என்பதை சம்யுக்தாவிற்கு உணர்த்தி விடும் வெறியோடு இருப்பதை

அறியாமல் தான்யா மனதிற்குள் எண்ணிக் கொண்டாள்..

திலீபனின் காரில் ஏறிக்கொண்ட பிரதீப்பிடம் சாதாரணமாகப் பேசிக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டிருந்த திலீபன்.. யதார்த்தமாகக் கேட்பது போல்..

"கல்யாணம்தான் நிச்சயமாகிவிட்டதே.. இனி வருங்கால மனைவியிடம் மணிக்கணக்கில் செல்போனில் பேசுவீர்கள்தானே.." என்று கேட்டான்..

பிரதீப் மரியாதையுடன் சிரித்தான்..

"அப்போ.. நான் சொல்வது உண்மைதான்.. தினமும் பேசுவீங்களா..?"

"அப்படிச் சொல்ல முடியாது.. வாரம் ஒரு முறை பேசுவேன்.."

"ஏன்.. தினமும் பேச வேண்டியதுதானே.."

"அப்படிப் பேசினால் என்னை அவள் எளிதாக நினைத்துவிட மாட்டாளா..? பயம் இருக்க வேண்டும் சார்..."

திலீபன் பதில் சொல்லாமல் தன் செல்போனை எடுத்து யாருக்கோ டயல் செய்தான்.. சலிப்புடன் போனை வைத்தான்..

"என்ன சார் ஆச்சு.."

"ஏதோ பிராப்ளம் போல்.. உங்கள் போனைக் கொடுங்க பிரதீப்.. அவசரமாய் ஒரு கால் பண்ண வேண்டும்.."

பிரதீப்.. அவனின் செல்போனைக் கொடுக்க.. அதில் பதிவாகி இருந்த சம்யுக்தாவின் நம்பரை தன் மனதில் பதிய வைத்துக் கொண்ட திலீபன் அலுவலகத்தை கூப்பிட்டுப் பேசி விட்டு போனை பிரதீப்பிடம் திருப்பிக் கொடுத்தான்..

# 16

"எப்போது என் கம்பெனியில் ஜாயின் பண்ணப் போகிறீங்க பிரதீப்..?" திலீபன் சாலையில் கவனத்துடன் கேட்டான்..

"எப்போது நீங்கள் அப்பாயின்ட்மெண்ட் ஆர்டர் கொடுக்கறீங்களோ அப்போதே ஜாயின் பண்ணி விடுவேன்.."

"நாளைக்கே கொடுத்துவிடுவேன்.."

"அப்போ.. நாளைக்கே என் பழைய வேலையை ரிஸைன் பண்ணிவிட்டு ஜாயின் பண்ணி விடுகிறேன்.."

திலீபன் ஏதோ யோசனையுடன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.. பின் பிரதீப்பின் பக்கம் திரும்பி வினவினான்..

"உங்கள் கல்யாண விஷயத்தில் நீங்கள் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டீங்களோன்னு எனக்குத் தோன்றுகிறது பிரதீப்.."

பிரதீப் முகம் சுருங்கினான்..

"ஏன் சார் இப்படிச் சொல்கிறீங்க..?"

"இப்போது நீங்கள் பார்க்கும் வேலைக்கான சம்பளம் என்றால் இந்த இடம் ஓகேதான்.. ஆனால்.. என் கம்பெனியில் நீங்கள் ஜாயின் பண்ணிவிட்டால் உங்களுடைய லெவலே மாறிவிடுமே.."

"அட.. ஆமாம்.. இதை ஏன் நான் மறந்து போனேன்.."

இப்போது பிரதீப் யோசனையாகி விட்டான்.. அவனைக் குழப்பியே தீர்ப்பது என்ற முடிவோடு திலீபன் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தான்..

"இப்போது வாங்கும் சம்பளம் போல் நான்கு மடங்கு அதிகமான சம்பளம் வாங்கப் போகிறீங்க.."

"நிஜம்தான் சார்.."

"குவார்ட்டர்ஸ் வேறு கொடுப்போம்.."

"எவ்வளவு பெரிய சமாசாரம் இது.."

"கார் அலவன்ஸ் உண்டு.. காரும் வீடும் வாங்க லோன் வேறு கொடுப்போம்.."

"எல்லாமே ஜாக்பாட்தான்.."

"அப்படியிருக்கையில் அவசரப்பட்டு நிச்சயதார்த்தம் வரை போய்விட்டீங்களே.."

"இப்போதுதான் இதைப் பற்றியே நான் யோசிக்கிறேன்.."

"கல்யாண விஷயத்தில் எப்போதுமே அவசரப்படக் கூடாது பிரதீப்.."

"தாமதமாகத்தான் இது புரிகிறது.."

"இன்னொன்றையும் நீங்கள் யோசிக்கவில்லை.."

"என்ன சார்.."

"ரொக்கமும் காரும் நகைகளும் உங்கள் தகுதிக்கு முன் நிற்க முடியாது.. உங்களைப் போலவே உங்களுக்கு இணையாக சம்பளம் வாங்கும் ஒருத்தியை நீங்கள் கல்யாணம் பண்ணிக்கொண்டால் உங்கள் ரேன்ஜே வேறு.. இவர்கள் வாழ்நாள் முழுவதும் செய்யும் சீர் வரிசையை அவளின் இரண்டு வருட சம்பளப் பணமே ஈடுகட்டிவிடும்.. அதற்குப் பின் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு கிடைக்கப்போகும் பணத்தையும் வசதி வாய்ப்பையும் நினைத்துப் பாருங்கள்.."

"நானும் இதையேதான் என் வீட்டில் சொன்னேன் சார்.."

'அதுதானே.. அது எப்படி நீ இதைப் போல் யோசிக்காமல் இருப்பாய்..? உங்களுக்குப் போய் ஒருவர் சொல்லித் தர முடியுமா..?'

"ஆனால்.. என் வீட்டில் அதற்காக இரண்டு வருடம் காத்திருக்க முடியுமா என்று கேட்டார்கள்.."

'அடப்பாவி..'

"வேறு வழியில்லாமல்தான் இந்த இடத்தை முடித்தோம்.."

"அப்படியா..? ஆனால்.. நீங்கள் வாங்கப் போகும் இந்தச் சீர்வரிசைகளைவிட அதிகமாக கொடுத்து சென்னையில் சொந்த வீடோடு உங்களைப் போலவே வேலை பார்த்து உங்களுக்கு இணையாய் சம்பளம் வாங்கும் பெண்ணொருத்தி உங்களுக்கு கிடைத்தால் வேண்டாமென்றா சொல்லிவிடுவீங்க..?"

"அப்படி யார் சார் இருக்கிறாங்க..?"

பிரதீப் பரபரப்பதை வெறுப்புடன் பார்த்தான் திலீபன்..

'இவனெல்லாம் என் காதலிக்கு மாப்பிள்ளையா..?'

"என் ஆபீஸில் இந்த சென்னை பிராஞ்சிலேயே இருக்கிறாங்க.. பெயர் சுகுணா.. வீட்டுக்கு ஒரே பெண்.. அப்பா இல்லை.. அம்மா மட்டும்தான்.. வசதியான குடும்பம்.. சென்னையில் சொந்த வீடு இருக்கிறது.. நூறு பவுன் நகை இருக்கிறது.. சொந்தமாய் கார் இருக்கிறது.. லட்சக்கணக்கில் பேங்க் பேலன்ஸ் இருக்கிறது.. உங்களை விடவும் அதிகம் சம்பளம் வாங்குகிறாங்க.."

'ஆ'வென்று வாய் திறந்து திலீபன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்தான் பிரதீப்..

"எங்களுக்கு அவங்க அப்பா ஃபேமிலி ஃப்ரெண்ட் தான்.. நான் சொன்னால் சுகுணாவின் அம்மா பெண்ணைத் தந்துவிடுவாங்க.. என்ன ஒன்று.. கடைசிவரை அவங்க மகள் கூடவே இருப்பாங்க.."

"அது பிரச்சினை இல்லையா சார்..?"

"ஆனால்.. கடைசிவரை அவங்க கணவருக்கான பென்ஷன் பணம் ஆயிரக்கணக்கில் அவங்களுக்கு வந்துகொண்டு இருக்குமே.. சுகுணாவின் அப்பா.. ரயில்வேயில் ஆபீஸராக இருந்தவர்.."

"அப்போ.. பிரச்சினையே இல்லை சார்..! ஆயிரம் தான் இருந்தாலும் தாயைக் கூட வைத்துக் கொள்ள வேண்டியது மகளின் கடமையில்லையா..?"

'இவன்தான் எப்படிச் சட்டென்று நிறம் மாறுகிறான்.. சரியான பச்சோந்தியாய் இருக்கிறானே..'

திலீபன் வெறுப்புடன் பிரதீப்பைப் பார்த்தான்..

# 17

திலீபனுக்கு ஒன்று மட்டும் விளங்கவேயில்லை.. சற்று நேரத்திற்கு முன்னால்தான் இன்னொரு பெண்ணிற்கு நிச்சய தாம்பூலத் தட்டைக் கொடுத்து நிச்சயதார்த்தம் பண்ணி திருமணத்தை உறுதி செய்துவிட்டு வந்திருக்கிறான் பிரதீப்.. அதற்குள் எப்படி அடுத்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதைப் பற்றி

இவ்வளவு நிச்சயமாகவும் ஆர்வமாகவும் அவனால் பேச முடிகின்றது..?

சந்தேகத்தை தெளிவுபடுத்திக் கொள்ள பிரதீப்பிடமே நேரடியாய் கேட்டான் திலீபன்.. அவனோ படு அலட்சியமாக பதில் சொன்னான்..

"இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா சார்..?"

'இது பெரிய விஷயமில்லையென்றால் உன் அகராதியில் வேறு எதுதான் பெரிய விஷயம்..?'

"என்ன பிரதீப்.. இப்படிச் சொல்கிறீங்க.. நிச்சய தார்த்தம் முடிந்துவிட்டதே.."

"கழட்டிவிட ஆயிரம் வழி உண்டு சார்.."

'நீ கழட்டிவிடும் அளவிற்கு என் சம்யுக்தா உனக்கு எளிதானவளாக போய்விட்டாளா..? ஆறு வருடங்கள் அவளைத் தேடி ஊர்ஊராய் நான் அலைந்திருக்கிறேண்டா. கடைசியில் நான் பிறந்து வளர்ந்த சென்னையில்

தான் அவளும் பிறந்து வளர்ந்திருக்கிறாள்.. எனக்கு ஏன் சென்னையில் அவள் இருப்பாளென்று தோன்றாமலேயே போய்விட்டது..? இடையில் சந்தித்த ரயில் பயணத்தால் அவளை வேற்றூர்க்காரியாக நினைத்து இத்தனை காலத்தையும் வீணடித்துவிட்டேன்.. இல்லாவிட்டால் நீயெல்லாம் என் சம்யுக்தாவை நெருங்கி விட விட்டிருப்பேனா..!'

"ஆயிரம் வழிகளில் ஒரு வழியைச் சொல்லுங்கள் பார்ப்போம்.."

"பெண்ணின் மேல் சந்தேகம் என்பேன்.."

'நீ இதையும் செய்வாய்.. இதற்கு மேலேயும் செய்வாய்டா..'

"அது வேண்டாம்.. வேறு ஒன்றைச் சொல்லுங்கள்.."

"வேறெல்லாம் சரிப்பட்டு வராது சார்.."

"ஏன்..?"

"சீர்வரிசை போதாது என்றால் இன்னும் அதிகமாக தருகிறேன் என்பார்கள்.. ரொக்கம் போதாது என்றால் அதையும் அதிகப்படுத்துவார்கள்.. வீடு வேண்டும்

என்றால் குடியிருக்கும் வீட்டையே எழுதிக் கொடுத்து விடுவார்கள்.."

"அப்படியா..?"

"ஆமாம் சார்.. அந்த வீட்டில் அந்தப் பெண் மேல் அவ்வளவு உயிராய் இருந்து தொலைப்பார்கள்.."

"இது நல்ல விஷயம்தானே.. இதை ஏன் சலிப்பாக சொல்கிறீங்க..?"

"நாளைக்கு ஒருவேளை கல்யாணம் பண்ணித் தொலைத்தால் என் வீட்டிலும் வந்து இப்படி சீராட நினைப்பாள் இல்லையா..? அது முடியுமா..?"

"ஏன் முடியாது..?"

"என் அம்மாவிற்கு வேலை செய்ய முடியவில்லை என்பதாலேயே நான் அவசரமாய் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன்.. வீட்டு வேலைகளைச் செய்ய ஆள் வேண்டாமா.."

'கடவுளே..' என்று இருந்தது திலீபனுக்கு..

'கழுத்து நிறைய நகை போட்டு.. கைநிறையப் பணம் கொடுத்து சொத்து சுகத்தை எழுதி வைத்து ஒரு பெண்ணை அடுத்த வீட்டிற்கு மருமகள், மனைவி

என்ற பெயரில் வீட்டு வேலை செய்ய வேண்டிய வேலைக்காரியாக அனுப்புவது வேறு எந்த நாட்டிலும் நடக்காது.. இந்திய நாட்டில் மட்டும்தான் நடக்கும்..'

இவனோடு இதற்கு மேலும் பேசினால் கோபத்தில் அடித்துக் கிடித்துத் தொலைத்துவிடுவோம் என்ற எண்ணம் தோன்ற.. அதற்கு மேல் பேச்சை வளர்த்தாமல் மௌனமாகி விட்டான் திலீபன்..

ஆனால், பிரதீப் அவனை மௌனமாக இருக்க விடுவதாக இல்லை..

"சார்.. சார்.." என்று அழைத்து வைத்தான்..

"ம்ம்.. சொல்லுங்கள்.."

"சுகுணாவிடம் என்னை அறிமுகப்படுத்தி வையுங்கள் சார்.."

"அப்போது.. உங்களுக்கு நடந்த நிச்சயதார்த்தம்..?"

"எதையாவது சொல்லி நிறுத்திவிடுவேன் சார்.."

"எதைச் சொல்வீங்க..?"

"ஏதாவது ஒரு காரணம் கிடைக்காமல் போகாது சார்.."

'காரணத்தை நான் உனக்குக் கொடுக்கிறேன்..' என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டான் திலீபன்..

"ஆனாலும் பிரதீப்.. உங்கள் செல்போனில் எல்லாம் அந்தப் பெண்ணின் நம்பர் இருக்கிறது.."

"அழித்துவிட்டால் போச்சு.."

'அழிப்பது என்றால் இவனுக்கு அல்வா சாப்பிடு வதைப் போல அவ்வளவு இனிப்பாக இருக்கிறது போல..'

மனதிற்குள் எரிச்சல்பட்டாலும் ஒருவகையில் நிம்மதியாய் உணர்ந்தான் திலீபன்.. இவனை எளிதாக சம்யுக்தாவின் பாதையிலிருந்து அகற்றிவிடலாம்.. தொண்டையில் சிக்கிய முள் போல உறுத்திக் கொண்டிருக்கும் இந்த நிச்சயதார்த்த நிகழ்வைப் பற்றிய கவலை திலீபனுக்கு இருக்கப் போவது இல்லை..

பிரதீப்பிற்கு அநியாயம் செய்துவிட்ட குற்ற உணர்வும் திலீபனுக்கு வரவேண்டியதில்லை.. பிரதீப்பே தான் ஒரு நிறம்மாறும் பூ என்பதை உணர்த்தி விட்டான்.. திசை மாறிப் பறக்கத் தயாராகி விட்டான்..

இனி திலீபன் செய்ய வேண்டியதெல்லாம் பிரதீப் கேட்கும் காரணத்தை அவனுக்கு கொடுக்க வேண்டிய வேலை மட்டும்தான்.. திலீபன் அதைக் கட்டாயம் செய்வான்.. சம்யுக்தாவின் மேல் அவனுக்கிருக்கும் கரைகாணாத காதலை சம்யுக்தாவே உணரும் படி வைப்பான்..

# 18

பிரதீப்.. திலீபனின் கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்து விட்டான்.. அவனைப் பற்றி மிகவும் நல்லவிதமாக

சுகுணாவிடமும் சுகுணாவின் அம்மாவிடமும் திலீபன் சொல்லி வைத்தான்.. பிரதீப்பின் தோற்றமும் பழகும் முறையும் சுகுணாவிற்குப் பிடித்துப் போக.. சுகுணாவின் அம்மா மட்டும் தயங்கினாள்..

"நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டதாமே.."

"கல்யாணம் இன்னும் முடியவில்லையே.."

இந்தப் பதிலைச் சொன்னது பிரதீப் என்றதால் சுகுணாவின் முகம் பிரகாசித்தது.. மகளைப் பார்த்த சுகுணாவின் தாய்.. வாய்மூடிக் கொண்டாள்..

திலீபன் மும்பையிலிருக்கும் குந்தவையிடம் சென்னையில் சில காலம் தங்கியிருந்து வேலை பார்க்க வேண்டியிருக்கிறது என்று சொன்னான்..

"நீயாடா ஒரே இடத்தில் அடங்கியிருக்கப் போகிறாய்..?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள் குந்தவை..

"அது எப்படிம்மா என்னால் முடியும்..? ஊடே.. ஊடே.. நிறைய வெளிநாட்டுப் பயணங்கள் இருக் கின்றனவே.." என்றான் திலீபன்..

"அதுதானே பார்த்தேன்.. டேய் திலீபா.."

"நீங்கள் என்ன கேட்கப் போகிறீங்கன்னு எனக்குத் தெரியும்.. நான் சென்னியில் இருக்கும் காலம் வரைக்கும் சென்னைக்கு வந்து விடுகிறேன் என்பீர்கள்.."

"நான் வேறு என்னத்தைடா சொல்லப் போகிறேன்..? மண்வாசனை என்னை இழுக்குதுடா.."

"சதீஷிடம் சொல்லியிருக்கிறேன்.. அவன் அடுத்த வாரம் ஃப்ளைட்டில் உங்களை அனுப்பிவைப்பான்.."

"நிஜமாவாடா சொல்கிற..?"

"நான் நிஜத்தைத் தவிர வேறு எதையும் சொல்ல மாட்டேன்.."

குந்தவை வரும் முன்னால் திலீபன் செய்ய வேண்டியவற்றை செய்ய ஆரம்பித்தான்.. சம்யுக்தாவிற்கு ஒரு நாள் போன் பண்ணினான்..

"ஹலோ.." என்றாள் அவள்..

"வார்த்தை தவறிவிட்டாய்.." என்றான் திலீபன்..

"யார்.. யார் பேசுவது..?"

"உன் திலீபன்.."

மறுமுனையில் அவள் அதிர்ச்சியில் ஊமையாகி விட, திலீபனே தொடர்ந்து பேசினான்..

"என்ன.. பேச்சையே காணோம்.. என்னிடம் மட்டும் பேச மாட்டாய்.. வேறு யாரோடு வேண்டுமானாலும் பேசுவாய்.."

"நான் அறிமுகம் இல்லாதவர்களிடம் இதுவரை பேசியது இல்லை.."

"நான் உனக்கு அறிமுகம் இல்லாதவனா..?"

"உங்களுக்கு என்னதான் வேண்டும்.."

"நீ தான் வேண்டும்.. நீ மட்டும்தான் வேண்டும்.."

"நடக்காததைப் பற்றிப் பேசாதீர்கள்.."

"ஏன் நடக்காது..?"

"நாம் நேரில் பேசலாம்.."

"நான் காத்திருக்கிறேன்.. நீதான் விளக்கம் சொல்ல வர மறுக்கிறாய்.."

"இன்று சொல்லிவிடுகிறேன்.."

"எங்கே வருகிறாய்.."

"நீங்களே சொல்லுங்கள்.."

"என்னிடம் கேட்டால்... நான் வெனிஸிற்கு வருகிறாயான்னு கேட்பேன்... சுவிட்சர்லாந்தில் பேசலாம்ன்னு சொல்வேன்.. பாரிஸில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்பேன்.. எப்படி வசதி..?"

"உங்கள் அளவிற்கு நான் இல்லை.. நான் மிடில் கிளாஸ்.. ஏதோ என்னால் ஆன அளவில் பனகல் பார்க்கிற்கு வந்து உங்களைச் சந்திக்க முடியும்.."

"போகிறது போ.. எத்தனை மணிக்கு வருகிறாய்.."

"ஈவினிங் நான்கு மணிக்கு வருகிறேன்.."

"அது என்ன நான்கு மணி கணக்கு.. அதற்கும் ஒரு விளக்கம் வைத்திருப்பாயே.."

"வெயிலும் குறைவாக இருக்கும்.. மாலை மயங்க நிறையப் பொழுதும் இருக்கும்.. இருட்ட ஆரம்பிப்பதற்குள் பேச வேண்டியதைப் பேசிவிட்டு வீட்டுக்கு வந்துவிடலாம்.."

"என் வீட்டிற்குத்தானே.."

"இல்லை.. என் வீட்டிற்கு.."

"என் வீடுதானே உன் வீடு.."

"நான் போனை வைத்து விடுகிறேன்.."

"செல்போனை அணைத்துவிடுகிறேன்னு சொல்லு.. இது என்ன லேண்ட் லைனா.. வைத்து விடுகிறேன்னு சொல்ல..?"

"எதுவோ ஒன்று.. விடுங்களேன்.."

"என்னால் விட முடியாது.. அணைத்துவிடவான்னு கேட்டால்.. நான் வேறுவிதமாய் அர்த்தப்படுத்திக் கொள்வேன்னு தானே இப்படிக் கேட்டாய்..?"

'ஆமாம்..' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு பேசாமல் இருந்தாள் சம்யுக்தா.. அவளுக்குத் தெரியும்.. அவன் அப்படித்தான் கேட்டு வைப்பான் என்பது..

"என் செல் நம்பர் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது..?"

"நீயேன் எனக்கு அதைக் கொடுக்கவில்லை.."

"மறந்து விட்டேன்.."

"என்னை மறந்துவிட்டதைப் போலவா..?"

"ப்ளீஸ்.."

"ஓகே.. பிரதீப்பின் செல்போனிலிருந்து உன் நம்பரை எடுத்தேன்.. நான் அவனின் முதலாளி.. போதுமா.."

சம்யுக்தாவின் முகம் இருண்டது.. தான் மணக்கப் போகும் பெண்ணின் செல்போன் நம்பரை மற்றவர்களுக்கு ஒருவன் தரலாமா..?

அந்தி வெயில் இதமாக அடித்துக் கொண்டிருந்தது.. பசுமையான மரங்களின் அடியில் கிடந்த பெஞ்சில் சாய்ந்து அமர்ந்தான் திலீபன்.. ஒரு பெண்ணிற்காக இப்படி வந்து நேரத்தை வீணடிக்கும் அளவிற்கு அவன் இல்லை.. அவனது ஒவ்வொரு வினாடி நேரமும் மதிப்பு வாய்ந்தது.. ஆனால்.. அதைவிட சம்யுக்தாவின் மேல் அவன் வைத்திருக்கும் காதல் மதிப்பு வாய்ந்தது என்பதால் அவன் அவளுக்காக காத்துக் கொண்டிருந்தான்..

தூரத்தில் அவள் வருவது தெரிந்தது.. இளம் பச்சை வண்ண சுடிதார் அணிந்திருந்தாள்.. கூந்தலைப் பின்னலிட்டிருந்தாள்.. முகத்தில் கவலை தெரிந்தது.. அவனைக் கண்கள் தேடின.. அவன் இருக்குமிடத்தைக் கண்டு பிடித்ததும் முகம் வாட, அருகில் வந்து நின்றாள்..

"உட்காரு.." அவன் நகர்ந்து கொள்ள.. அவன் அருகில் பெஞ்சில் அமர்ந்தாள்..

திலீபன் அவள் முகத்தையே பார்க்க.. முகம் சிவந்து போய் சங்கடத்துடன்.. புல் தரையைப் பார்த்தாள்..

"புல்லை ரசிக்கத்தான் இங்கு வந்தாயா..?"

"இல்லை.."

"அப்புறம் எதற்கு கழுத்து வலிக்க அதைப் பார்க்கிறாய்..?"

"நீங்களும்தான் என்னை ஏன் இப்படிப் பார்க்க வேண்டும்.."

திலீபனின் இதழ்களில் விஷமப் புன்னகை மலர்ந்தது. அவன் இன்னும் அவளை ஆழமாய் பார்க்க... அவள் இன்னும் அதிகமாக முகம் சிவந்து எழுந்து கொண்டாள்..

"என்ன ஆச்சு.. ஓடப்போகிறாயா..?"

"நீங்கள் இப்படியே பார்த்து வைத்தால் நான் அதைத்தான் செய்ய வேண்டும்.. வேறு வழியில்லை.."

"வெறும் பார்வைதானே.. பார்க்கக் கூடக் கூடாதா..?"

"கூடாது.."

"ஏன்..?"

"எனக்குக் கல்யாணம் ஆகக் போகிறது.. நான் இன்னொருவருக்காக நிச்சயம் செய்யப்பட்ட பெண்.."

திலீபன் சட்டென்று முகம் மாறி முகம் கடுத்தான்.. சற்று முன் மனதில் ஏற்பட்டிருந்த இனிமையான உணர்வுகள் மறைந்து போக, பல்லைக் கடித்துக் கொண்டே அவளைப் பார்த்தான்..

"அப்படி நினைப்பவள் ஏன் என்னைப் பார்க்க வந்தாய்..?"

"விளக்கம் சொல்ல வந்தேன்... இனி என் வாழ்க்கையில் குறுக்கே வர வேண்டாம்ன்னு கேட்டுக் கொள்ள வந்தேன்.."

"எவ்வளவு எளிதாக சொல்லிவிட்டாய் சம்யுக்தா.."

"சார்.. நீங்கள் கம்ப்யூட்டர் பிஸினஸ் செய்பவர்.. இப்படிப்பட்ட தேவையில்லாத சென்டிமெண்ட் காதலில் நீங்கள் சிக்கிக் கொள்ளக் கூடாது.."

"கம்ப்யூட்டர் பிஸினஸ் செய்தால்.. அவன் ரோபோவாகத்தான் இருக்க வேண்டுமா..? மனிதனாக இருக்கக்கூடாதா..?"

"நடைமுறைக்கு சரிவராத விஷயங்களைப் பேசுவ தால் யாருக்கு என்ன லாபம்..? நீங்களே சொல்லுங்கள்.."

"காலையில் மலரும் பூ மாலையில் உதிரத்தான் போகிறது.. ஆனால், அந்த ஒரு நாள் வாழ்க்கையை மறந்து அது அழகாக சிரிப்பதில்லையா..? அதை நாம் ரசிப்ப தில்லையா..? நடைமுறைக்கு சரிவருவதைத் தான் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் காதலுக்கு இல்லை.."

"முதலில் நமக்குள் வந்தது காதல் இல்லை.."

"நீ பெரிய மனுஷி.. கண்டுபிடித்து விட்டாய்.. அது காதல் இல்லாமல் வேறு என்ன..? அதையும் நீயே சொல்லு.."

"இன்பாச்சுவேஷன்.. அந்த இளம்வயதில் கண்ணுக்கு முன்னால் தெரியும் கவர்ச்சியான ஆண்மகன் மேல் தோன்றும் ஈர்ப்பு.."

திலீபன்.. தாடையைத் தடவியபடி அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.. பின் பெஞ்சில் சாய்ந்து அமர்ந்தான்..

"உனக்குத்தான் ஈர்ப்பு தோன்றும் இளம் வயது.. அந்த வயது.. எனக்கு அப்படியில்லை.. எனக்கு அப்போது வயது

இருபத்து எட்டு.. அது பக்குவப்பட்ட காதலிக்க வேண்டிய வயது.."

"இப்போது என்னதான் சொல்ல வருகிறீங்க.."

"நான் உன்னைக் காதலிக்கிறேன்.."

"நான் உங்களைக் காதலிக்கவில்லை.."

"பொய்.."

"மெய்.."

"காதலிக்காதவள் எப்படி நான் உன்னைத் தேடி வருவேனென்று எதிர்பார்த்தாய்..? எப்படியும் ஒருநாள் உன்னைத் தேடி நான் வருவேனென்று காத்திருந்ததாக நீதான் உன் வாயால் சொன்னாய்..?"

சம்யுக்தாவின் கண்கள் கலங்கிவிட்டன.. அவள் அருகிலிருந்த செயற்கை நீரூற்றைப் பார்த்த வண்ணம் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்..

"என்ன பதிலைக் காணோம்.."

"போய்விடுங்கள் திலீபன்.. என்னைத் தொந்தரவு செய்யாமல் போய்விடுங்கள்.. கனவு கண்டு விழித்தவள் நிலையில் நான் இருக்கிறேன்.. கனவெல்லாம் நிஜமாகி விடாது.."

"ஆனால், நான் நிஜம் சம்யுக்தா.."

"எனக்கு நீங்கள் நிஜமில்லை.. பிரதீப்தான் நிஜம்.."

அதுவரை அமைதியாகப் பேசிக் கொண்டு வந்த திலீபனுக்கு இந்த வார்த்தையைக் கேட்டதும் வெறி பிடித்து விட்டது..

"என்னடி சொன்னாய்..?" என்று கர்ஜித்தான் அவன்.. அது அவன் செய்த இமாலயத் தவறு.. சம்யுக்தா.. அவனை என்றோ ஒரு நாள் இரவு நேரத்தில் பயணத்தில் சந்தித்திருக்கிறாள்.. வெறும் பார்வைப் பரிமாற்றம் தான்.. மற்றபடி ஒரு வார்த்தைகூட அவர்கள் பேசிக் கொள்ள வில்லை..

தந்தை தமையனைத் தவிர வேறு அந்நிய ஆண்களிடம் பேசிப் பழக்கமில்லாதவள் அவள்.. பலராமனும்

சந்தோஷும் அவளிடம் சத்தமாய்கூடப் பேசமாட்டார்கள்.. அப்படி வளர்ந்தவளிடம்.. 'டீ' போட்டு பேசிவிட்டான் திலீபன்.. அதுவே சம்யுக்தா அவனிடமிருந்து பயந்து விலக காரணமாகிவிட்டது..

# 20

பிரதீப்பின் உண்மையான சொரூபத்தை சம்யுக்தா அறியமாட்டாள்.. ஆனால்.. திலீபன் நன்கு அறிவான்.. பல ஆண்டுகளாக அவளைத் தேடிவரும் தன்னிடமே.. பிரதீப்தான் நிஜம் என்று சம்யுக்தா சொல்லவும் அவன் நிதானத்தை இழந்துவிட்டான்..

"ஏண்டி.. சும்மா நான்பாட்டுக்கு தேமேன்னு ரயிலில் பயணம் போய்க்கொண்டிருந்தேன்.. கள்ளப் பார்வை பார்த்து, மன்னவா.. உன்னை நான் மாலையிட்டால் மகிழ்வேன்னு பாட்டுப் பாடித் தூண்டில் போட்டவள் நீ..! இன்று நான் கனவு.. அந்த பச்சோந்திப்பயல் நனவா..?"

சும்மாயிருக்க மாட்டாமல் சம்யுக்தா மீண்டும் வார்த்தைகளை விட்டுத் தொலைத்தாள்..

"மரியாதையாகப் பேசுங்கள் திலீபன்.. முதலில் என்னை மறியாதையில்லாமல் பேசினீங்க.. இப்போது அவரைப் பேசுறீங்க.. இது நல்லா இல்லை.. சொல்லி விட்டேன்.."

"ஓஹோ.. அப்படியோ..?" திலீபன் கண்கள் சுருங்க அவளைப் பார்த்தான்..

"அம்மணிக்கு.. அவனை நான் மரியாதையில்லாமல் பேசுவது பிடிக்கவில்லையாக்கும்.. ஏன் அப்படி..?"

"ஏனென்றால் அவர் என் வருங்காலக் கணவர்.."

அதுவரை இருந்த கொஞ்சநாஞ்ச நிதானமும் காற்றோடு பறக்க, அவன் அவளை ஓங்கி ஒரு அறை விட்டான்.. அவள் சுருண்டு விழுந்து விட்டாள்..

கோபத்துடன் எழுந்து பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டபடி நீருற்றின் அருகே போய் அதையே வெறித்துப் பார்த்துக்

கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்தான்.. அவள் அப்படியே கிடந்தாள்..

புருவங்கள் மேலேற அவளருகில் வந்தவன் அவளை லேசாக அசைத்துப் பார்த்தான்.. அவள் கண் விழிக்க வில்லை..

"சம்யுக்தா.. சம்யுக்தா.." என்று கூப்பிட்டுப் பார்த்தான்..

அவளிடம் அசைவு தென்படவில்லை..

சட்டென்று வந்த சந்தேகத்துடன் அவளது நாசிக்கு அருகே விரல் வைத்துப் பார்த்தான்.. மூச்சுக் காற்றை விரல் உணர்ந்தது..

'மயங்கிக் கிடக்கிறாள்..' யோசனையுடன் தண்ணீரைப் பார்த்தான்.. அவனது விழிகள் மயங்கிக் கிடந்த அவளது முகத்தைப் பார்த்தன.. அவன் முகம் இறுகியது..

'வருங்காலக் கணவனாமே.. எவ்வளவு தைரிய மிருந்தால் என்னிடமே இதைச் சொல்லுவாள்..'

அவள் முகத்தில் தண்ணீர் தெளிக்கும் எண்ணத்தைக் கைவிட்டு அவளது தலைமாட்டில் அமர்ந்தான்.. மனம் தீவிரமான யோசனையில் இறங்கியது..

அவளது வாயிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகள் அவனைக் கோபத்தில் கொதிக்கும் அக்கினியாக்கி விட்டிருந்தன.. அதுவரை அவன் மனதில் இருந்த திட்டமே வேறு..

பிரதீப்.. சுகுணாவை மணக்க முடிவு செய்து விட்டான்.. ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி சம்யுக்தாவை தவிர்த்து விடுவான்.. அந்த நேரம் பார்த்து பார்த்தசாரதியையும் குந்தவையையும் பலராமனிடம் அனுப்பி.. சம்யுக்தாவை முறைப்படி பெண் கேட்டு திருமணம் முடித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அவனது எண்ணமாக இருந்தது.

சம்யுக்தாவை சந்தித்த பின் அவளைத் தினமும் பார்க்காமல் அவனால் இருக்க முடியவில்லை.. அதனால் அவளைத் தன்னைப் பார்க்க வர வைக்கத்தான் வெறுமனே மிரட்டி வைத்தான்.. அவளும் பார்க்க வந்தாள்..

மெல்ல மெல்ல பழைய காதலை அவள் மனதில் தூண்டிவிட வேண்டும்.. பிரதீப்பின் விலகலுக்குப் பின் அவனிருப்பது எந்தக் காரணம் கொண்டும் அவளுக்குத் தெரிந்துவிடக் கூடாது.. தெரிந்தால் அவள் வில்லனாக அவனை நினைத்துவிடுவாள் என்றெல்லாம் யோசித்து வைத்து கவனமாய் செயல்பட்டுக் கொண்டிருந்தவனை உண்மையிலேயே வில்லனாக்கி விட்டாள் சம்யுக்தா.. அவள் அறியாமல் பேசிய வார்த்தைகள் அவனை

எந்த முடிவிற்கு கொண்டு சொல்லப் போகின்றன என்பதை அறிந்திருந்தால் அவள் வாயே திறந்திருக்க மாட்டாள்தான்.. ஆனால்.. யார் பேசும் வார்த்தைகள்.. என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றன என்பதை யார்தான் அறிவார்..?

மாலை மயங்கி இருள் சூழ்ந்துவிட்டது.. சம்யுக்தா விடம் இன்னும் அசைவு தென்படவில்லை.. அதற்குள் ஒரு முடிவுக்கு வந்துவிட்ட திலீபன் தன் செல்போனை எடுத்தான்.. அவனுடைய செகரெட்டரிக்கு போன் செய்தான்..

"சதீஷ்.. அம்மா சென்னைக்கு வரணும்னாங்க.. வேண்டாம்ன்னு சொல்லிவிடு.. அதை நான் சொல்ல முடியாது.. நான் உடனடியாக கனடா போக வேண்டி

யிருக்கிறது.. அங்கிருந்து சூறாவளிச் சுற்றுப்பயணமாய் வேறு சில நாடுகளுக்கும் போக வேண்டிய வேலையிருக்கிறது.. நான் இந்தியா திரும்ப ஒரு வருடம்கூட ஆகலாம்.. எல்லா பிராஞ்சுகளுக்குமான பொறுப்பை நீ எடுத்துப் பார்த்துக் கொள்.."

"அவ்வளவு நாள்கள் நான் பொறுப்பேற்பதா..?"

"இது முதல் தடவையில்லையே சதீஷ்... நீ அடிக்கடி இதுபோல பொறுப்புகளை எடுத்துக் கொள்பவன்தானே.."

"இருந்தாலும் இது அதிக அளவு நாள்கள் ஆயிற்றே.."

"ஓகே.. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நான் மும்பைக்கு வந்து விட்டு வருகிறேன்.. அம்மா அப்பாவை பார்த்துக் கொள்.."

சென்னை அலுவலகத்திற்கு போன் பேசி தன் வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றிக் கூறினான்.. பின் செல்போனை அணைத்து சட்டைப்பையில் வைத்து விட்டு சம்யுக்தாவை கையில் ஒரு குழந்தையை ஏந்துவது போல் ஏந்திக் கொண்டு காரை நோக்கிச் சென்றான்..

# 21

கார் கதவைத் திறந்து பின்ஸீட்டில் அவளை படுக்க வைத்தவன்.. அவளது தலைக்கு அணைவாக ஒரு தலையணையை வைத்துவிட்டான்.. பின் காரைக் கிளப்பி விட்டான்.. வழியில் ஒரு மெடிக்கல் ஷாப்பில் காரை நிறுத்திவிட்டு இறங்கிச் சென்றவன் மீண்டும் திரும்பி வந்து பயணத்தைத் தொடர்ந்தான்..

இரவின் இதமான அமைதியில் காரின் மெல்லிய குலுக்கலில் மயக்கம் தெளிந்துவிட்ட சம்யுக்தா.. முதலில் எதுவும் புரியாமல் அவளது கால்மாட்டில் தெரிந்த ஜன்னலின் கண்ணாடிக் கதவின் வழி வெளியே தெரிந்த நிலவைப் பார்த்தாள்.. அவளைக் கடந்து செல்லும் மரங்களின் நிழலைப் பார்த்தவள் குழப்பத்துடன்..

"அம்மா.. அம்மா.." என்று அழைத்தாள்..

காரை ஓட்டிக்கொண்டிருந்த திலீபனின் காதில் அவளது குரல் விழுந்தது.. அவன் லேசாகத் திரும்பி அவளைப் பார்த்தான்..

"அண்ணி.. அண்ணா.. எங்கேயிருக்கீங்க.." என்று அவள் புலம்பிக் கொண்டிருக்க.. கடினமான முகத்துடன் சாலையைப் பார்த்து காரை ஓட்ட ஆரம்பித்தான் திலீபன்..

"அப்பா.. நீங்களாவது சொல்லுங்க.. நீங்க எங்கே இருக்கீங்க.." அவளது கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் திலீபன் வன்மத்துடன் காரை நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டிருந்தான்..

"நான் எங்கேயிருக்கிறேன்..?" அவள் தள்ளாட்டத் துடன் எழுந்து அமர்ந்தாள்.. சுற்று முற்றும் பார்த்தாள்..

எங்கும் இருள் சூழ்ந்திருக்க.. சாலையின் மத்தியில் வெளிச்ச வெள்ளம் பாய.. கார் விரைந்து கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்த சம்யுக்தா கலவர மானாள்..

"ஐயோ.. இது என்ன.. நான் காரிலா இருக்கிறேன்..? இது எந்த இடம்..? கார் எங்கே போகிறது..?"

அவளுக்கு இப்போது முழுதாக நினைவு திரும்பி விட்டது.. பூங்காவில் திலீபன் அவளை அடித்ததும் தான் மயக்கமடைந்து விட்டதை நினைவுக்கு கொண்டு வந்தாள் பதறினாள்..

"திலீபன்.."

"என்னடி..?"

அவன் அலட்சியமாக வினவினான்.. அவனது குரலில் தெரிந்த கொதிப்பு அவளை அச்சுறுத்தியது.. அவன் பழைய திலீபனாக இல்லை என்பதை அவனது குரல் அவளுக்கு உணர்த்தியது..

"என்ன செய்கிறீர்கள்..?"

"பார்த்தால் தெரியவில்லையா..? காரை ஓட்டிக் கொண்டிருக்கிறேன்.."

"எங்கே போகிறீங்க..?"

"அதைத் தெரிந்து என்ன செய்யப் போகிறாய்..?"

"வேண்டாம் திலீபன்.."

"ஏய்.. நீ எனக்கு வேண்டும்டி.."

"நீங்கள் தவறுக்கு மேல் தவறு செய்கிறீங்க.."

"அதை நீ சொல்லாதே.. என்னை இந்தத் தவறை செய்ய வைத்தவள் நீதான்.. உனக்கு இதைச் சொல்ல தகுதி இல்லை.."

"என் வீட்டில் என்னைத் தேடுவாங்க திலீபன்.."

"தேடட்டும்.."

"இளம்வயதுப் பெண் காணாமல் போனா வீட்டில் கண்டபடி கதை கட்டி விடுவாங்க திலீபன்.."

"கட்டி விடட்டும்.."

"உங்களுக்கு இரக்கமே இல்லையா..?"

"இல்லை.."

"நீங்கள் மனிதனே இல்லை.. ராட்சஸன்.."

"அந்த ராட்சஸனைப் பார்த்துத்தான், எண்ணத்தால் உன்னைத் தொடர்ந்தேன்.. ஒரு கொடிபோல் நெஞ்சில் படர்ந்தேன்னு நீ பாடினாய்.."

"அந்த ஒரு நாளை நீங்கள் விடவே மாட்டீங்களா.."

"எப்படிடீ மறக்க முடியும்..? இந்தப் பாட்டைக் கேட்கிறாயா..?"

திலீபன் காரில் இருந்த சிடி பிளேயரை போட்டு விட.. பாடல் ஒலித்தது.. கூடச் சேர்ந்து அவனும் பாடினான்.

"ஒரு நாள்.. அந்த ஒரு நாள்..

உன்னை முதலில் கண்ட அந்தத் திருநாள்..

அது மறந்துபோகுமா..?"

சம்யுக்தாவிற்கு பயத்தில் நா உலர்ந்து விட்டது.. இப்படி ஒரு நிகழ்வை அவள் நினைத்தும் பார்க்க வில்லை.. அவள் கிளம்பி வரும்போது அடுத்த தெருவில் இருக்கும் கோயிலுக்குப் போய்விட்டு வருவதாகத்தான் பூரணியிடம் சொல்லியிருந்தாள்.. சம்யுக்தா அடிக்கடி அந்தக் கோயிலுக்குச் செல்லும் வழக்கமுள்ளவள் என்பதால் வீட்டில் யாருக்கும் சந்தேகம் வரவில்லை.. அவளும் இரண்டு தெரு தள்ளி வந்து ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு திலீபனைப் பார்க்க பூங்காவிற்கு வந்தாள்..

'என்ன காரியம் செய்துவிட்டேன்.. நிச்சயதார்த்தம் நடந்த மண்டபத்தில் இவன் என்னை வந்து மிரட்டியதுமே நான் எல்லாவற்றையும் அப்பாவிடமும்.. அண்ணனிடமும் சொல்லியிருக்க வேண்டும்.. அவர்கள் என்னைத் தவறாக நினைத்து விடுவாங்கன்னு பயந்தது இப்போது எங்கே கொண்டு போய் என்னை நிறுத்திவிட்டது..'

காரிலிருந்து குதித்துவிடலாமா என்ற யோசனை யுடன் அவள் காரின் கதவைத் திறக்க முயற்சித்தாள்.. அது திறக்கவில்லை..

"இந்தக் காரின் கதவுகள் யார் கை வைத்தாலும் திறக்காது.. இது என் மனக்கதவைப் போல.."

திலீபன் பல்லைக் கடித்துக் கொண்டு அவளைத் திரும்பி பார்த்துச் சொன்னான்... அந்த இருளிலும் தெரிந்த அவனின் கண்களின் ஜ்வலிப்பைக் கண்டு அவள் வேட்டையாடப்படும் மானாக நடுங்கினாள்..

# 22

சம்யுக்தா.. தாள முடியாமல் விம்மி அழுதாள்.. அவளின் அழுகை திலீபனைப் பாதித்ததாகவே தெரிய வில்லை.. அவன் தன்போக்கில் சீட்டியடித்தபடி காரை ஓட்டிக் கொண்டிருந்தான்..

"என்னை என் வீட்டில் கொண்டு போய் விட்டு விடுங்கள்.."

"உன் வீட்டில்தான் விடப் போகிறேன்.."

"நிஜமாகவா..?"

"நிஜமாகத்தான்.."

"அதற்கு சென்னைக்கில்ல போகனும்..?"

"உன் வீடு சென்னையில் இல்லையே.."

சம்யுக்தாவின் வயிற்றில் அமிலம் சுரந்தது.. இவன் இவ்வளவு இரும்பு மனம் கொண்டவனாக இருப்பான் என்று கொஞ்சமும் அவள் நினைத்துப் பார்த்ததில்லை.. நினைத்ததை வாய்விட்டுச் சொன்னாள்..

"உங்கள் மனம் கல்லாலும் இரும்பாலும் ஆனதா..?"

"இல்லை.. காதலாலும் அன்பாலும் ஆனது.. அதைத்தான் நீ சுக்கு நூறாய் உடைத்து விட்டாயே.."

"நீங்கள் செய்யும் இந்தக் காரியத்தால் வரப் போகும் பின்விளைவுகளைப் பற்றிக் கொஞ்சமாவது நினைத்துப் பார்த்தீங்களா..?"

"நான் நினைக்க வேண்டியது நிறைய இருக்கிறது.. அதனால் இதைப் பற்றி நினைக்க எனக்கு நேரமில்லை.. எனக்குப் பதில் நீயே நினைத்துக்கொள்.."

"அலட்சியம் வேண்டாம் திலீபன்.. நீங்கள் என்னைக் கடத்திக் கொண்டு வந்திருக்கிறீங்க.. இதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.."

"ஓகே.. நினைவில் வைத்துக் கொள்கிறேன்.."

"இது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா..?"

"குற்றம்தான்.. என்னை விசாரித்தால் குற்றம்.. நடந்தது என்னன்னு புலனாய்வு செய்யச் சொல்லி ஆறு வருடக் கதையையும் அவிழ்த்துவிடுவேன்.. பரவா யில்லையா..?"

"அதற்காக நீங்கள் செய்வது நியாயமாகி விடாது.."

"அநியாயமும் ஆகிவிடாது.."

"எனக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகியிருக்கிறது.."

"இனி நான் உன்னைத் திரும்பக் கொண்டு போய் உன் பிறந்த வீட்டில் விட்டாலும் விடிந்துவிடும்.. ஒரு நாள் இரவு பூராவும் என்னுடன் இருந்தவளை எப்படி அந்த பிரதீப் கல்யாணம் செய்து கொள்வான்..?"

"பாவி.."

"தேங்க்யூ.."

"நீ நன்றாகவே இருக்க மாட்டாய்.."

"மரியாதை பலமாக இருக்கிறது.."

"உனக்கெல்லாம் எதற்குடா மரியாதை..?"

"சரி வேண்டாம்.. அதை நீயே வைத்துக்கொள்.. நான் உன்னிடம் போய் அதையெல்லாம் எதிர்பார்ப்பேனா..? என்னை எப்படி வேண்டுமானாலும் கூப்பிட்டுக் கொள்ளும் உரிமை உனக்கு மட்டும்தானே இருக்கிறது.."

"ஏண்டா.. என்னை இப்படிக் கொல்லுகிறாய்..?"

"நீ ஆறு வருடங்களாய் இரவும் பகலும் என் நினைவில் நின்று என்னை அலைக்கழித்தாயே.. அதை விடவா நான் உன்னைக் கஷ்டப்படுத்தி விட்டேன்.."

"தெரியாத்தனமாய் செய்துவிட்ட சிறு தவறுக்காக இப்படி என் வாழ்க்கையையே சின்னாபின்னமாக்கி விட்டாயே.."

"இன்னும் நான் உன்னைத் தொட்டு ஆளவில்லை.. அதற்கு முன்னாலேயே இப்படி ஒரு பட்டத்தை கொடுக்கிறாயே.."

"என்னைத் தொடாமல் எப்படி காருக்குள் கொண்டு வந்தாய்..? மந்திரம் போட்டாயா..?"

"மந்திரம் போட உனக்குத்தானே தெரியும்.. பார்வையால் மந்திரம் போடத் தெரியும்.. பாட்டால் மந்திரம் போடத் தெரியும்.. உன்னைத் தொட்டுத் தூக்கி வந்தது உண்மைதான்.. ஆனால், மயக்கத்தில் கிடந்தவளிடம் என் வேகத்தைக் காட்ட எனக்கு விருப்பமில்லை.. ஆனால், அது தப்புன்னு நீ நினைப்பது போல் இருக்கிறது.. அந்த மரத்தடியில் காரை நிறுத்திவிடவா..?"

அவ்வளவு நேரமும் இருந்த தைரியம் பறந்தோடி விட, சம்யுக்தா குலை நடுங்கி விட்டாள்..

"ஐயோ.. சாமி.. அப்படியெல்லாம் செய்துவிடாதீங்க.."

"இதைப் பாருடா.. திரும்பவும் மரியாதை கொடி கட்டிப் பறக்குதே.."

"என்னை மன்னித்து விடுங்கள் திலீபன்.."

"மன்னித்துவிட்டேன் சம்யுக்தா.. உன்னை மன்னிக் காமல் வேறு யாரை நான் மன்னிக்கப் போகிறேன்.. சொல்லு.."

"நடந்ததை மறந்துவிடுங்கள்.."

"இதுதான் உன்னிடம் எனக்குப் பிடிக்காத ஒன்று.. எதை மறக்கச் சொல்கிறாய்.. நீ என்னை சைட் அடித்ததையா..? இல்லை, இன்றைக்கு ஈவினிங் அந்த பிரதீப்தான் உன் வருங்காலக் கணவன்னு வாயடித்தாயே.. அதை மறக்கச் சொல்கிறாயா..?"

"நமக்குள் சமாதானமாக போய்விடலாம்.."

"ம்ம்.. போய்விடலாம்.."

"நான்தான் மன்னிப்பு கேட்டுவிட்டேனே.. அதனால்.."

"அதனால்..?"

"என்னை என் அப்பா அம்மாவிடம் கொண்டு போய் விட்டு விடுங்கள் திலீப்.. நான் உங்களைப் பற்றி யாரிடமும் சொல்ல மாட்டேன்.. நீங்கள் என்னைக் கடத்தியதைப்

பற்றி யாரிடமும் மூச்சுவிட மாட்டேன்.. ப்ளீஸ்.. என்னை நம்புங்கள்.. என்னை ரவுடிகள் கடத்தப் பார்த்தாங்க.. நீங்கள் என்னைக் காப்பாற்றி வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தீங்கன்னு பொய் சொல்லி விடுகிறேன்.. சென்னைக்கு காரைத் திருப்புங்க திலீபன்.. ப்ளீஸ்.. எனக்காக.."

அதுவரை பொறுமையாய் அவளைப் பேசவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்த திலீபன் கடகடவென்று சிரித்தான்..

# 23

நள்ளிரவைத் தாண்டிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் காருக்குள் தனியாக திலீபனிடம் அகப்பட்டிருந்த சம்யுக்தா.. அவனுடைய சிரிப்பைக் கண்டு பயந்து விட்டாள்..

"ஏன் சார் இப்படிச் சிரிக்கறீங்க..?"

"சிரிக்காமல் வேறு என்ன செய்யச் சொல்கிறாய்..? ஒன்றை நீ புரிந்து கொள்வது நல்லது சம்யுக்தா..?"

"சொல்லுங்கள் சார்.."

"பயம் வந்துவிட்டால் 'சார்' என்கிறாய்.. கோபம் வந்துவிட்டால் 'டாய்..' என்கிறாய்.. நீ பயங்கர விவரம் தான் சம்யுக்தா.. பிழைத்துக் கொள்வாய்."

'எங்கே பிழைப்பது..? நீதான் என்னைக் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு கடத்திக் கொண்டு இருக்கிறாயே..'

"இது ஒருவழிப் பாதை சம்யுக்தா.."

திலீபன் இப்படிச் சொல்லவும்.. சம்யுக்தா திருதிரு வென விழித்தாள்.. எதிரே வண்டிகள் வராமல் அகன்று விரிந்திருந்த நெடுஞ்சாலையைப் பார்த்தபடி..

"இல்லையே.. இது நான்கு வழிச் சாலை போல இருக்கிறதே.." என்று கூறினாள்..

"அறிவுக் கொழுந்துதான் போ.. அது எப்படி சம்யுக்தா புரியக்கூடாததை சட்டென்று புரிந்து கொள்கிறாய்.. புரியவேண்டியதை மட்டும் புரிந்து கொள்ள மறுக்கிறாய்..?"

"எனக்கு உண்மையிலேயே நீங்கள் சொல்வது புரியவில்லை.."

"என்னுடன் நீ வந்திருக்கும் இந்தப் பயணம் ஒருவழிப் பாதை.. இனி எப்போதுமே நீ உன் பிறந்த வீட்டிற்குத் திரும்ப முடியாது.."

'இது என்ன.. இவன் இப்படிச் சொல்கிறான்..'

சம்யுக்தாவிற்கு கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது..

"திலீபன்.. ப்ளீஸ் திலீபன்.. என்னைக் கொண்டு போய் என் வீட்டில் விட்டுவிடுங்கள்.. நான் வேண்டு மானால் என் அப்பாவிடம் சொல்லி இந்தக் கல்யாணத்தை நிறுத்திவிடுகிறேன்.."

"அதை நீ என்ன நிறுத்துவது..? அது எப்போதோ நின்றுவிட்டது.. உனக்கு ஒரு உண்மையைச் சொல்கிறேன் கேளு.."

"என்ன உண்மை..?"

"நீ உன் வருங்காலக் கணவனாக வருவான்னு ஆசையாய் நினைத்துக் கொண்டிருக்கிறாயே.. அந்த பிரதீப்.. ஒரு பணத்தாசை பிடித்தவன்.. சுயநலவாதி.."

"நான் இதை நம்ப மாட்டேன்.."

"நம்பினால் நம்பு.. நம்பாவிட்டால் போ.. அதனால் எனக்கு ஒன்றும் நஷ்டமில்லை.. உன் நகைகளை விற்று அவனுடைய கடனை அடைக்கப் போவதாக அவன் என்னிடமே கூறினான்.."

"இருக்காவே இருக்காது.. அவர் பக்கா ஜென்டில் மேன்..."

"அவன் ஜென்டில்மேனுன்னா நான் யார்..? அயோக்கியனா..? மாட்டுக்கு எப்போதும் சாட்டையுடன் இருப்பவனைப் பார்த்தால்தான் பிடிக்கும் போல.."

"நீங்கள் வேண்டுமென்றே சொல்கிறீங்க..?"

"அதனால் எனக்கு என்ன லாபம்..? நீ உன் மனதில் என்னை நினைத்தாலும் சரி.. நினைக்கா விட்டாலும் சரி.. நான் அதைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லைனும் போது..

நான் ஏன் அவனைப் பற்றித் தேவையில்லாமல் சொல்ல வேண்டும்..?"

"உங்களுக்கு அவர்மேல் பொறாமை.."

"'அவர்..?' எவர் அந்த அவர்..? அந்தக் குட்டிச்சுவர்.. உனக்கு சீதனமாக தரப்போகும் காரைக்கூட முன்கூட்டியே விலை பேசிவிட்டான்.. உன்னை அவன் வீட்டு வேலைக் காரியாக்க முடிவு பண்ணியிருந்தான்.."

"ஒரு வீட்டுக்கு மருமகளாக போகும் பெண்.. வீட்டு வேலைகளைப் பகிர்ந்து கொள்ளத்தானே வேண்டும்..?"

"அப்படி ஒரேயடியாக நியாயம் பேசிவிடாதே.. அவன் வீட்டில் வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொள்ளும் உத்தேசம் யாருக்குமே இல்லை.. எல்லாவற்றையும் உன் தலைமேல் கட்ட முடிவு செய்திருந்தாங்க.."

"உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரியும்..?"

"அவனே சொன்னான்.."

"ஆமாம்.. உங்களைத் தேடிவந்து அவர் வீட்டு ரகசியங்களையெல்லாம் சொன்னார்.. யார் காதில் பூ சுற்றப் பார்க்கறீங்க.."

"உன் தலையில் வேண்டுமானால் பூ சுற்றப் பார்க்கிறேன்னு சொல்லு.. காதில் பூச்சுற்றுகிறேன்னு சொல்லாதே.. எனக்கு அது பிடிக்காது.."

"எனக்கும்தான் நீங்கள் இப்படிப் பேசுவது பிடிக்க வில்லை.."

"எனக்கென்ன வேண்டுதலா.. உன்னிடம் இதை பேச வேண்டும்ன்னு..? என்னவோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன்.."

"இது மட்டும்தானா.. இன்னும் இருக்கிறதா..?"

"இருக்கிறதே.."

"அது என்ன புதுக்கதை..?"

"புதுக்கதைதான்.. என் ஆபீஸில் வேலை பார்க்கும் சுகுணாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாக அவன் வாக்கு கொடுத்துவிட்டான்.."

"குட் ஜோக்.."

"அப்படியா.. நன்றாக சிரித்துக் கொள்.."

"உங்களை நல்லவர்னு நினைத்தேன்.. நல்லவர் ஒருவரைப் பற்றி இவ்வளவு அபாண்டமாய் பேசுவீங்கன்னு இப்போதுதான் தெரிந்து கொண்டேன்.."

"ம்ஹூம்.. நல்லதுக்கு காலமில்லைம்மா.."

"நீங்கள் முதலில் நல்லவராக இருந்து கொண்டு நல்லதை நினைத்து கவலைப்படுங்கள்.. காரை சென்னைக்கு திருப்புங்கள்.."

# 24

சம்யுக்தாவை திலீபன் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை.. அவள் பேச்சை லட்சியம் பண்ணிக் கொள்ளவு மில்லை.. அவன் தன் போக்கில் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.. ஏதோ ஒரு பெரிய ஊர் வரப் போவதற்கான அறிகுறி தென்பட ஆரம்பித்தது.. தூரத்தில் விளக்குகளின் வெளிச்சப் புள்ளிகள் தெரிய.. சாலையில் கட்டடங்கள் தென்பட ஆரம்பித்தன..

'ஆனால், இவன் பைபாஸில் அல்லவா போய் கொண்டிருக்கிறான்.. ஊருக்குள் போக மாட்டானே..'

அவனை ஊருக்குள் காரை செலுத்த வைத்து.. ஏதாவது ஒரு ஹோட்டலில் இறங்க வைக்க வேண்டு மென்று சம்யுக்தா முடிவு செய்தாள்..

அப்போதுதானே மக்கள் கூட்டத்தின் மத்தியில் கூச்சல் போட்டு அவன் அவளைக் கடத்திக் கொண்டு போகிறான் என்பதைச் சொல்ல முடியும்..

"எனக்குப் பசிக்கிறது.." என்றாள் சம்யுக்தா..

"அதற்காக என்ன செய்யவேண்டும் என்கிறாய்.." அவன் தலையைத் திருப்பாமல் அலட்சியமாகக் கேட்டான்.

"ஊருக்குள் வண்டியை விடுங்கள்.."

"விட்டு..?"

"ஏதாவது ஒரு ஹோட்டலில் காரை நிறுத்துங்கள்.."

"நிறுத்தி..?"

"நாம் இரண்டு பேரும் இறங்கிப் போய் சாப்பிடலாம்."

"அதாவது.. நாம் இறங்குவோம்.. நீ உடனே.. கத்திக் கூச்சல் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ணி என்னைக் காட்டிக் கொடுப்பாய்.."

'இவன் கெட்டிக்காரன்.. நான் நினைத்தை அப்படியே சொல்லித் தொலைக்கிறானே..!' பற்றிக் கொண்டு வந்தது சம்யுக்தாவிற்கு..

"அப்படியெல்லாமில்லை.. உண்மையிலேயே எனக்கு பசிக்கிறது.."

"அப்படியா.. இதோ.. இதைப் பிடி.."

காரின் உள் விளக்கைப் போட்டுவிட்ட திலீபன்.. முன்பக்க அலமாரியைத் திறந்து உணவுப் பொட்டலத்தை எடுத்து அவள் கையில் கொடுத்தான்.. கூடவே ஒரு தண்ணீர் பாட்டிலையும் கொடுத்தான்..

"என்ன இது..?"

"பிரித்துப் பார் தெரியும்.."

"டிபன் பொட்டலம் போல இருக்கிறதே.."

"பரவாயில்லையே.. கண்டுபிடித்துவிட்டாய்.. பசிக்கிறதுன்னு சொன்னாயே.. இதைச் சாப்பிடு.."

"எனக்கு வேண்டாம்.."

"நீதானேம்மா பசிக்குதுன்ன..?"

"இப்போது பசிக்கவில்லை.."

"அப்படியா.. பொட்டலத்தை இப்படிக் கொடு.. நான் அந்த மரத்தடியில் காரை நிறுத்திவிட்டு உனக்கு ஊட்டி விடுகிறேன்.."

"வேண்டாம்.. வேண்டாம்.."

"அப்போ.. வாய் பேசாமல் சாப்பிடு.. என்னுடன் பேசவாவது உனக்குத் தெம்பு வேண்டாமா..?"

'அதுதானே.. சான்ஸ் கிடைத்தால் தப்பித்து உன்னை விட்டு ஓட எனக்குத் தெம்பு வேண்டும்தான்..'

சம்யுக்தா அவசரமாய் உணவுப் பொட்டலத்தை காலி செய்தாள்.. அவளது பசியை அப்போதுதான் உணர்ந்தவள்.. பசியில் வேகமாய் ஒரு உணவுப் பொட்டலத்தை முடித்து விட்டு நிமிர.. மற்றொன்றை எடுத்து நீட்டினான் திலீபன்.. வேண்டாமென்று மறுக்க மனம் துடித்தது.. ஆனால், வாங்கிக் கொள் என்று பசி தடுத்தது.. கடைசியில் பசி வெல்ல.. சம்யுக்தா இன்னொரு பொட்டலத்தையும் விழுங்கி முடித்து ஒரு பாட்டில் தண்ணீரையும் ஒரே மூச்சில் குடித்துவிட்டு "அப்பாடி.." என்று ஸீட்டில் சரிந்து அமர்ந்து கொண்டாள்..

"ம்ஹும்.. ஆயிரம் மரங்களை வெட்டிப் போட்ட வர்களுக்குக் கூட இவ்வளவு களைப்பு இருக்காது.." என்றான் திலீபன் கேலியாக..

"உண்டு முடித்த களைப்பு தொண்டருக்கும் உண்டு.."

"தொண்டருக்குத்தானே உண்டு..? நீயென்ன தொண்டு செய்தாய்..?"

"உங்களை பிடித்துக் கொடுக்காமல் நிச்சயதார்த்த மண்டபத்தில் வாயை மூடிக்கொண்டு இருந்தேனே.. அதுவே பெரிய தொண்டு.."

"ஓஹ்.. அப்படியா..? அதற்கு ஒரு ஆறு வருடங்களுக்கு முன்னால் ராத்திரி முழுவதும் என்னை சைட் அடித்தீங்களே மேடம்.. அது இந்த பெரிய தொண்டையும் விட பெரிய தொண்டு.. அதை மறந்து விட்டுப் பேசுகிறீங்களே.."

சம்யுக்தா.. ஸ்விட்ச் போட்டாற்போல் வாயை இறுக மூடிக்கொள்ள.. திலீபன் மீண்டும் சிரித்தான்..

"என்னடி.. பேச்சையே காணோம்.."

"என்னை 'டீ' போட்டுக் கூப்பிடக் கூடாது.."

"அது என் இஷ்டம்.. அதை நீ சொல்லக்கூடாது.."

"உங்கள் இஷ்டப்படி என்னைக் கூப்பிட நீங்கள் யார்..?"

"உன் புருஷன்.."

"என்னது..!"

சம்யுக்தா அதிர்ந்துபோய் வினவ.. திலீபன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.. இப்போது நிலவின் மெல்லிய ஒளியில் அவன் முகத்தைப் பார்க்கப் பழகியிருந்தாள் சம்யுக்தா.. அந்த மெல்லிய வெளிச்சத்திலும் அவன் முகம் பாறை போல் கடினமாக இறுகியிருந்ததை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது..

"என்னடி, இவ்வளவு அதிர்ச்சியைக் காண்பிக் கிறாய்..? பணம் அதிகமிருக்கிறது என்பதற்காக நிச்சயம் செய்த மறுவினாடியே கல்யாணத்தை நிறுத்துகிற அந்த கேடுகெட்ட பிரதீப்பை உன் வருங்கால புருஷன்னு சொல்லலாம்.. எனக்காக ஏங்கிப் பாட்டுப் பாடினாயே.. என்னை உன் புருஷன்னு சொல்லிக்கக் கூடாதா..?"

சம்யுக்தாவிற்கு அழுகை வந்துவிட்டது..

# 25

விழிகளில் வழிந்த கண்ணீர்.. துடைக்கத் துடைக்க நிற்காமல் வழிந்து கொண்டே இருக்க.. சம்யுக்தா மெதுவாக விம்மிக் கொண்டிருந்தாள்.. அவளது கண்ணீரை லட்சியம் செய்யாமல் திலீபன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்..

"கில்லாடிடீ நீ... தேவையானபோது மட்டும் பேசுவாய்.. உனக்கு தேவையில்லைன்னு நீ நினைக்கும் போது பேச்சு வந்துவிட்டால் வாயைத் திறக்கவே

மாட்டாய்.. ஆனால்.. ஒன்றுதான் எனக்குப் புரியவில்லை சம்யுக்தா.."

"என்ன..?"

"எனக்காக ஏங்கித்தானே அன்றைக்கு நீ பாடினாய்.. இன்று நானே என்னை உன்னிடம் கொடுக்க வந்திருக்கிறேன்.. இப்போது மட்டும் ஏன் இப்படி அழுகிறாய்..?"

"திலீபன்.. அன்றைக்கு கதையே வேறு.. இன்றைய நிலையே வேறு.."

"அன்றைக்கு இருந்தவள்தானே இன்றைக்கும் இருக்கிறாய்..?"

"ஆறு வயதில் போட்ட டிரெஸ்ஸை பதினாறு வயதில் போட முடியுமா...? அறிவுகெட்டதனமாய் பேசாதீங்க.."

"நீ அறிவுள்ளவள் என்பதைத்தான் எப்போதோ கண்டுபிடித்து விட்டேனே.. ஆறு வருடங்களுக்கு முன்னால் உன் கண்ணில் தெரிந்த அந்த அறியாமையும் கள்ளமில்லாத தன்மையும் இப்போதுதான் காணாமல் போய் விட்டதே.. என்னை ஏமாற்ற நினைக்கும்

சாகசம் வந்து விட்டது.. என்னைக் கன்வின்ஸ் பண்ணித் துரத்தத்தானே அந்தப் பூங்காவிற்கு வந்து நின்றாய்.. நீ அறிவுக்காரிடி... உன்னை ஆறு வருடங்களாய் தேடி அலைந்தேன் பார்.. நான் அறிவுகெட்டவன்தான் புத்திசாலி இல்லைதான்.."

சம்யுக்தாவின் மனம் வலித்தது.. அவளது கண்ணீர் இன்னும் அதிகமானது..

"நான் அப்படிப்பட்ட அர்த்தத்தில் சொல்லவில்லை திலீபன்.."

"எப்படிச் சொன்னாலும் உண்மையைத்தான் சொன்னாய்.."

"அன்று நான் உங்களை ஏமாற்ற நினைக்க வில்லை திலீபன்.."

"இன்றைக்கு ஏமாற்ற நினைத்தாய்.."

"எனக்கு அதெல்லாம் தெரியாது திலீபன்.. நான் கனவிலும் யாருக்கும் கெடுதல் நினைத்தது இல்லை.. இதை நீங்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் சொல்லித்தான் ஆகனும்.."

"நானும்கூட ஒன்றைச் சொல்கிறேன்.. கேட்டுக் கொள்.. ஆறு வயதிலிருக்கும் அதே மனம்தானே பதினாறு வயதிலும் இருக்கிறது..? மனம் வளர்ச்சி யடைந்திருக்கலாம்.. மாறலாமா..? ஆறு வயதில் 'அம்மா' என்று கூப்பிட்ட உன் தாயை பதினாறு வயதில் 'அத்தை'

ன்னா கூப்பிடுவாய்..? உறவுகள் மாறி விடுமா..? அதே போல்தான் இதுவும்.. ஆறு வருடங்களுக்கு முன்னால் எனக்கு மாலையிட நீ ஆசைப்பட்டாய்.. நீ ஆசைப்பட்ட ஒரே காரணத்தினால் நான் உன் மாலைக்காக என் கழுத்தை நீட்ட வந்தேன்.. ஆனால்.. நீ என்னை இப்படி வில்லனாக்கி விட்டாயே சம்யுக்தா.."

திலீபனின் வார்த்தைகள் லேசாக நடுங்குவதை உணர்ந்துகொண்ட சம்யுக்தாவின் இதயத்தை யாரோ சம்மட்டியால் அடிப்பதைப் போல இருந்தது..

அதுவரை தன்னிலேயே இருந்தவள் முதன் முறையாக அவனின் தரப்பில் இருந்த நியாயத்தை யோசிக்க ஆரம்பித்தாள்.. ஆனால்.. எவ்வளவுதான் அவனுக்காக யோசித்தாலும் அவன் தன்னைக் கடத்திக் கொண்டு வந்திருக்கும் இந்தச் செயலை மட்டும் அவளால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை..

சம்யுக்தா செய்ததில் அவன் என்ன தவறைக் கண்டு விட்டான் என்பதுதான் அவளுக்கு இன்னும் புரியவில்லை.. அவனது நிலை வேறு.. அவளது நிலை வேறு.. அவன் ஆண்.. இருபத்து எட்டு வயதில் ரயிலில் சந்தித்த ஒரு பெண்ணிற்காக ஆறு வருடங்களை வீணாக்கி முப்பத்து நான்கு வயது வரை திருமணத்தை தவிர்த்திருக்க அவனால் முடியும்..? அதுவே ஒரு பெண்ணால் முடியுமா..? இந்திய சமுதாயத்தில் ஆணுக்கு இருக்கும் உரிமைகளும் அங்கீகாரங்களும் ஒரு பெண்ணுக்கு என்றுமே இருந்த தில்லை.. அதிலும் சம்யுக்தா நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த பெண்.. ஜாதகம் பொருந்தியிருக்கிறதா.. வேலை படிப்பு எல்லாம் திருப்திகரமாக இருக்கிறதா என்று பார்த்து குடும்பத்தின் பொருளாதார நிலைமையை யோசித்து வீட்டினராக ஒரு மணமகனை முடிவு செய்து கடைசி வினாடியில் அவளிடம் 'சம்மதமா..' என்று ஒரு வார்ததை ஒப்புக்காக கேட்பார்கள்.. அவளும் உடனே சம்மதம் என்றுதான் சொல்லியாக வேண்டும்..

அவள் மட்டும் வீட்டினருக்கு பிடித்த மணமகனை மணக்க விருப்பமில்லை என்று கூறி நிராகரித்து விட்டாளென்றால் ஆயிரம் கேள்விகளைச் சந்திக்க வேண்டியதிருக்கும்..

ஏன் பிடிக்கவில்லை..? அவனிடம் என்ன குறையைக் கண்டாய்..? இவனைப் பிடிக்கவில்லையென்றால்.. வேறு யாரை உனக்குப் பிடித்திருக்கிறது..? உன் மனதில்

வேறு யாரும் இருக்கிறார்களா..? இதைத் தான் நீ வெளியில் போய் படித்துவிட்டு வந்தாயா..? இதற்குத்தான் பெண்பிள்ளைகளுக்கு அதிக படிப்பைக் கொடுக்கக் கூடாது என்பது..

இவையெல்லாம் திலீபனுக்குத் தெரியுமா..? பிரதீப்பை திருமணம் பண்ணிக் கொள்ளப் போவதற்கு இவ்வளவு ஆத்திரப்படுகிறானே.. அவனுக்கு முன்னால் ஏறக்குறைய ஒரு டஜன் மாப்பிள்ளைகள் வந்து அவளைப் பெண் பார்த்துவிட்டுப் போன கதையை அறிந்தால் என்ன சொல்வான்..?

அவன் கோடீஸ்வரன்.. நினைத்தபடி அவன் இருக்கலாம்.. ஆனால், சம்யுக்தா..? நிமிர்ந்து பார்த்து நடக்கக்கூடப் பயப்பட வேண்டிய மத்திய தர குடும்பத்தைச் சேர்ந்தவள்.. மனதில் நினைத்தபடி இருக்க அவளால் முடியுமா..? மனதின் ஆசைகளுக்கு மரியாதை செலுத்த அவளால்தான் இயலுமா..? இதை ஏன் திலீபன் புரிந்து கொள்ள மறுக்கிறான்..

# 26

சம்யுக்தா கண்ணீர் வற்றிப் போனவளாக ஜன்னல் கண்ணாடிக் கதவுகளின் வெளியே தெரிந்த வெளியுலகத்தை இலக்கின்றி வெறித்துப் பார்த்துக் கொண்டு வந்தாள்.. இருள் மறைந்து வெளிச்சத்தின் ரேகைகள் படிய ஆரம்பித்திருந்தன... கண்ணாடிக் கதவுகளை இறக்க முடியாது.. திலீபன் அதற்கு அனுமதிக்க மாட்டான்.. இதமான ஏஸியின் குளிர் உடலை வருட... துப்பட்டாவை இழுத்துப் போர்த்திக் கொண்டு எதுவும் பேசாமல் ஊமையாகிப் போயிருந்தாள் சம்யுக்தா..

இனி பேசிப் பயன் என்ன என்று அவளுக்குத் தோன்றியது.. இனி திரும்பி வீட்டிற்குப் போனாலும் இரவைத்

தாண்டிவிடும் நள்ளிரவு நேரத்தில்தான் போய் நிற்க வேண்டும்.. இரண்டு நாள்களாக காணாமல் போய் விட்டு திரும்பி வரும் பெண்ணை எந்தக் கேள்வியுமின்றி அவளுடைய வீடும் இந்தச் சமுதாயமும் ஏற்று கொள்ளுமா..?

சாலையோர டீக்கடை ஒன்றின் முன் காரை நிறுத்தினான் திலீபன்.. இறங்கிச் சென்று இரண்டு கப்களில் டீயை வாங்கி வந்தான்..

"இந்தா குடி.."

மறுத்துப் பிரயோஜனமில்லை என்பதால் வாங்கிக் குடித்தாள்.. அவன் கதவை மறுபடி திறந்தபோது காரைக் கடந்து நடந்துபோன இருவர்..

"எந்தா பறஞ்சு..?" என்று பேசிக் கொண்டு போனது காதில் விழுந்தது..

'இது மலையாளம் போல் இருக்கிறதே..' சம்யுக்தா துணுக்குற்று டீக்கடையின் பெயர்ப் பலகையைப் படித்துப் பார்த்தாள்.. அது தமிழ் எழுத்தில்லை..

ஜிலேபியைப் பிய்த்துப் போட்டால் போல் இருந்த எழுத்துகளைக் கண்டதுமே அது வேற்றுமொழி என்பதை புரிந்து கொண்டவள்..

"இது எந்த ஊர்..?" என்று திலீபனிடம் வினவினாள்..

"உனக்குப் பெயர் தெரியவேண்டிய தேவையில்லாத ஊர்.." அவன் பட்டுக் கத்தரித்தாற் போல் பதில் சொன்னான்..

சம்யுக்தா அவனை முறைத்துப் பார்த்தாள்.

"என்ன.. பயமா..?"

"எனக்கா.. பயமா.. உன்னிடமா..? ஹ.. எதற்கு நான் பயப்பட வேண்டும் அம்மணி..?"

"என் செல்போனில் நான் இருக்குமிடத்தை என் வீட்டிற்கு சொல்லிவிடுவேன்னு தானே பயப்படு கிறீங்க..?"

"அதை.. இவ்வளவு நேரமாய் ஏன் நீ செய்ய வில்லை..?"

'அதுதானே.. என் செல்போனில் தகவல் சொல்லி விட்டால்.. நான் வீடு திரும்புவது எளிதாகி விடுமே.. இது ஏன்

இவ்வளவு நேரமாக எனக்குத் தோன்றவில்லை..'

சம்யுக்தா அவசரமாய் அவளுடைய செல்போனைத் தேடினாள்.. திலீபன்.. முன்பக்கமிருந்த கண்ணாடி வழியாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்..

"என்ன தேடு தேடுன்னு தேடுகிற, உன் செல்போன் எங்கே போச்சு..? காக்காய் தூக்கிக் கொண்டு போய் விட்டதா..?"

"என் செல்போனை கையில் தான் கொண்டு வந்தேன்.."

"ஆமாம்டி.. உலகத்திலேயே நீ ஒருத்திதான் கையினால் செல்போனைக் கொண்டு வருகிற.. மற்றவங்க எல்லோரும் காலில் கொண்டு வருகிறாங்க.."

"கடுப்பைக் கிளப்பாதீங்க.. நானே செல்போனைக் காணோம்ன்னு தேடிக்கிட்டு இருக்கிறேன்.."

"தேடாதே.. கிடைக்காது.."

"என்னவோ மர்மக் கதையின் டைட்டில் போலச் சொல்கிறீங்களே.. நான் கையில் கொண்டு வந்த செல்போன் எங்கே போகும்.."

"காணாமல் போகும்.."

"அது எப்படிக் காணாமல் போகும்..?"

"ம்ம்.. கால் முளைத்து தானாக அது என்னிடம் வந்து விட்டால்.. காணாமல்தானே போகும்..?"

"அடப்பாவி.."

"தேங்க்யூ.. பார் திஸ் காம்ப்ளீமெண்ட்.."

"என் செல்போனை நீதான் சுட்டுவிட்டாயா..?"

"ஆமாம்.. அதை பொரித்து வறுவல் போடப் போகிறேன்.."

"ஏன் இப்படிச் செய்தாய்..?"

"பேபி போல் பேசாதே.. ஏண்டி.. நானே உன்னைக் கடத்திக் கொண்டு வந்திருக்கிறேன்.. என்ன ஒன்று.. அந்தக் காலத்து வில்லன்களைப் போல பயங்கரமாய் சிரித்து நம்பியார் ஸ்டைலில் கையைத் தான் பிசைய வில்லை.... மற்றபடி மயங்கிக் கிடந்தவளைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு எஸ்கேப் ஆகிக் கொண்டிருக் கிறேன்.. உன்னிடம் செல்போனை விட்டு வைத்திருக்க நான் என்ன முட்டாளா..?

என்னை எவ்வளவு எளிதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய்..?"

செய்வதறியாதவளாக சம்யுக்தா அவனிடம் பேசுவதை நிறுத்திவிட்டு கண்களை மூடிச் சரிந்து கொண்டாள்.. அவள் கண்களில் இருந்து நீர் பெருகி வழிந்தது..

"சம்யுக்தா..."

"......"

"பேசமாட்டாயா..? ஏன் கண்ணீர் விடுகிறாய்..?"

"......"

"நீ பேசாவிட்டால் போ.. நான் பாட்டைக் கேட்கிறேன்.." திலீபன் காரிலிருந்த சிடி பிளேயரை மீண்டும் போட்டு விட்டான்.. பாடல் ஒலித்தது..

"என்னை விட்டால் யாருமில்லை..

கண்மணியே உன் கையணைக்க..

உன்னைவிட்டால் வேறொருத்தி..

எண்ணமில்லை நான் காதலிக்க..

முத்துமுத்தாய் நீர் எதற்கு..?

நானில்லையோ கண்ணீர் துடைப்பதற்கு..?"

பாடலைக் கேட்ட சம்யுக்தாவின் மனம் கனத்தது.. இவன் ஏன் இவ்வளவு தாமதமாக வந்து தொலைந்தான் என்று அவள் மனம் வருந்தியது..

# 27

"ராத்திரி நேரம் ரகசியக் கடிதம்..

எழுதியதைப் போல..

ஒரு நினைவு.."

பாடலின் வரிகள் சம்யுக்தாவை ஆறு வருடங்களுக்கு முன் அவள் சந்தித்த அந்த ரயில் பயணத்திற்கு இழுத்துச் சென்றது.. மூடிய கண்களுக்குள் அவளது முகத்தையே

ஒருவிதத் தேடலுடன் பார்த்துக் கொண்டிருந்த அன்றைய திலீபனின் விழிகளில் ஆவல் கலந்த மின்னல் தோன்றியது..

அன்று அவனுக்காக சம்யுக்தா ஏங்கியது நிஜம், அதே போல இன்று அவனிடமிருந்து தப்பி ஓட நினைப்பதும் நிஜம்.. இருவேறுபட்ட இந்த சந்தர்ப் பங்களை வாழ்க்கையில் அவள் சந்திக்க வேண்டு மென்று இறைவன் ஏன் விதித்தான்..?

இப்போது கார் கடற்கரைச் சாலையில் விரைந்து கொண்டிருந்தது.. ஒருபுறம் நீலப் பட்டாடை விரித்ததைப் போன்ற கடல், மறுபுறம் பொன்னிற மணல்துகள்..

வேறு ஒரு சமயமாக இருந்தால் சம்யுக்தா ஆர்வமாக அந்த இயற்கையின் அழகை பார்த்து ரசித்திருப்பாள்.. ஆனால், இப்போதைய மனநிலையில் அவள் அதைப் பார்க்க மனமின்றி கண்களை மூடிக் கொண்டாள்..

"இறங்கு சம்யுக்தா.."

திலீபன் கார் கதவைத் திறந்துவிட்டான்.. ஒருவித விடுதலை உணர்வுடன் இறங்கியவள் திகைத்தாள்..

கண்ணுக்கு முன்னால் கடல் விரிந்திருக்க.. ஒரு இயந்திரப் படகு அவர்கள் ஏறுவதற்குத் தயாராக நின்று கொண்டிருந்தது..

"சாவியைப் பிடி சைமன்.. காரை நம் கெஸ்ட் ஹவுஸில் பார்க் செய்துவிடு.."

காத்துக் கொண்டிருந்த ஆளிடம் கார் சாவியை நீட்டிவிட்டு சம்யுக்தாவின் கையை இறுகப் பிடித்து இழுத்துக் கொண்டு இயந்திரப் படகை நோக்கி நடந்தான் திலீபன்..

'இப்படியே கையை உருவிக் கொண்டு ஓடி விட்டால் என்ன..?'

நினைக்கும்போதே அது நடக்காது என்பதை உணர்ந்து கொண்டாள் சம்யுக்தா..

திலீபனின் பிடி வலுவாக இருந்தது.. கையை அசைக்கக்கூட அவன் விடமாட்டான்.. அப்படியே

கூச்சலிடலாம் என்றாலும் கண்ணுக்கு எட்டிய தூரம்வரை மனித நடமாட்டம் தெரியவில்லை..

திலீபனிடம் கார் சாவியை வாங்கிக் கொண்ட சைமன், முரட்டுத் தோற்றத்துடன் பயமுறுத்தினான் என்றால்.. இயந்திரப் படகில் காத்திருந்தவன் அமானுஷ்ய விழிகளுடன் பேய் படத்தில் வருபவன் போல் இருந்து வைத்தான்..

தப்பித்து எங்கு ஓடுவது..? அந்த இருவரிடமும் மாட்டுவதைவிட திலீபனிடம் மாட்டுவதே சாலச் சிறந்தது என்ற உணர்வுடன் அவள் போராடத் துணியாமல் அவன் கூடவே நடந்தாள்..

இயந்திரப் படகில் ஏறியதும் படகு கிளம்பியது.. கரை கண்ணிலிருந்து மறைய சம்யுக்தாவிடம் இருந்த கடைசித் துளி நம்பிக்கையும் கரைந்து மறைந்தது..

'இனி அவ்வளவுதான்.. இதற்கு மேல் நான் அப்பா அம்மாவிடம் திரும்ப முடியாது..'

அவள் விசும்ப ஆரம்பிக்க.. திலீபனின் கரம் அவளது தோளைச் சுற்றி வளைத்தது.. அவன் அவளை நெருங்கி அமர்ந்து கொண்டான்.. அதிர்ந்துபோய் விலக முயன்றவளை விலகவிடாமல் தன்னுடன் சேர்த்து இறுக்கிக் கொண்டான்.. அவளது காதோரமாக சரிந்து முணுமுணுத்தான்..

"நார்மலாக பிஹேவ் பண்ணு.."

"முதலில் நீங்கள் தள்ளி உட்காருங்கள்.."

"இனி நான் தள்ளிப் போவதென்பது நடக்காது.."

திலீபனின் குரல் கண்டிப்புடன் ஒலித்தாலும் சன்னமாக அவள் காதுகளில் மட்டுமே கேட்கும் அளவில் ஒலித்தது.. அவன் முகம் மாறவேயில்லை..

இயந்திரப் படகை ஓட்டிக் கொண்டிருந்தவன் மலையாளத்தில் எதையோ வினவ.. திலீபன் அவனுக்கு மலையாளத்திலேயே பதில் சொன்னான்.. அதைக்

கேட்ட படகோட்டி சம்யுக்தாவை ஆதரவாகப் பார்த்து வைத்தான்..

'இவன் என்ன சொன்னான் என்று அவன் அப்படிக் கருணை பொங்க பார்த்து வைக்கிறான்..? இவன் கருணையெல்லாம் எனக்கு அவசியமா..?'

சம்யுக்தா மனம் கொதித்துக் கொண்டிருந்தாள்.. அப்போது திலீபனின் செல்போன் மணியொலித்தது.. அவன் அதை எடுத்து இந்தியில் பேசினான்..

'இவனுக்கு இன்னும் எத்தனை மொழிகள் தெரியும்..' சம்யுக்தா யோசனையோடு கடலை வெறித்தாள்..

தூரத்தில் மணல் திட்டுத் தெரிந்தது.. மெல்ல செடி கொடிகள் தெரிந்தன.. இன்னும் நெருங்குகையில் அழகானதொரு பங்களா தெரிந்தது..

'குட்டித்தீவில் இப்படி ஒரு மாளிகை போன்ற வீடா..? ஆள் நடமாட்டமில்லாத இந்த வீட்டில் நடுக்கடலில் குடியிக்க யார் வரப் போகிறார்கள்..?'

அவள்தான் அங்கே குடியேறப் போய்க் கொண்டிருக் கிறாள் என்பதை அறியாதவளாக அவள் இதை நினைத்துக் கொண்டிருந்தாள்..

இயந்திரப் படகு நின்றது.. திலீபன் எழுந்து கொண்டான்.. அவளுக்கு கை கொடுத்து கரையில் இறக்கிவிட்டான்..

# 28

கடற்கரையிலிருந்து வீட்டிற்குச் செல்ல அழகாக பாதை போடப்பட்டிருந்தது.. பாதையின் இரு பக்கமும் செடி கொடிகள் அடர்ந்திருக்க.. காத்திருந்த ஜீப்பில் அவளை ஏறச் சொல்லிவிட்டு தானும் ஏறி அமர்ந்தான் திலீபன்..

இயந்திரப் படகின் சப்தம் கேட்க.. சம்யுக்தா அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள்.. படகு போய் விட்டது.. கரையுடன் இருந்த கடைசித் தொடர்பும் துண்டிக்கப் பட்டுவிட.. நடுக்கடலில் மாட்டிக் கொண்ட நடுக்கத்துடன் சம்யுக்தா ஸ்தம்பித்துப் போய் நின்றாள்..

"ஏறு சம்யுக்தா.." திலீபனின் குரல் அவளை அதட்டியது..

இந்த மணல் திட்டில் இவனை விட்டால் வேறு துணையில்லை என்ற நிராசையுடன் ஜீப்பில் ஏறி அமர்ந்தாள் சம்யுக்தா..

ஜீப்பை ஓட்டிக்கொண்டிருந்தவன் மலையாளம் கலந்த தமிழில் பேசினான்.. அதைக் கேட்ட சம்யுக்தாவின் முகத்தில் தெரிந்த வெளிச்சத்தை ஜாடையாகப்

பார்த்துக் கொண்டே..

"சோமு.. வெள்ளைக் காக்காய் மல்லாக்கப் பறக்குதுன்னு நான் சொன்னால் நீ என்ன செய்வே..?" என்று அவனிடம் வினவினான் திலிபன்..

"எந்தா சாரே.. இப்படி ஒரு கேள்வியை என்னைப் பார்த்து சார் கேட்கலாமா..? நீங்கள் என்ன.. பொய்யாகவா பறஞ்சது..? எண்ட சாரு என்ன சொன்னாலும் அதுதான் இந்த சோமனுக்கு வேத வாக்காகும்.."

'கேட்டுக் கொண்டாயா..' என்பது போல் திலீபனின் விழிகள் அவளைப் பார்த்தன..

"சோமு.. அந்த நடுக்கடலில் குதின்னு நான் சொன்னால் நீ என்ன செய்வாய்..?"

"போய் குதித்துவிடவா சாரே.."

"வேண்டாம்.. ஜீப்பை ஓட்டு.."

சம்யுக்தாவிற்கு திலீபன் பண்ணிய அலம்பலைக் காணச் சகிக்கவில்லை.. அவள் சன்னமாக முணு முணுத்தாள்..

"போதும்.. உங்கள் விசுவாசியோட பெருமையைப் பறைசாற்ற வேண்டாம்.. வாயை மூடிக்கொண்டு வாங்க.."

"ஹா.. ஹா.."

"எந்தா சாரே.. ஏன் சார் சிரிக்குது..?"

"ஒன்றுமில்லை சோமா.. என் டார்லிங் ஒரு ஜோக் சொன்னாள்.. அதுதான் சிரிப்புச் சிரிப்பா வருது.."

"அப்படியா..? மேடம்.. சாருக்கு ஏத்த ஜோடி தான் சாரே.. எண்ட பார்வதி கண்டால் பிரமிச்சுப் போயிடுவா.."

"ஈஸிட்..?"

"யார் அந்தப் பார்வதி.."

"சோமனுடைய வொய்ஃப்.."

"அவள் எதற்கு என்னைப் பார்த்துப் பிரமிக்கணும்..?"

"நீ அவ்வளவு அழகாக இருக்கேன்னு பொய் சொல்கிறான்.."

"நான் அழகில்லைதானே திலீபன்..?"

"இதை நான் என் வாயால் சொல்ல வேண்டுமா..?"

"அப்படின்னா.. என்னை விட்டுவிடுங்களேன்.."

"அதுதானே பார்த்தேன்.. தான் அழகாக இல்லைன்னு சந்தோஷப்படும் முதல் பெண் நீயாகத்தான் இருப்பாய்.."

"ப்ளீஸ்..! திலீபன்.."

"வீடு வந்துவிட்டது.. வாயை மூடிக்கொள்.." அழகாக.. கம்பீரமாக.. வெள்ளை நிறப் பளிங்குக் கற்களால் இழைக்கப்பட்டதைப் போல பளபளப்பாக இருந்தது

அந்த வீடு..

"இந்த வீட்டைக் கட்டியவன் மிகவும் ரசனை யோடு கட்டியிருக்கிறான்.. எப்பேர்பட்ட ரசிகன் அவன்.." என்றாள் சம்யுக்தா..

"அந்த ரசிகனைத்தான் உனக்குப் பிடிக்க மாட்டேன் என்கிறதே.." திலீபன் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்..

"இது உங்கள் வீடா..?" சம்யுக்தா வியப்புடன் வினவினாள்..

"பின்.. ஊரான் வீட்டிலா உன்னைக் குடி வைப்பேன்..?"

"குடி வைக்கப் போகிறீங்களா..?"

"ஆமாம்.. உள்ளே வா.."

வீட்டுக்குள்ளே இருந்து பிரகாசமான முகத்துடன் கையில் ஆரத்தி தட்டுடன் ஒரு பெண் வெளிப்பட்டாள்.. நெற்றியில் சந்தனக் கீற்றுடன் ஈரத் தலைமுடியை விரிய விட்டிருந்தாள்..

"எந்தா சாரே.. ஈ பெண் குட்டி எவ்வளவு வனப்பாயிருக்கு தெரியுமா சாரே.."

"தெரிந்ததால்தானே சிறையெடுத்திருக்கிறேன்.."

"ஆ.. எந்தா சாரே.. இப்படி பறஞ்சு.. உங்களைக் கல்யாணம் பண்ணிக்க இந்தப் பெண்குட்டியில்ல தவம் பண்ணியிருக்கணும்..?"

"அப்படியா சொல்கிறாய்..?"

"இந்தப் பாருக்குட்டி பறஞ்சா அது சரியாத்தான் இருக்கும் சாரே.."

அவள் ஆரத்தி எடுக்க ஆரம்பிக்க.. அவர்கள் இருவரிடம் இருந்தும் தனக்கு எந்தவித உதவியும் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டாள் சம்யுக்தா..

"வலது காலை எடுத்து வைத்து வரச் சொல்லுங்க சாரே.."

"அதையும் சார்தான் சொல்ல வேண்டுமாக்கும்.." என்ற கோபத்துடன் சம்யுக்தா அசையாமல் நின்றாள்..

# 29

"சம்யுக்தா.. வலது காலை எடுத்து வைத்து உள்ளே வா.." திலீபன் கடினமான குரலில் கூறினான்..

அந்தக் குரல் உணர்த்திய கண்டிப்பு அவளது முதுகுத்தண்டில் ஜில்லிப்பை ஏற்படுத்த வேண்டா வெறுப்பாக வலது காலை எடுத்து முன்னால் வைத்து வீட்டிற்குள் நுழைந்தாள் சம்யுக்தா..

விஸ்தீரமான ஹால்.. அதன் முடிவில் மாடிப் படிகள் தொடங்கின.. திலீபன் மாடிக்கு ஏற ஆரம்பிக்க.. சம்யுக்தா அவனைத் தொடராமல் ஹாலில் இருந்த சோபாவில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தாள்.. திலீபன் திரும்பிப் பார்த்து அவளை அழைத்தான்..

"சம்யுக்தா.. இங்கே வா.."

'இவன் எதற்கு என்னைக் கூப்பிடுகிறான்..' எரிச்சலுடன் அவள் அசையாமல் அமர்ந்திருக்க, திலீபனின் குரல் மீண்டும் கோபத்துடன் ஒலித்தது..

"சம்யுக்தா.."

'விடமாட்டானே..'

சம்யுக்தா எழுந்து மாடிப்படிகளில் அவனைத் தொடர்ந்து ஏறினாள்..

மாடிப்படிகளின் முடிவில் சின்ன ஹால் இருக்க.. அதன் ஓரமாக இருந்த அறைக்கதவைத் திறந்தான் திலீபன்..

"இதுதான் நம் ரூம்.."

"நம் ரூமா..?"

சம்யுக்தா அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள்.. திலீபனை இந்த அளவிற்கு கீழே இறங்கக்கூடியவன் என்று அவள் நினைத்தும் பார்த்ததில்லை..

அவள் முகத்தில் பிரதிபலித்த உணர்ச்சிகளைப் பார்த்தபடி திலீபன்.. பாறை போல் இறுகிய முகத்துடன் கூறினான்..

"இவ்வளவு அதிர்ச்சியடைய வேண்டிய அவசியம் இல்லை.."

"அதிர்ச்சியடையாமல் எப்படி இருப்பது..?"

"இதற்கே அதிர்ச்சி அடைந்தால் எப்படி..? இதைப் போல் ஆயிரம் அதிர்ச்சிகளை நீ சந்திக்க வேண்டியிக்கிறது.."

"திலீபன்.. இது சரியில்லை.."

"பச்.. முதலில் நீ குளித்து டிரெஸ் மாற்றிக்கிட்டு வா.. சாப்பிட்டுவிட்டுப் பேசலாம்.."

"இங்கே நான் குளிப்பதா..?"

"வேறு எங்கே போய் குளிக்கப் போகிறாய்..? கடலிலா..?"

சம்யுக்தா அவனை முறைப்பதை பொருட் படுத்தாமல் அவன் அவளது கைபிடித்து அறைக்குள் இழுத்து விட்டான்..

"எல்லாம் சரி.. போட்டுக் கொண்டிருக்கும் சுடிதாரோடு கடத்திக் கொண்டு வந்திருக்கீங்க.. வேறு டிரஸ்ஸிற்கு நான் எங்கே போக..?"

திலீபன்.. படுக்கையறையின் பக்கவாட்டில் அமைந்திருந்த உடை மாற்றும் அறையின் சுவரில் பதிக்கப் பட்டிருந்த அலமாரியைத் திறந்து காட்டினான்.. ஏழெட்டு பிளாஸ்டிக் பைகள் இருந்தன

"வரும் வழியில் நான் இறங்கி பர்ச்சேஸ் பண்ண முடியவில்லை.. சோமனிடம் நேற்றே போனில்

சொன்னேன்.. அவன் பாருக்குட்டியோடு போய் வாங்கி வந்திருக்கிறான்.. அளவு முன்னே பின்னே இருக்கலாம்.. அட்ஜெஸ்ட் பண்ணிக்கொள்.."

"நீங்கள் செய்யும் அநியாயத்திற்கு இவர்களும் துணை வருகிறார்களே.. இதைக் கொஞ்சம்கூடத் தட்டிக் கேட்க மாட்டாங்களா.."

"நான் அநியாயமே செய்ய மாட்டேன் என்பது அவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.."

"அவர்கள் நம்பிக்கையில் இடி விழட்டும்.."

"அது விழாது.. நீ இப்போது அதைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் குளித்து விட்டு வா.."

அவள் எரிச்சலுடன் மாற்றுடையை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்தாள்.. திலீபன் அறையை விட்டு வெளியேறினான்..

சம்யுக்தா குளித்து உடை மாற்றி அறையை விட்டு வரும்போது அவன் மாடி ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தான்.. காலடியோசை கேட்டுத் திரும்பியவன்..

"வாவ்.." என்றான் ரசனையுடன்..

"என்ன..?" என்றாள் அவள் எரிச்சலுடன்..

"இந்தக் கருநீலநிற சுடிதார் உனக்கு எவ்வளவு பாந்தமாக பொருந்துகிறது தெரியுமா..?"

"தெரியாது.. தெரிந்துகொள்ளவும் விருப்பமில்லை.."

"உன் விருப்பத்தை யார் கேட்டது.. இப்படி சோபாவில் உட்கார்ந்து நான் குளித்து முடித்து வரும் வரை டி.வி. பார்த்துக் கொண்டு சமர்த்துப் பெண்ணாக இரு.."

"நான் சாப்பிடப் போகிறேன்.."

"நான் இல்லாமல் தனியாகப் போனால் உனக்குச் சாப்பாடு கிடைக்காது.."

"இது என்ன அராஜகமாக இருக்கிறது..?"

திலீபன் அவளையே பார்த்துக் கொண்டு அருகில் வர.. சம்யுக்தா திகைத்துப் போனாள்..

'இவன் ஏன் இப்படி வருகிறான்..'

அவள் விலக முயலும் முன்னால் அவள் தோளில் திலீபனின் கரம் அழுந்தப் படிந்தது.. அவள் பேச்சற்று நின்றாள்..

# 30

திலீபன் அவள் விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தான்..

"ஏன் சம்யுக்தா.. என்னை உனக்கு உண்மையிலேயே பிடிக்கவில்லையா..? எங்கே என் கண்ணைப் பார்த்துச் சொல்.."

சம்யுக்தாவினால் ஒரு வினாடிக்கு மேல் அவனுடைய கண்களைப் பார்க்க முடியவில்லை.. விழிகளைத் திருப்பிக் கொண்டாள்.. திலீபனின் முகத்தில் வெற்றிக் குறி வந்தது.. அவன் லேசாக சிரித்துக் கொண்டே குளிக்கப் போய் விட்டான்..

சம்யுக்தா முகத்தை தன் கைகளால் மூடிக் கொண்டு சோபாவில் உட்கார்ந்து விட்டாள்.. அவளுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது..

'சே.. அவன் என்னைப் பற்றி என்ன நினைத் திருப்பான்.. துப்பாக்கி முனையில் கடத்திக் கொண்டு வந்ததைப் போல என்னைக் கடத்திக் கொண்டு வந்திருக்கிறான்.. இவனைப் பார்க்க எனக்கு ஏன் தைரியம் இல்லாமல் போனது..?'

தன்போக்கில் சிந்தித்துக் கொண்டிருந்தவளை..

"என்ன.. சாப்பிட வரும் உத்தேசம் இல்லையா..? இன்னும் கனவு கண்டு முடிக்கவில்லையா.." என்ற அவனது குரல் உசுப்பியது..

"யார் கனவு கண்டது..?"

"வேறு யார்..? நீதான்.."

"நீங்கள் ரொம்பத்தான் கண்டீர்கள்..."

திலீபன் அவளருகில் குனிந்து மெதுவாக..

"அன்று ஒரு பாதி முகம்தானே கண்டேன்..

இன்று மறுபாதி எதிர்பார்த்து நின்றேன்.."

என்று பாடினான்..

சம்யுக்தாவின் முகம் சிவந்து விட்டது.. அவள் வேகமாக படிகளில் இறங்க ஆரம்பிக்க.. திலீபன் சிரிப்புடன் அவளைத் தொடர்ந்தான்..

"என்ன பாருக்குட்டி.. வாசனையெல்லாம் ஜோராக இருக்கு.. விருந்து பலமாக இருக்கும் போல் இருக்கே.."

"ஆமாம் சாரே.."

"எனக்காக இப்படியெல்லாம் நீ சமைத்துப் போட்டதே இல்லையே.."

"இது அம்மாவுக்காக.."

"இதைப் பாருடா.. சம்பளம் கொடுப்பது நான்.. நீ சூப்பராக சமைத்துப் போடுவது மட்டும் உன் அம்மா விற்கா..?"

"அவங்க.. உங்களில் பாதி சாரே.."

சம்யுக்தாவைப் பார்த்து கண்சிமிட்டிச் சிரித்தான் திலீபன்..

"காதில் விழுந்ததா..?"

"விழுந்தது.. விழுந்தது.."

"அதை சிரித்துக் கொண்டே சொல்ல வேண்டியது தானே.. இப்படிக் கடுப்பாக சொல்ல வேண்டுமா..?"

"சிரிப்பு வர வேண்டாமா..?"

"ஏன் வராது.. நீ சிரிக்க மறுக்கிறாய்ன்னு சொல்லு.."

சம்யுக்தா வெறுமையாய் அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு எழுந்து கொண்டாள்..

"என்ன அதற்குள் எழுந்து விட்டாய்.."

"எனக்குப் போதும்.."

சம்யுக்தா மாடிப்படிகளில் ஏறி விட்டாள்.. திலீபன் யோசனையுடன்.. அவளைப் பார்த்தவாறு சாப்பிட்டு முடித்தான்... அவன் மாடியேறிப் போனபோது

அவள் பால்கனியில் அமர்ந்து கடலை வெறித்துக் கொண்டிருந்தாள்.. ஒரு சோகச் சித்திரம் போல் சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்தவளைப் பார்த்தபடி அவளருகே

நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தான் திலீபன்..

"ஏன் இப்படி இடிந்துபோய் உட்கார்ந்திருக்கிறாய்.. இப்போது உன்னைப் பார்த்தால் எப்படி இருக்கிறது தெரியுமா..?"

"அசோக வனத்து சீதை போல இருக்கிறதா..?"

"நீ சீதையென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.. ஆனால், அந்தக் கயமைக்கார பிரதீப்பை ராமன்னு சொன்னா உன் மண்டையை உடைத்து நடுக்கடலில்

தூக்கி எறிந்துவிடுவேன்.. ஜாக்கிரதை.."

"அவர் ராமனோ இல்லையோ.. ஆனால், நீங்கள் ராவணன் என்பது மட்டும் நிச்சயம்.."

"ஏய்ய்.. நான் எவன் பெண்டாட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தேன்டி..?"

"அடுத்தவருக்கு நிச்சயம் பண்ணின பெண்ணைத் தூக்கிக் கொண்டு வரவில்லையா..?"

"ஊஹூம்.. எனக்கு நிச்சயமான பெண்ணைத் தான் நான் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறேன்.."

"இது என்ன கதையாய் இருக்கு.. உங்களுக்கு என்னை எப்போது நிச்சயம் பண்ணினாங்க..?"

"ஆறு வருடங்களுக்கு முன்னால் ரயிலில் நீயும் நானும் பார்வைகளை மாற்றிக் கொண்டு நிச்சயம் பண்ணிக் கொள்ளவில்லையா..?"

"அதற்குப் பெயர் நிச்சயதார்த்தமா..?"

"பின்னே.. இல்லையா..? நிச்சய தாம்பூலத்தட்டை மாற்றிக் கொள்வதைவிட பார்வைகளை மாற்றிக் கொள்வது பவர்ஃபுல்லானது.."

"கடவுளே.."

"அவர் போட்ட முடிச்சுத்தான் இது.."

சம்யுக்தா உதட்டைச் சுளித்து முகத்தை திருப்பிக் கொள்ள, திலீபன் மெல்லிய குரலில் பாடினான்..

"உசிரே போகுது.. உசிரே போகுது..

உதட்டை நீ கொஞ்சம் சுளிக்கையிலே..
மாமன் ஏங்குறேன்.. மடிப்பிச்சை கேட்கிறேன்..
மனசைத் தாடி என் மணிக்குயிலே.."

சம்யுக்தா.. தன் இரு காதுகளையும் பொத்திக் கொண்டாள்..

# 31

கடல் காற்று சுகமாக வீசிக் கொண்டிருக்க சம்யுக்தா கண்களை மூடி யோசித்தாள்.. அவள் சோர்வாகத் தெரிந்ததால் படுத்து ஓய்வெடுக்கச் சொல்லி விட்டு திலீபன் வெளியே போய்விட்டான்.. சற்று நேரத்தில் ஜீப் கிளம்பும் சத்தம் கேட்க.. சம்யுக்தா ஓடிப் போய் ஜன்னல் வழியாக பார்த்தாள்.. கடற்கரையில் இயந்திரப் படகு வந்து காத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.. சற்று நேரத்தில் திலீபன் இயந்திரப் படகில் ஏறிவிட.. இயந்திரப் படகு கிளம்பி விட்டது..

'இப்போது என்ன செய்யலாம்..? அவன் வீட்டில் இல்லை.. தப்பித்துப் போக இதைவிட சரியான சந்தர்ப்பம் அமையாது..'

சம்யுக்தா மாடிப்படிகளில் சப்தம் எழுப்பாமல் இறங்கினாள்.. வாசலுக்கு அருகே போகும்போது..

"நானும் கூட வரட்டே.." என்ற பாருக்குட்டியின் குரல் அவளது முதுகிற்கு பின்னாலிருந்து கேட்டது..

சட்டென்று நின்று திரும்பிப் பார்த்த சம்யுக்தா வின் முகத்தில் மாட்டிக் கொண்ட தவிப்பு தெரிந்தது..

"நான்.. சும்மா காலார நடந்துவிட்டு வரலாமுன்னு.." என்று பேச்சு வராமல் தடுமாறினாள்..

"அதற்கு இந்த ஏறு வெயில் நேரம்தான் கிடைச்சதா.. உச்சி வெயில் வரப்போகுது.. உள்ளார வாங்க... கடலுக்குப் போன சாரு திரும்பி வந்து கேட்டா நான் எந்தா பறைய..? ஈ பெண்குட்டிக்கு கொஞ்சம்கூட பொறுப் பில்லன்னு சாரு என்னத்தான் திட்டும்.." என்று பார்வதி படபடத்தாள்..

ஏக்கப்பெருமூச்சுடன் உள்ளே வந்த சம்யுக்தா ஹாலில் அமர... பாருக்குட்டியும் அவள் முன்னால் அமர்ந்தாள்.. கீழே இருக்கும் வரை அவள் அங்கிருந்து நகரமாட்டாள் என்பதை புரிந்துகொண்ட சம்யுக்தாவிற்கு எரிச்சல் வந்தது..

தான் கண்காணிக்கப்படுகிறோம் என்ற உணர்வே அவளுக்கு சங்கடத்தை அளித்தது.. பாருக்குட்டியின் கண் பார்வையிலிருந்து மறைந்துவிடும் ஆவலில் மாடிப்படி யேறினாள் சம்யுக்தா.. பாதிப்படிகளில் திரும்பிப் பார்த்த போது பாருக்குட்டி வாசல் கதவை அடைத்து பூட்டிச் சாவியைக் கையில் எடுத்துக் கொண்டு போவது தெரிந்தது..

'ம்ஹூம்.. இனி இந்த வீட்டிலிருந்து வெளியே போக முடியாது..' என்ற நிராசையுடன் மாடிக்குப் போனவளுக்கு முகத்தில் பல்ப் எரிந்தது.. அங்கே ஹாலில் இருந்த டீப்பாயின் மேலே டெலிபோன் வீற்றிருந்தது..

ஆஹா.. என்று ஆவலுடன் போனுக்கு அருகே ஓடிச்சென்று போனை எடுத்து சென்னையில் இருந்த தன் வீட்டு போன் நம்பரை அழுத்தினாள் சம்யுக்தா.. மறுமுனையில் கனமான ஆண் குரலில்..

"ஹலோ.." என்ற சத்தம் கேட்கவும்.. அது யாரின் குரல் என்று உணராதவளாய் அவசரமாய் பேசினாள்..

"ஹலோ.. அப்பா.. நான் சம்யுக்தா பேசுகிறேன்.."

"நான் உன் அப்பா இல்லை.. திலீபன்.." மறுமுனையில் இருந்து அமர்த்தலான பதில் வந்தது..

சம்யுக்தாவிற்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது..

'இது எப்படி..?' அவளால் கணிக்க முடியவில்லை.. மறுமுனையில் அவன் பலமாகச் சிரித்தான்..

"இப்போதுதான் பாருக்குட்டி போன் பண்ணினாள்.. வெளியே போக டிரை பண்ணினாயாமே.. இப்போது போனைக் கண்டதும் அப்பாவைக் கூப்பிடுகிறாயா..? உனக்கு என்னைப் பற்றி இன்னும் சரியாக தெரிய வில்லை.. கூடிய சீக்கிரம் அதை தெரிந்து கொள்வாய்.."

"திலீபன்.. ப்ளீஸ்.."

"என்ன..?"

"என்னை விட்டுவிடுங்கள்.."

"இனி விட முடியாது சம்யுக்தா.. நீ இருக்கும் அறையை விட்டுக்கூட உன்னால் இனி நகர முடியாது.. அந்த வீட்டிலிருந்து நீ எந்த போனை எடுத்துப் பேசினாலும் அது நேராய் என் செல்போனுக்குத்தான் வந்து சேரும்.. இது இன்டர்காம் போல.. புரிந்ததா..? அப்படியொரு ஏற்பாட்டை நான் பண்ணியிருக்கிறேன்.. அதனால் இதுபோல அபத்தமான முயற்சிகளில் இறங்காமல் தூங்க முயற்சி பண்ணு.. பை.."

சம்யுக்தா கோபத்துடன் தலையணையில் ஓங்கிக் குத்தினாள்.. பின் சுருண்டு படுத்து தலையணையில் முகம் புதைத்துக் கொஞ்ச நேரம் அழுதாள்.. பின்னர் அயர்ந்து தூங்கிவிட்டாள்..

"சம்யுக்தா.. சம்யுக்தா.." அவளுடைய கன்னத்தில் வலிமையான கரம் ஒன்று தட்டுவதை உணர்ந்து அவள் கண்விழித்துப் பார்த்தாள்.. திலீபன் நின்று கொண்டிருந்தான்..

"எழுந்து கொள்.. மணி மூன்றாகப் போகிறது.. சாப்பிட்டு விட்டு வந்துவிடலாம்.."

"எனக்குப் பசிக்கவில்லை.."

"பசிக்காவிட்டாலும் பரவாயில்லை.. பெயருக்கு எதையாவது வயிற்றில் போட்டுக் கொண்டு வந்து விடலாம் வா.."

"உங்களுக்குப் பசித்தால் நீங்கள் போய் சாப்பிடுங்கள்.. ஏன் என் உயிரை எடுக்கறீங்க..?"

"என்னடி சொன்னாய்..?"

திலீபன் கையிலிருந்த பைகளை கட்டிலுக்கு அருகே இருந்த சோபாவில் போட்டுவிட்டு வெறிகொண்ட வேங்கையாக அவளை நெருங்கினான்.. சம்யுக்தா அவனின் வேகம் கண்டு மருண்டு போனாள்..

அவளின் தோளைப் பிடித்து உலுக்கி அவள் மேல் சரிந்த திலீபன்.. அவள் முகத்தோடு முகத்தை வைத்துக் கொண்டு கோபமாக பேசினான்..

"என்றைக்கு உன்னை ரயிலில் பார்த்தேனோ அன்றைக்கு என் தூக்கத்தை தொலைத்து விட்டேண்டி.. என் உயிரை நீ எடுத்துவிட்டு என் மேல் பழியைப் போடுகிறாயா..?"

சம்யுக்தா அவனுக்கு பதில் சொல்லும் நிலையில் இல்லை.. முதன்முதலாக உணர்ந்த ஆணின் ஸ்பரிசம் அவளை நிலைகுலைய செய்திருந்தது.. அவளது

இதயம் வேகமாக அடித்துக் கொள்ள.. அவள் பேச்சிழந் திருந்தாள்..

திலீபனுக்கு அவளது நிலை புரிந்துவிட்டது.. அவனது கோபம் வடிந்துவிட.. அவன் அவளது முகத்தோடு உராய்ந்து கொண்டிருந்த தன் முகத்தை விலக்கிக் கொள்ளாமல் குனிந்து அவளது இதழோடு இதழ் பதித்தான்..

சட்டென்று அவனைத் தள்ளிவிட்டு எழுந்து கொண்டாள் சம்யுக்தா.. கட்டிலில் மல்லாந்து படுத்துக் கொண்டிருந்த திலீபன் அவளைப் பார்த்து உல்லாசமாக நகைத்தான்.. அவனது முகம் பார்க்க முடியாமல் சம்யுக்தா வெளியே சென்றுவிட்டாள்.. அவளது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது..

'எவ்வளவு இயல்பாக முத்தம் கொடுத்துவிட்டான்..'

கோபப்பட வேண்டிய இந்த நிகழ்வை நினைக்கையில் மனம் ஏன் கிளர்கிறது என்று தவித்துப் போனாள் சம்யுக்தா..

"என்ன பாருக்குட்டி.. சாப்பாடு ரெடியா..?" துளைக்கும் பார்வையை சம்யுக்தாவின் மேல் வீசிக் கொண்டு சாப்பிட அவள் எதிரில் வந்து அமர்ந்தான் திலீபன்..

"ரெடி சாரே.."

"என்ன சொல்கிறாள் என் பெண்குட்டி.."

"நீங்களை கல்யாணம் கழிச்சுக்க அதுக்கு வளர இஷ்டமாம்.."

"இஷ்டமில்லாமல் போகுமா.."

சம்யுக்தா லேசாக நிமிர்ந்து பார்க்க.. அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான் திலீபன்.. அவள் சட்டென்று குனிந்து கொண்டாள்.. அவளை வம்புக்கிழுக்கவென்று திலீபன் வேண்டுமென்றே டைனிங் ஹாலின் மேஜையின் மேல் தாளம் போட்டபடி பாடினான்..

"எண்ணத்தால் உன்னைத் தொடர்ந்தேன்..

ஒரு கொடிபோல் நெஞ்சில் படர்ந்தேன்.."

அன்று அவள் பாடிய பாடலை நினைவுறுத்துகிறான் என்பது சம்யுக்தாவிற்கு மட்டுமே புரிய.. பாருக்குட்டி சிரித்தாள்..

"எந்தா பாட்டு சாரே இது.."

"ஒரு பெண்குட்டி என்னைப் பார்த்துப் பாடின பாட்டு இது.."

சற்று முன் அவன் அவள் மேல் படர்ந்தது சம்யுக்தாவிற்கு நினைவிற்கு வந்து தொலைக்க.. அவளுக்கு புரையேறிவிட்டது.. திலீபன் அவசரமாய் அவளுக்கு தண்ணீர் டம்ளரை எடுத்து நீட்டினான்..

"முதலில் இந்த தண்ணீரைக் குடி.."

"சாருக்குத்தான் எந்தா கரிசனம்.."

பாருக்குட்டி பாராட்டிக் கொண்டே உள்ளே போய் விட.. திலீபன் கொடுத்த தண்ணீரை வாங்கிக் குடித்தாள் சம்யுக்தா..

"ஏன் புரையேறுது..?"

"அதற்குக்கூட 'தடா' போட முடியுமா..?"

"நான் உன் முன்னால் இருக்கும்போது உனக்குப் புரையேறக் கூடாது.."

"அதை அதனிடம் சொல்லி வைக்கிறேன்.."

சம்யுக்தா மீண்டும் மாடிப் பால்கனியைத் தஞ்சமடைந்தாள்.. திலீபன் அவளைத் தொடர்ந்து வராமல் படுக்கையறைக்குள் போய்விட்டான்.. கடலை வெறித்த வண்ணம் அமர்ந்திருந்தவளின் பின்னால் வந்து நின்று கொண்டு பாருக்குட்டி அழைத்தாள்..

"அம்மா.."

"என்ன.."

"உங்களுக்கும் சாருக்கும் சாயா கொண்டு வந்திருக்கிறேன்.."

"கொடு.."

"யாருகிட்ட கொடுக்க..?"

"என் டீயை என்னிடம் கொடு.. உன் சாரின் டீயை அவரிடம் கொண்டு போய் கொடு.."

"அவர் ரூமுக்குள்ள ரெஸ்டில் இருக்காரே.."

"இருந்தால் என்ன.."

"இல்லேம்மா.. சாரு ரூமுக்குள் தனியா இருந்தால் நான் அங்கே போனதில்ல.. சாருக்கு அது பிடிக்காது.."

ஏனோ.. இதைக் கேட்டதும் சம்யுக்தாவிற்கு இதமாகவும் பெருமையாகவும் இருந்தது.. தீவின் மத்தியில் இருக்கும் வீட்டில் வசிப்பவன்.. தனியாக தான்

இருக்கும் அறைக்குள் நுழைய பெண்களை அனுமதித்தது இல்லை..

அன்றும் அந்த ரயில் பயணத்தில் இளம்வயது கல்லூரி மாணவிகளான அவளையும் அவளது தோழிகளையும் பெட்டியில் இருந்த மற்ற ஆண்கள் ஆர்வமாய் பார்க்க.. அவன் மட்டும் கல்லையும் மண்ணையும் பார்ப்பதைப் போல அவர்களைப் பார்த்தது அவளுக்கு நினைவிற்கு வந்தது..

அவன் அவளை மட்டும்தான் பார்த்தான்.. அதுவும் அவளின் பார்வையில் இருந்த ஆர்வத்தையும் காதலையும் உணர்ந்ததால் பார்த்தான்.. பார்த்த பார்வையை மறக்காமல் அவளைத் தேடியலைந்து கண்டு கொண்டதும் கடத்தியும் வந்துவிட்டான்..

# 33

"ஓகே.. நானே கொண்டு போய் உன் சாருக்கு டீயைக் கொடுக்கிறேன்.. கொடு..!" சம்யுக்தா டிரேயை வாங்கிக்

கொண்டாள்..

அவனது படுக்கையறைக்குள் பாருக்குட்டி பார்க்க நுழையும்போது அவளுக்கு கர்வமாக இருந்தது.. சென்னையில் அவளது வீடு என்ன நிலைமையில் இருக்கின்றதோ என்ற கவலை மனதை அரித்துக் கொண்டிருந்ததை மறந்தே போனாள் சம்யுக்தா..

கட்டிலில் தலை கலைய படுத்திருந்தவனைப் பார்த்தவள் எழுப்ப மனமில்லாமல் அப்படியே நின்று விட்டாள்..

ஆறு வருடங்களுக்கு முன்னால் எந்த கம்பீரத் தோற்றத்தையும் வசீகரத்தையும் கண்டு மனதைப் பறி கொடுத்தாளோ.. அந்த வசீகரத்தில் கொஞ்சம் கூட குறையாமல் அப்படியே அவன் இருந்தான்..

"வசீகரா.. என் நெஞ்சினிக்க..

உன் பொன் மடியில்..

தூங்கினால் போதும்..

அதே கணம்.. உன் கண்ணுறங்க..

என் பெண் மனதின்..

தாபங்கள் தீரும்.."

மனதிற்குள் பாடுவதாய் நினைத்துக் கொண்டு அவளையும் அறியாமல் அவள் வாய்விட்டுப் பாடிவிட.. ஒரு கள்ளச் சிரிப்புடன் கண்விழித்தான் திலீபன்..

"என்னடி.. பாட்டெல்லாம் தூள் பரப்புது.."

சம்யுக்தாவிற்கு தன் செய்கையை நினைத்து வெட்கமாகப் போய் விட்டது.. சமாளிக்க வழிதேடியவள் கையிலிருந்த டீயைப் பார்த்ததும் அவசரமாய் டீயை நீட்டினாள்..

"டீ.. பாருக்குட்டி கொடுத்து விட்டாள்.."

"இதற்கும் நீ பாட்டுப் பாடியதற்கும் என்ன சம்பந்தம்..?"

"உங்களை எழுப்புவதற்காக பாடினேன்.."

"என்னை எழுப்ப நீ பாட்டுப் பாடினாய்..?"

"ஆமாம்.."

"வசீகரான்னு வேறு சொன்னாய்.."

"அது பாட்டில் வந்தது.."

"நீ சொல்லவில்லை.."

"ஊஹும்.. நான் ஏன் அதைச் சொல்லப் போகிறேன்..?"

"நம்ப முயற்சி செய்கிறேன்.. உட்காரு.."

"எதற்கு..?"

"குடும்பம் நடத்த.."

"என்னது..?"

"அடச்சீ.. டீயைக் குடுடீ..."

சம்யுக்தா முன் எச்சரிக்கையோடு சற்றுத் தள்ளி யிருந்த சோபாவில் அமர்ந்து கொள்வதைப் பார்த்து அவன் இன்னும் சிரித்தான்..

"ஏன் சிரிக்கறீங்க..?"

"உன் ஜாக்கிரதை உணர்வை மெச்சி சிரித்தேன்.."

சம்யுக்தாவின் முகம் சிவந்து விட்டது.. அவன் ரசனையோடு அவளைப் பார்க்க ஆரம்பிக்க.. அவள் சங்கடத்துடன் காலிக் கோப்பையை டீப்பாயின் மேல் வைத்தாள்.. சோபாவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பைகளைப் பார்த்தவள், புருவம் உயர்த்தினாள்..

"இதெல்லாம் என்ன..?"

"எல்லாம் உனக்குத்தான்.. பிரித்துப் பார்.. தெரியும்.."

"எனக்கா..?"

சம்யுக்தா குழப்பத்துடன் புருவங்கள் முடிச்சிட அந்தப் பைகளைத் திறந்து பார்த்தாள்..

"பட்டுச் சேலை.. விலை ஆறுலட்சம்ன்னு போட்டிருக்கே.. இது யாருக்கு..?"

"உனக்குத்தான்.."

"விளையாடாதீங்க.."

"அதை நாளைக்கு நைட்டுத்தான் விளையாடுவேன்.."

"புரியவில்லை.."

"கொஞ்ச நேரத்தில் புரிந்துவிடும்.."

"இது நகைப்பெட்டி போல இருக்கே.."

"நகைகள் தான்.."

"எனக்கு நகைகள் வேண்டாம்.."

"அதை நீ சொல்லக் கூடாது.."

"இது என்ன இன்னொரு நகைப்பெட்டி..?"

"திறந்து பார்.. தெரியும்.."

திறந்து பார்த்த சம்யுக்தா திகைத்துவிட்டாள்.. உள்ளே தாலிச் சரடில் திருமாங்கல்யம் மின்னிக் கொண்டிருந்தது..

"தாலியா.. இது எதற்கு..?"

"உன் கழுத்தில் கட்ட..?"

"திலீபன்.. என்ன இது..?"

"நாளைக்குக் காலையில் உனக்கும் எனக்கும் இந்த ஊர் கோயிலில் வைத்துக் கல்யாணம் நடக்கப் போகிறது.. அப்படியே ரெஜிஸ்டர் ஆபீஸுக்குப் போய் கல்யாணத்தை ரிஜிஸ்டர் பண்ணிவிடப் போகிறோம்.. எல்லா ஏற்பாடுகளையும் பண்ணியாகி விட்டது.."

"நான் இதற்குச் சம்மதிக்க மாட்டேன்.."

"அது உன் விருப்பம்.. முறையாய் உன்னோடு வாழ்க்கையை தொடங்க நினைத்தேன்.. அது உனக்குப் பிடிக்கவில்லையென்றால் முறையில்லாமல் வாழ்ந்து விட்டுப் போவோம்.. எனக்கு அதனால் எல்லாம் ஒரு பாதிப்பும் இல்லை.. எனக்கு உன்னோடு வாழ வேண்டும்.. அவ்வளவுதான்.. நீதான் மனதைப் போட்டு உழட்டிக் கொள்ளப் போகிறாய்.."

சம்யுக்தா அசைவற்று சிலை போல் சமைந்து நின்று விட்டாள்..

# 34

அய்யர், மந்திரங்களை சொல்லிக் கொண்டிருக்க.. மணப்பெண் அலங்காரத்தில் அசையாமல் திலிபனின் அருகே அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.. பட்டு வேட்டி பட்டுச்

சட்டையில் மாப்பிள்ளை கோலத்தில் ஜம்மென்று இருந்தான் திலீபன்.. சம்யுக்தாவின் விழிகள் அக்கினியைப் பார்த்துக் கொண்டிருந்தன.. அவள் மனதில் கோபம் கனன்று கொண்டிருந்தது..

"உனக்கு முன்னால் இரண்டு வழிகள் இருக்கின்றன சம்யுக்தா.. எந்த வழியைத் தேர்ந்தெடுப்பது என்று நீயே முடிவு பண்ணிக் கொள்.."

"பயமுறுத்தாதீர்கள் திலீபன்.."

"நடக்கப் போவதைத்தான் நான் சொல்கிறேன்.. ஒன்று.. நீ நாளைக்கு எந்தவித கலாட்டவும் பண்ணாமல் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்.."

"நான் அதை மறுத்தால்..?"

"கல்யாணம் பண்ணிக் கொள்ளாமலே என்னுடன் வாழ வேண்டியிருக்கும்.. பரவாயில்லையா..?"

"திலீபன்.."

"இரண்டில் ஒன்றை நீயே தேர்ந்தெடுத்துக் கொள்.. நான் உன்னை வற்புறுத்த மாட்டேன்.."

"இது வற்புறுத்தல் இல்லையா..?"

"இல்லை.. நேற்று இரவு பூராவும் விழித்துக் கொண்டு பயணித்திருக்கிறேன்.. அதனால் இன்றைய இரவை நான் விட்டு வைக்கிறேன்.. நாளைக்கு இரவு நான் உன்னைத் தொட்டு ஆளப்போவது உறுதி கழுத்தில் நான் கட்டிய தாலியுடன் நீ என்னைச் சேரப் போகிறாயா..? இல்லை.. தாலி இல்லாமல் என்னுடன் வாழப் போகிறாயா என்பதை நீயே முடிவு பண்ணிக்கொள்.."

திலீபன் அதற்கு மேல் அவளுடன் ஒரு வார்த்தை கூட அதைப் பற்றிப் பேசவில்லை.. இரவு உணவைத் தவிர்த்து அறையில் முடங்கிவிட்டவளை எழுப்பி சாப்பாட்டுத் தட்டைக் கையில் கொடுத்தான்..

"வீண் பிடிவாதம் பிடிக்காமல் சாப்பிடு.."

"திலீபன் எனக்குக் கல்யாணம் வேண்டாம்.."

"உனக்கு வேண்டாமென்றால் எனக்கும் கல்யாணம் வேண்டாம்.. ஆனால்.. நீ மட்டும் எனக்கு வேண்டும்.."

சம்யுக்தாவிற்கு குமுறிக் கொண்டு வந்தது.. எப்படிப் பட்ட வாழ்க்கைக்கு அவன் அவளை அழைக்கிறான்..

"திலீபன்.. ஒரு நாள்.. ஒரு பொழுதாவது நான் உங்களை உண்மையாய் காதலித்தவள் திலீபன்.."

அதைக் கேட்ட திலீபனின் கண்கள் மின்னின..

"எனக்கும் அது தெரியும்.."

"தெரிந்துமா என்னை முறையில்லாத வாழ்க்கைக்கு கூப்பிடுறீங்க..?"

"நான் உன்னை முறையோடு என்னோடு வாழ வான்னுதான் கூப்பிடுகிறேன்.. நீ அதற்கு முடியாது என்றால் நான் அடுத்த வழியாக அதைத்தானே தேர்ந்தெடுக்க வேண்டும்..?"

"எனக்கு கல்யாணம் நிச்சயமாகிவிட்டது திலீபன்.."

"ப்ச்சு.. இன்னும் உன் கடந்த காலத்திலேயே இருக்காதே சம்யுக்தா.. நிஜக்காலத்திற்கு வா.. எதிர் காலத்தில் நீ எனக்கு மனைவியாக வாழப் போகிறாயா..? இல்லை.. காதலியாக வாழப் போகிறாயா..? என்பதை நீயே முடிவு பண்ணு.."

விடிவதற்கு முன்னால் பாருக்குட்டி வந்து அவளை எழுப்பியபோது இயந்திர பொம்மை போல் குளித்து விட்டு வந்தாள் சம்யுக்தா.. பாருக்குட்டி அவளுக்கு அலங்காரம் பண்ணிவிட.. மறுப்பே சொல்லாமல் அமர்ந்திருந்தாள்.. திலீபன் வந்து அழைத்தபோது உயிரற்ற உடலாய் பின்தொடர்ந்தாள்..

"கெட்டிமேளம்.. கெட்டிமேளம்.." என்று ஒருவர் குரல் கொடுக்க.. அய்யர் திலீபனின் கையில் தாலியை எடுத்துத் தந்தார்..

"பொண்ணு கழுத்தில் கட்டுங்கோ.."

திலீபன்.. சம்யுக்தாவின் கழுத்தில் தாலியைக் கட்டினான்.. சம்யுக்தாவின் உடலில் ஓர் மின்னலை பரவியது.. கண்கள் கலங்கின..

'கடைசியில் அப்பா அம்மாவிற்கு தெரியாமல் கல்யாணம் பண்ணிக்கொண்டு விட்டேனே..'

அவள் அந்தக் குற்ற உணர்வில் தவித்தாள்.. திலீபன் அதைக் கண்டும் காணாதவன் போல அவளது கரம் பிடித்து அக்கினியை வலம் வர ஆரம்பித்தான்.. அவன் மனம் குந்தவையையும் பார்த்தசாரதியையும் நினைத்துக் கொண்டது..

'அம்மா.. அப்பா.. உங்கள் ஆசைப்படி நான் ஆசைப் பட்டவளை.. என் மேல் ஆசைப்பட்டவளை தேடிப் பிடித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டுவிட்டேன்.. எங்களை ஆசீர்வதியுங்கள்.. உங்கள் கண்முன்னால் என் கல்யாணத்தை நடத்திக் கொள்ளும் கொடுப்பினை எனக்கு இல்லை.. இனி நீங்கள் முறைப்படி பெண் கேட்டு முடிவாகி எங்கள் கல்யாணம் நடக்க கால அவகாசம் இல்லை.. புரிந்து கொள்ளுங்கள்..'

திருமணம் செய்து கொண்ட இரு மனங்களும் தங்களைப் பெற்றவர்களிடம் மானசீகமாகப் போசிக் கொண்டன..

# 35

பதிவு அலுவலகத்தில் திருமணத்தை பதிவு பண்ணிக் கொண்டதும் அவர்கள் பகல் விருந்திற்கு அங்கிருந்த ஸ்டார் ஹோட்டலுக்குப் போனார்கள்..

"எந்தா சாரே.. இவ்வளவு பெரிய ஹோட்டலில் போயா சாப்பிடணும்.. நான் இதையெல்லாம் பார்த்ததே இல்லை சாரே.." பாருக்குட்டி கண்களை அகல

விரித்தாள்..

"அதனால்தான் உங்களிருவரையும் இந்த ஹோட்டலுக்கு விருந்துக்கு அழைத்துக் கொண்டு வந்தேன்..!" திலீபன் சிரித்தபடி சம்யுக்தாவைப் பார்த்தான்.. அவள் முகம் திருப்பிக் கொண்டாள்..

"பாருக்குட்டிக்கு வளர சந்தோஷம் சாரே..!" சோமன் வாயெல்லாம் பல்லாகக் கூறினான்..

"எதற்காம்...?" திலீபன் மீண்டும் மனைவியின் முகம் பார்த்தான்..

"நீங்கள் மனசுக்குப் பிடித்த வனப்பான பெண் குட்டியையே கல்யாணம் கழிச்சதுக்கு.." சோமன் பொங்கி சிரித்தான்..

"வனப்பான பெண்குட்டிக்குத்தான் என்னைப் பிடிக்க மாட்டேன் என்கிறது.." திலீபனின் விழிகள் சம்யுக்தாவை விழுங்கி விடுவது போலப் பார்த்தன..

"அதெல்லாம் சும்மா சாரே.. நிங்களைப் பிடிக்காத பெண்குட்டியும் உலகத்தில் உண்டா.."

பாருக்குட்டி புகழ்ச்சியாய் கூற.. சம்யுக்தா அவளை எரிச்சலுடன் பார்த்தாள்..

'இவள் என்ன.. திலீபனுக்கு நூல் விடுகிறாளா..'

திலீபனின் பார்வை மனைவியின் பார்வையைக் கணித்துவிட்டது.. அவன் மனம் உல்லாசமானது..

'அவள் என்னை ஒரு வார்த்தை அதிகப்படியாக சொல்லிவிட்டால் கூட.. இவளுக்கு ஆகாதாம்.. அப்புறம் எதற்கு இந்த வீறாப்பு..'

திலீபனின் திருவனந்தபுரத்து நண்பர்கள் சிலரும் தங்கள் மனைவிகளுடன் அவனுடைய திருமணத்திற்கு வந்திருந்தனர்.. காதல் திருமணம் என்பதை முன்கூட்டியே அவர்களிடம் திலீபன் தெரிவித்திருந்தான்..

"பொண்ணு வீடு மிடில் கிளாஸ்.. அப்பா.. அம்மாவிற்கு அதில் மனவருத்தம்.. நாங்க ஹை கிளாஸ் என்பதில் அவளுடைய அப்பா அம்மாவிற்கு மனபயம்.. வேறுவழியில்லாமல் நாங்களே எங்கள் கல்யாணத்தை நடத்திக் கொள்ள வேண்டியதாகிவிட்டது.."

திலீபன் அழகாக எடுத்துச் சொன்ன விதத்தில் அவர்கள் அவனுடைய திருமணத்திற்கு தோள் கொடுக்கத் தயாராகி விட்டனர்..

"நாங்கள் இருக்கிறோம் திலீபன்.. கோயிலில் கல்யாணம்.. ரெஜிஸ்ட்ரார் ஆபீஸில் பதிவு பண்ணிக் கிறோம்.. ஸ்டார் ஹோட்டலில் விருந்து சாப்பிடுகிறோம்.. எல்லா ஏற்பாடுகளையும் பக்காவாக நாங்களே

பண்ணிவிடுகிறோம்.. நீங்க கவலைப்படாமல் கல்யாணப் பொண்ணைக் கூப்பிட்டுக் கொண்டு முகூர்த்த நேரத்திற்கு வந்து சேருங்க.." என்று சொல்லி விட்டனர்..

சொன்னபடி அனைத்துக் காரியங்களையும் அழகாக முடித்துக் கொடுத்தவர்களின் அருகே போய் வேண்டியதைக் கேட்டு உபசரித்துக் கொண்டிருந்தான் திலீபன்..

அந்த ஹாலின் ஓரமாக போடப்பட்டிருந்த மேடையில் கையில் மைக்கோடு ஒருவன் நின்று பாடிக் கொண்டிருக்க.. சுற்றிலும் நின்றவர்கள் வாத்தியக் கருவிகளை இசைத்துக் கொண்டிருந்தனர்..

"என்ன வேண்டும் சேட்டா.." திலீபன் வினவியதும்..

"ஒரு பாட்டு பாடுங்க திலீபன்.." என்று அவனுடைய நண்பர் கேலியாக கலாட்டா செய்தார்..

"புது மாப்பிள்ளையைப் போய் பாடச் சொல் கிறீங்களே.." அவருடைய மனைவி இளமுறுவலுடன் கேட்டாள்..

"அப்புறம்.. புதுப்பெண்டாட்டியை கவர் பண்ணுவது எப்படி..?" என்று அவர் சிரித்தார்..

"நீங்களெல்லாம் இப்படித்தான் கவர் செய்தீங்களா..?" என்று பதிலுக்கு அவர் மனைவி கிடுக்கிப் போட..

"திலீபன் பாடத் தெரிந்தவர்.. பாடிக் கவர் பண்ணலாம்.. நான் பாடத் தெரியாதவன்.. நான் பாடினால் நீ உன் அம்மா வீட்டிற்கு ஓடியே போய் விடுவாய்.." என்று பதிலுக்கு அவர் கலாய்த்தார்..

"அப்படியா திலீபன்.. நீங்கள் பாடுவீங்களா.." என்று நண்பரின் மனைவி ஆவலுடன் கேட்க.. திலீபன்.. மேடையில் ஏறி பாடிக் கொண்டிருந்தவரின் கையில் இருந்த மைக்கை வாங்கிக் கொண்டான்..

"யார் இந்தப் பெண்தான் என்று..

கேட்டேன் முன்னாலே..

இவள் எந்தன் பாதி என்று..

கண்டேன் தன்னாலே..

என் வீட்டு முற்றத்தில்..
இவள் போடும் கோலங்கள்..
எப்போதும் வேண்டும்..
என்று கேட்டேன்..
என்னை.. ஏதோ செய்தாளே.."

திலீபன் பாடியபடி இடையே மெதுவாக அசைத்து ஆடியவாறே சம்யுக்தாவைப் பார்த்தான்.. அவள் ஒரு நிமிடம் தன் வேதனையை மறந்து அவனைப் பார்த்தாள்..

# 36

கடல் காற்று உடல் பூராவும் படிய.. அதன் இதத்தில்கூட மன வெம்மை தணியாதவளாக சிலைபோல் பால்கனியின் சுவரோடு சாய்ந்து அமர்ந்திருந்தாள் சம்யுக்தா.. அவள் கண்முன் இருள் பரவியிருந்தது.. அந்த இருளில் தெரிந்த கடலின் தோற்றம் அவளுக்குள் ஒருவித அச்சத்தை உண்டுபண்ணியத..

"இருட்டுக்குள் இங்கே ஏன் வந்து உட்கார்ந்து இருக்கிறாய்..?"

திலீபன் பட்டு வேட்டி சரசரக்க வந்து நின்று கேட்டான்.. சம்யுக்தாவிற்கு துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது..

"வெளிச்சத்தை தொலைத்துவிட்டேன்.. அதனால் தான் இருட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறேன்.."

"உனக்கான வெளிச்சம் உன்னோடுதான் இருக்கிறது.. அது ஒருபோதும் உன்னை விட்டுப் பிரியாது."

திலீபன் விளக்கைப் போடாமல் அவளுக்கு அருகில் அமர்ந்து கொண்டான்.. அவனது உடல் உராய்வை உணர்ந்த சம்யுக்தாவின் உடல் நடுங்கியது.. அவள்

நகர்ந்து அமர்ந்தாள்.. திலீபன் தானும் நகர்ந்தான்.. சம்யுக்தா எழுந்து கொள்ள முயல.. அவளது கைபிடித்து சுண்டியிழுத்தான்.. அவள் அவன் மடிமீது விழுந்தாள்..

"சம்யுக்தா.."

இதுவரை திலீபனின் குரலில் இத்தனை தாபத்தை சம்யுக்தா உணர்ந்தது இல்லை.. அவனது குரல் அவளைக் கட்டிப்போட.. விடுபட முடியாமல் விக்கித்துப் போனாள்..

"ஏண்டி என்னை விட்டு விலகப் பார்க்கிறாய்... நான் உன்னுடைய திலீபன்டி.."

அவன் அவளது காது மடல்களில் இதழ் பதித்துக் கூறினான்.. அவனது மீசையின் ரோமங்கள் அவளது கன்னத்தில் குத்த.. சம்யுக்தா இன்ப வேதனையுடன் கண்களை மூடிக் கொண்டாள்.. தூரத்தில் தெரிந்த கடலின் தோற்றம் இருளில் இப்போது அச்சுறுத்த வில்லை..

திலீபன் தன் மடியில் கிடந்த சம்யுக்தாவைக் கையில் ஏந்திக் கொண்டு ஹாலைக் கடந்து படுக்கையறைக்குள் நுழைந்தான்.. கட்டிலில் அவளைக் கிடத்தினான்...

அறைக் கதவைத் தாழிட்டான்.. ஆவலுடன் அவளை நெருங்கினான்.. அவள் மேல் படர்ந்தான்..

ஆறு வருடங்களாக அவன் மனதில் அடக்கி வைத்திருந்த மோகத்தீ கொளுந்துவிட்டு எரிய..

கனல் வீசும் அவனது காதலில் கரைந்து போனாள் சம்யுக்தா..

பற்றியெரிந்த தீ அவளை வேகமாய் ஆட்கொண்டு விடியலின் அருகே ஒருவழியாய் தணிந்த போது சம்யுக்தா மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்..

"கடைசியில் நினைத்ததை சாதிச்சுட்டீங்க.."

"நீ என்னை நினைக்கவில்லையா..?"

"கடத்திக் கொண்டு வந்த கட்டாய தாலி கட்டி விட்டீங்க.."

"உன்னை என் மனைவியாக்கிய பின் தொடுவது தானே மரியாதை.. அது தவறா..?"

"உங்களுக்கு எதுவுமே தவறாகத் தோன்றாது.."

"உனக்கு எது தவறாய் தோன்றுகிறது..?"

"இனி அதைச் சொல்லி ஆகப் போவதென்ன..?"

"தெரியுதில்ல.. வாயை மூடிக்கொள்.."

"முடியாது.."

"அதையும் பார்த்துவிடலாம்.."

அவன் அவளது இதழோடு இதழ் பதிக்க.. அவள் பேச்சிழந்து வாய்மூடிக் கொண்டாள்.. அணைந்திருந்த மோகத்தீ மீண்டும் கனன்று பற்றிக் கொள்ள.. அதற்கு மேல் திலீபன் அவளைப் பேச விடவே இல்லை..

அறைக்கதவு தட்டப்படும் வேளையில் விழித்தவள். தன் மேல் கரங்களை போட்டுக் கொண்டிருந்த திலீபனை ஆயாசமாகப் பார்த்தாள்..

"தூக்கத்தில்கூட என்னை சிறை பிடிக்கணுமா.."

அவனது கைகளை விலக்கிவிட்டுச் சென்று கதவைத் திறந்தாள்.. பாருக்குட்டி மோகனமாக சிரித்துக் கொண்டு நின்றிருந்தாள்..

"சாயா கொண்டு வந்தேன் அம்மே.."

"ம்ம்... கொடு.."

அறைக்கதவை மூடிவிட்டு கட்டிலில் அமர்ந்தவள், அவனை மெல்லத் தொட்டு எழுப்பினாள்.. அவன் கண்களைத் திறக்காமல் புரண்டு அவள் மடியில் படுத்துக் கொண்டான்.. தன் இடுப்பை வளைத்திருந்த அவன் கரங்களைப் பார்த்தவள்,

'ம்ஹூம்.. மறுபடியும் சிறை பிடித்துவிட்டானா..' என்று நினைத்துக் கொண்டாள்..

பிடித்தால் உடும்புப் பிடி என்று இவனுடைய பிடியைப் பார்த்துவிட்டுத்தான் சொல்லியிருப்பார்கள் போல என்று நினைத்தவளுக்கு ஏனோ அவன் மேல்

கோபம் வரவில்லை..

முதல் நாள் இரவு அவளை முரட்டுத்தனமாய் ஆண்டுவிட்டு இப்போது அறியா சிறுவன் போல அயர்ந்து உறங்குபவனின் முடி கோத விழைந்தது அவள் உள்ளம்..

"மன்னவா.. உன்னை நான்..

மாலையிட்டால்.. மகிழ்வேன்.."

மெலிதாக பாடிக் கொண்டே அவனது முடி கோதியவளின் கரம் பிடித்து அதில் இதழ் பதித்தான் திலீபன்..

"அதுதான் உன் மனதுக்குப் பிடித்த மன்னவனுக்கு மாலையிட்டு விட்டாயே.. இனி மகிழ வேண்டியது தானே.."

"அதுதானே பார்த்தேன்.. வாயைத் திறந்து ஒரு வரி பாடிவிடக் கூடாதே.. உடனே வம்புக்கு வந்து விடுவீங்களே.. தூங்குவது போல் நடித்தீங்களா.."

சம்யுக்தாவின் மடியிலிருந்து அப்போதும் விலகாமல் அவளது முகத்தை அண்ணாந்து பார்த்த திலீபனின் முகத்தில் எல்லையற்ற நிறைவும் திருப்தியும் தென் பட்டன..

# 37

"சொன்னால் கேள் சம்யுக்தா.."

"இந்த விஷயத்தில் நீங்கள் சொல்வதை நான் கேட்க மாட்டேன்.."

"உன் பிடிவாதம் அர்த்தமற்றது.."

"ஆனால்.. தேவையானது.. அதாவது எனக்கு.."

ஒரு மணி நேரமாக அவளோடு வாதிட்டு ஓய்ந்து போய்விட்டான் திலீபன்.. அவன் எவ்வளவுதான் சொன்னாலும் சம்யுக்தா கேட்பதாக இல்லை.. தன் பிடிவாதத்தில் உறுதியாக இருந்தாள்..

"நமக்குத்தான் கல்யாணம் ஆகிவிட்டதே.. இனி மறைந்து வாழ வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது..?"

"மறைந்து வாழாமல் வேறு என்ன செய்ய வேண்டும் என்கிறீங்க..?"

"உன் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் நம் கல்யாணத்தைப் பற்றி தெரியப்படுத்துவோம்.. ஊருக்குத் திரும்புவோம்.."

"நான் வர மாட்டேன்.."

"ஏண்டி.."

"உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் வேண்டு மானால் இது வெற்றியாக இருக்கலாம்.. ஆனால்.. எனக்கும் என்

குடும்பத்திற்கும் இது தீராத அவமானத்தைத் தேடித் தந்துவிட்ட செயல்.."

திலீபனின் முகம் கருத்துவிட்டது.. அந்த பதினைந்து நாளும் அவனோடு அவள் மனமொப்பி வாழ்ந்ததாக அவன் நினைத்தது பொய்யா..? அவள் பிடிக்காமல் தான் அவனோடு வாழ்கிறாளா..?

என்னதான் கழுத்தில் கத்தியை வைப்பதைப் போல் மிரட்டி அவளைத் திருமணம் பண்ணிக் கொண்டிருந்தாலும் அவள் மேலிருந்த அளவு கடந்த காதலில் திலீபனுக்கு நம்பிக்கை அதிகம் இருந்தது.. நிச்சயதார்த்தம் என்ற சிக்கலில் மாட்டிக் கொண்டதால் குடும்பத்தை நினைத்து கலங்குகிறாள் என்றுதான் அதுவரை அவன் நினைத்துக் கொண்டிருந்தான்..

"என்னோடு வாழ்வது உனக்கு அவ்வளவு பிடித்த மில்லாத ஒன்றா சம்யுக்தா.."

அவன் கேள்வியில் கத்திக் குத்து பட்டாற்போல் தலைநிமிர்ந்தாள் சம்யுக்தா..

திலீபனின் விழிகளில் தெரிந்த குற்றச்சாட்டைக் கண்டதும் ஒரு கணம் அசைவற்று நின்றாள்.. மறுகணம் அவனை நெருங்கி அவனது கழுத்தில் தன் கைகளை மாலையாக்கிக் கொண்டு அவன் விழிகளுக்குள் பார்த்தாள்..

"பிடிக்கவில்லைன்னு நான் சொன்னேனா..." அவளின் இமைகள் படபடக்க கேட்டாள்..

அவள் கேட்ட விதத்தில் திலீபன் மயங்கிப் போனான்.. அவனுடைய கைகள் அவளது முதுகை வளைத்தன.. அவன் அவளது பின்னால் கழுத்தில் இதழ் பதித்து தன்னோடு அவளை இறுக்கிக் கொண்டு அவளது காதோரம் முணுமுணுத்தான்..

"அப்புறம் ஏண்டி இப்படிப் பேசுகிற..?"

"உங்களுடைய வட்டம் வேறு என்னுடைய வட்டம் வேறு திலீபன்.. நான் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டதாகத்தான் எல்லோரும் நினைப்பார்கள்.. சொல்லு வார்கள்.. என்

குடும்பம் பட்ட அவமானத்தை என் கல்யாணம் சரிசெய்து விடாது.."

"உன்மேல் குற்றமில்லைன்னு நான் சொல் கிறேண்டி.."

"அதைச் சொன்னாலும் ஆறு வருடத்திற்கு முந்தைய கதையை நீங்கள் சொல்ல வேண்டியிருக்கும்.. அது இதைவிட மோசமனாது.. அந்தரங்கம் புனிதமானதுன்னு கண்ணதாசன் சொல்லியிருப்பது உங்களுக்குத் தெரியாதா..? நம் அந்தரங்கத்தை பகிரங்கப்படுத்த வேண்டுமா..?"

திலீபன் அவளை இன்னும் ஆரத்தழுவிக் கொண்டான்.. அவனுக்குத் தெரியும்.. அவள் அந்த ரயில் பயணத்தில் மிக அற்புதமான ஒரு காதலை அவனுக்கு உணர்த்தினாள்.. அடுத்து வந்த ஆறு வருடங்களில் அவளைத் தவிர வேறு யாரையும் நினைக்கவிடாமல் செய்துவிட்டாள்..

அந்த உணர்வை பகிரங்கப்படுத்த வேண்டுமா..? அந்தக் காதலின் பூவாசம் அவர்களுக்கு மட்டுமே சொந்தமான ஒன்று அல்லவா..?

"இதற்கு வேறு என்னதாண்டி வழி..?"

"இப்படியே இருந்துவிடுவோம்.."

"இதற்காகவா நான் உன் கழுத்தில் தாலியைக் கட்டினேன்..?"

"வேறு எதற்காகன்னு எனக்கும் தெரியும்... உங்களுக்கும் தெரியும்.. திருட்டு ராஸ்கல்.. அறியாப் பிள்ளைபோல் பேசினால் மற்றவர்கள் ஏமாந்து விடுவார்கள்.. என்னை ஏமாற்ற முடியுமா..?"

அவள் கலகலவென்று சிரித்துக் கொண்டே பேச்சை மாற்றினாள்.. அவளது அண்மையில் திலீபன் சென்னையை மறந்து அவளோடு ஐக்கியமாகிவிட்டான்.. சில நாள்கள் கழிந்ததும் மீண்டும் அவளை வற்புறுத்த ஆரம்பித்தான்..

"நாம் சென்னைக்குப் போகலாம் சம்யுக்தா.."

"வேண்டாம்.. என் வீட்டாரின் முகத்தில் விழிக்க என்னால் முடியாது.."

"ஏண்டி.. என்னை இப்படிப் படுத்துகிறாய்..? எனக்கு அங்கே நிறைய வேலைகள் இருக்கின்றன சம்யுக்தா..?"

"நீங்கள் போய்ப் பார்த்துவிட்டு வாங்க..?"

"உன்னை இங்கே தனியாக விட்டுவிட்டு நான் மட்டும் போய்ப் பார்த்துவிட்டு வருதா..? போடி.."

"சோமனும்.. பாருக்குட்டியும் இருக்கிறாங்களே.."

"அவங்களை இந்த வீட்டைப் பார்த்துக் கொள்ளத் தான் வேலைக்கு வைத்திருக்கிறேன்.. உன்னை நான் மட்டும்தான் பார்த்துக் கொள்ள முடியும்.."

அவளை விட்டு நரக முடியாமல் திலீபன் தவித்தான்.. அவளோ வெளியுலகிற்கு முகம் காட்ட மறுத்தாள்.. அறுபது நாள்கள் இந்தப் போராட்டத்தில் ஓடி விட.. அவர்களுக்குத் திருமணம் ஆகி மூன்று மாதங்களாகி விட்ட நிலையில் சம்யுக்தா ஒரு நாள் மயங்கி விழுந்தாள்.. திலீபன் டாக்டரிடம் தூக்கிக் கொண்டு ஓடினான்.. பதறி நின்றவனிடம் ஆறுதலாக புன்னகை செய்தாள் அந்த லேடி டாக்டர்..

"கங்கிராஜுலேஷன் மிஸ்டர் திலீபன்.. நீங்கள் அப்பாவாக ஆகப் போகிறீங்க.."

அடுத்து தான் செய்ய வேண்டியதை திலீபன் உடனடியாக தீர்மானித்துவிட்டான். தடுக்க வழியில்லாமல் சோர்ந்து கிடந்தாள் சம்யுக்தா..

# 38

கணகணவென்று மணியொலிக்க.. பூஜையறையில் கற்பூர ஆரத்தி காட்டிக் கொண்டிருந்தாள் குந்தவை.. காலை பேப்பரை கையில் வைத்துக் கொண்டு அதில்

ஒரு வரியைக்கூட விடாமல் படித்துக் கொண்டிருந்தார் பார்த்த சாரதி..

"உலக நடப்பையும் ஊர் நடப்பையும் மனப்பாடம் பண்ணியது போதும்.. கற்பூர ஜோதியைத் தொட்டு

கண்ணில் ஒற்றிக் கொள்ளுங்க.. அப்போதாவது உங்களுக்கு புத்தி வருகிறதான்னு பார்ப்போம்.." என்றபடி குந்தவை கற்பூரத்தட்டை பார்த்த சாரதியிடம் காண்பித்தாள்..

"என் புத்திக்கென்னடி குறைச்சல்.." என்றபடி கற்பூரத் தட்டை தொட்டுக் கும்பிட்டுக் கொண்டார் பார்த்தசாரதி..

"எல்லாமே குறைச்சல்தான்.. நாட்டு நடப்பை விட்டுவிட்டு கொஞ்சம் வீட்டு நடப்பைக் கவனிங்க.. சென்னைக்குப் போன பிள்ளை அங்கேயிருந்தே

வெளிநாடு போய்விட்டான்.. ஊரில் நடக்கிற அத்தனை கல்யாணங்களுக்கும் முதல் ஆளாய் போய் வருகிறீங் களே.. நம் வீட்டில் பிள்ளைக்கு கல்யாணம் நடக்காம லிருப்பது உங்கள் கருத்தில் உறுத்தவில்லையா..?"

"எனக்கு மட்டும் அந்தக் கவலை இல்லாமல் இருக்குமா குந்தவை..? இவனுடன் படித்த பையன்கள் எல்லோரும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு எல்.கே.ஜி. அட்மிஷன் வாங்க கியூவில் நின்றுகொண்டு இருக்கிறானுங்க.. இவன் என்னடாவென்றால் இன்னும்

உலகம் சுற்றும் வாலிபனாகவே இருக்கிறானே.. என்னை தாத்தாவாக விட மாட்டேன் என்கிறானே.."

அவர்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் போதே வாசலில் இருந்து மீராபாய் ஓடி வந்தாள்..

"இவள் ஏன் இப்படி ஓடிவருகிறாள்..?"

"மாதாஜி.. மாதாஜி.."

"இவள் ஒருத்தி... எல்லாவற்றுக்கும் 'ஜி' போட்டுக்கிட்டு.. என்னன்னு சொல்லித் தொலை.. இதுக்கு வேறு உன்னிடம் நான் 'கியா..கியா'ன்னு கத்தணுமா..?"

"நம்ம ஐயா.. ஆவோஜி.."

"இவள் என்னங்க சொல்கிறாள்..?"

"இதெல்லாம் உன்னுடைய டிபார்ட்மெண்ட்... என்னை இதில் இழுக்காதே.."

"ஆன்னா ஊன்னா இந்த ஒண்ணைச் சொல்லிக் கிட்டு பேப்பரால் மூஞ்சியை மூடிக்குங்க.. இந்திக்காரியை என் தலையில் கட்டிவிட்டு இவர் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார்.."

பேசியவாறே திரும்பி வாசலைப் பார்த்த குந்தவை யின் கண்கள் ஆச்சரியத்திற்கு மாறின.. அவள் பார்த்த சாரதியின் முகத்தை மூடியிருந்த பேப்பரைப் பறித்தாள்.. அவர் கோபத்துடன் அவளை முறைத்தார்..

"என்னிடம் என்ன முறைப்பு வேண்டிக் கிடக்கு..? அங்கே யார் வருவதுன்னு பாருங்க.."

"அட.. நம்ம திலீபன் வந்துவிட்டானா..?"

"அவன் மட்டும்தான் வருகிறானா..?"

"கூட ஒரு பெண்ணுமில்ல வருது.. யாருடி அது..?"

"என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்..? நானும் உங்களைப் போல் இந்த வீட்டிற்குள் கிடப்பவள் தானே.."

திலீபன் தயக்கமில்லாமல் உள்ளே நுழைய.. சம்யுக்தா தயங்கி நின்றாள்.. முகத்தில் ஓர் அதட்டலுடன் அவளது கைபிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே வந்தான் திலீபன்..

"அம்மா.." என்று முன்னால் வந்து நின்ற மகனின் முகத்தைப் பார்த்த குந்தவை.. அவன் இறுக்கிக்கைப் பிடித்திருந்த பெண்ணின் கழுத்தைப் பார்த்தாள்.. புது மஞ்சள் கயிறு மின்னியது.. அவர்கள் வந்த காரில் இருந்து இறக்கப்பட்ட பெட்டிகளை வேலையாட்கள் கொண்டு வந்து அடுக்கி வைத்துவிட்டுச் சென்றனர்..

'இவன் போகும்போது ஒரு பெட்டியோடு மட்டும் தானே போனான்..'

"அம்மா.. இவள்தான் சம்யுக்தா.."

"இவள் என் மருமகளா திலீபா..?"

குந்தவை அமைதியாக வினவியதும்.. சம்யுக்தாவின் முகத்தில் படர்ந்திருந்த கலக்கம் விலகியது.. அவள் சட்டென்று குந்தவையின் முகத்தைப் பார்த்தாள்..

"அம்மா.." திலீபன் பேச முடியாமல் தவிக்க..

"விளக்கம் சொல்ல முடியாவிட்டால் விட்டுவிடு.. வாம்மா.." என்றவாறு சம்யுக்தாவின் கரம் பற்றி பூஜையறைக்கு அழைத்துக் கொண்டு போனாள் குந்தவை..

"விளக்கை ஏற்றும்மா.."

எந்தக் கேள்வியும் கேட்காமல் இயல்பாக தன்னை மருமகளாக அவள் ஏற்றுக் கொண்டதை நம்ப முடியாமல் சம்யுக்தா விளக்கேற்றினாள்..

"அப்பா.." திலீபன் தழுதழுக்க.. பார்த்தசாரதி அவன் தோள்களில் ஆதரவாய்த் தட்டினார்..

"அதுதான் அம்மாவே சொல்லி விட்டாளே.. மெதுவாகப் பேசிக் கொள்ளலாம்.. இப்போது நீங்கள் போய் ரெஸ்ட் எடுங்கள்.."

சம்யுக்தாவை அழைத்துக் கொண்டு அவனுடைய அறைக்குள் போனபோது அவள் விழி விரிய அந்த அறையின் ஆடம்பர தோற்றத்தைப் பார்த்தாள்..

"நீங்கள் இவ்வளவு பெரிய பணக்காரரா..?"

"என்னை ரயிலில் முதன்முதலில் பார்த்து நீ மயங்கியபோது என்னோட இந்த அடையாளம் உனக்குத் தெரியாது இல்லையா..?"

"தெரிந்திருந்தால் உங்களைத் திரும்பிக்கூடப் பார்த்திருக்க மாட்டேன்.."

"அதனால்தான் உன்னை எனக்குப் பிடித்து விட்டது.. என்னை எனக்காகவே நேசித்தவள் நீ.. என்னிடம் எனக்காகவே மயங்கியவள் நீ.."

திலீபன் அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.. விலக மனம் இல்லாமல் அவள் அவனோடு ஒட்டிக்கொண்டாள்..

"அம்மா.. கம்பெனியில் என்ன ஆனதோ.. நான் போய்ப் பார்க்க வேண்டும்.. போய்விட்டு வரவா.."

"இது என்னடா புதிதாகக் கேட்கிற..? எப்போதும் நீ இப்படிப் பேசியது இல்லையே.. இன்றைக்கு என்ன ஆச்சு..?"

"அவளுக்கு உடம்பு சரியில்லை அம்மா.."

"அடடா.. என்னடா உடம்புக்கு..?"

"அவள் கன்சீவ் ஆகியிருக்கிறாள் அம்மா.."

திலீபன் தயக்கத்துடன் சுவரைப் பார்த்துக் கொண்டு சொல்ல.. குந்தவை ஆதுரத்துடன் அவன் முகம் பற்றித் தன் பக்கம் திருப்பினாள்..

"நான் பார்த்துக் கொள்கிறேன்.. நீ கவலைப் படாமல் போய்விட்டு வா.."

"எப்படிம்மா.. இதையெல்லாம் ஈஸியாக எடுத்துக் கொண்டீங்க..?"

"நீ இதை எங்களிடம் சொல்லாமல் மறைத்ததற்கு ஏதாவது காரணம் இருக்கும் திலீபா.."

"ஆமாம் அம்மா.. பலமான காரணம் இருக்கிறது.."

திலீபன் அனைத்தையும் அன்னையிடம் கொட்டி னான்.. முகத்தில் சிந்தனை ரேகைகள் படிய.. தீவிரமாய் அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டாள் குந்தவை.. பின் முடிவாக மகனிடம் கூறினாள்..

"சம்யுக்தாவைப் பெத்தவங்களைச் சமாதானப் படுத்தவேண்டியது என் பொறுப்பு.."

# 39

"கீரை வாங்கலையா.. யம்மோவ்.. கீரை.. கீரை.."

வாசலில் கீரைக்காரியின் சத்தம் கேட்டது.. அடுப்பில் குக்கரை ஏற்றி வைத்துக் கொண்டே வாசலில் இருந்த மாமியாரிடம் சப்தம் போட்டாள் தான்யா..

"அத்தை.. அந்த கீரைக்காரியைக் கொஞ்சம் நிற்கச் சொல்லுங்க.."

அவசரமாய் ஈரக் கையைப் புடவை முந்தானையில் துடைத்துக் கொண்டே அவள் ஹாலுக்கு வந்த போது பூரணி அசையாமல் செதுக்கி வைத்த சிலைபோல சோபாவில் அமர்ந்திருந்தாள்..

"இந்தம்மா என்ன இப்படிப் பிடிச்சு வைத்த பிள்ளையார் போல இருக்கு.. கீரைக்காரியை இருக்கச் சொல்லுச்சா.. இல்லையா.."

வாசலில் கீரைக்காரி இல்லை.. தான்யாவின் சந்தேகம் சரியாக இருந்தது.. கோபத்துடன் வீட்டுக்குள் வந்து மாமியாரிடம் இரைந்தாள்..

"அத்தை.. உங்களிடம் நான் என்ன சொன்னேன்..?"

"என்னம்மா.. சொன்ன..?"

"கீரைக்காரியை நிறுத்தி வைக்கச் சொன்னேனா இல்லையா..?"

"அப்படியா..?"

யாருக்கு வந்த விருந்தோ என்ற பாவனையில் சலனமில்லாமல் பூரணி கேட்டுவிட்டு, மீண்டும் விட்டத்தை வெறிக்க ஆரம்பித்தாள்.. பல்லைக் கடித்துக் கொண்டு வாசல் பக்க வராண்டாவில் பார்வையை ஓட்டினாள் தான்யா.. கையிலிருந்த பேப்பரைப் படிக்காமல் சூன்யத்தில் பார்வையைப் பதித்திருந்தார் பலராமன்..

"இந்த வீடு விளங்கினாப்புலதான்.."

சத்தமாய் பேசியபடி விசிலடித்துக் கூப்பிட்ட குக்கரை இறக்கி வைக்க சமையலறைக்குள் ஓடினாள் தான்யா..

"அம்மா.. அம்மா.." ராகுல் கண்ணைக் கசக்கிக் கொண்டு வந்தான்..

"என்னடா.." வள்ளென்று விழுந்தாள் தான்யா..

"பாட்டி ஏன் என்கூடப் பேச மாட்டேன்கிறாங்க..."

"அதை உங்க அப்பாகிட்ட போய் கேளு.."

"பிள்ளையை ஏண்டி அதட்டிக்கிட்டு இருக்கிற.."

டையை முடிச்சுப் போட்டபடி வந்தான் சந்தோஷ்.. எரிச்சலுடன் கணவனை ஏறிட்டுப் பார்த்தாள் தான்யா..

"எனக்கும் அவன்கிட்ட கொஞ்சிப் பேச ஆசை யாகத்தான் இருக்கு.. ஆனால், இந்த வீடு இருக்கிற இருப்பில் அது எனக்கு முடிகிறதா..? எங்கேயாவது தலையைப் பிய்த்துக்

கொண்டு ஓடிவிடலாமென்றால் அதுவும் முடிய மாட்டேன் என்கிறது.."

"ஓடுவேன் கீடுவேன் என்றால் பல்லைக் கழட்டி விடுவேன்.. ராஸ்கல்.."

"இந்தக் கோபத்தை என்னிடம் காட்டுங்க... ஓடிப்போய்விட்ட உங்கள் தங்கையை தேடிப் பிடித்து வெட்டுவதில் காண்பித்து விடாதீங்க.."

"என்னடி சொன்னே..?"

சந்தோஷ் கோபத்தில் மனைவியை அடித்துவிட.. அதைப் பார்த்துக் கொண்டிருந்த ராகுல் வீறிட்டு அழ ஆரம்பித்தான்.. வீட்டுக்குள் இத்தனை களேபரம் நடப்பதை உணராதவர்களாய் பூரணியும் பலராமனும் இருந்த இடத்தை விட்டு அசையாமல் இருந்தார்கள்..

'இவர்களுக்குப் போய் இப்படியொரு நிலை வந்து விட்டதே..' சந்தோஷ் துக்கத்துடன் பெற்றோரைப் பார்த்து விட்டு மகனைத் தூக்கிக் கொண்டான்..

"அழாதேடா.. யூனிஃபார்ம் கசங்கிவிடும்.. சாப்பிட்டாயா..?"

"யார் ஊட்டி விடுவது..? எனக்கென்ன கடவுள் களுக்கு இருக்கிறதப் போல ஏழெட்டுக் கையா இருக்கு..? இருப்பது இரண்டு கை அதில் உத்தியோகத்துக்குப்

போகிற புருஷனைக் கவனிக்கணும்.. ஸ்கூலுக்குப் போகிற பிள்ளையைப் பார்க்கணும்.. இதுக்கு மேல தலைச் சுமையாய் அசையாமல் கல்லுக் குண்டு மாதிரி உட்கார்ந்திருக்கிற.. இரண்டு ஜீவன்களுக்கும் நேரா நேரம் வடிச்சுக் கொட்டணும்.. நானென்ன மனுஷியா.. இல்லை மாடா..?"

"நீ மாடா இல்லையான்னு எனக்குத் தெரியாது.. ஆனால், நீ மனுஷியே இல்லைடி.. அது மட்டும் எனக்குத் தெரியும்.. அம்மா நன்றாக இருந்தபோது ஒரு வேலையைக் கூட உன்னைச் செய்ய விட்டதில்லை.. அத்தனை வேலைகளையும் அவங்களே செய்தாங்க.. அவங்களுக்கு மட்டும் எட்டுக் கையா இருந்துச்சு..? இரண்டு கைகள் தானே இருந்துச்சு.. இன்றைக்கு ஓய்ந்து போய்

உட்கார்ந்திருக்கிறாங்க.. ஒரு நாள்கூடத் தேவையில்லாமல் லீவ் போடாத அப்பா.. மூன்று மாதமாய் லீவ் போட்டுவிட்டு வீட்டில் அடைந்து கிடக்கிறார்.. இவங்ககிட்ட இரக்கப் படலைன்னா நீயெல்லாம் என்ன பிறவிடி..?"

"பேசி முடிச்சிட்டீங்களா..? இவங்க ஏன் இப்படிக் கிடந்து என் உயிரை வாங்கணும்கிறேன்.. ஓடிப்போனவள் எங்கேயோ சுகமாய் வாழ்கிறாள்.. நிச்சயம் பண்ணின அந்த பிரதீப்.. அவள் ஓடிப்போன மறுவாரமே கூட வேலை பார்த்த பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமாய் இருக்கிறான்.. இவங்க ஏன் கிடந்து மருகுகிறாங்க..?"

"சம்யுக்தா ஓடிப்போகும் பெண்ணில்லைடி.."

"அப்போ ஓடிப்போனது யார்..? அவளுடைய டூப்பா..?"

தான்யா எகத்தாளமாக கேட்டுக் கொண்டிருந்த போது வாசலில் அழைப்புமணியின் சத்தம் கேட்டது.. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்..

"நான் உள்ளே வரலாமா..?" என்று கேட்டபடி குந்தவை நின்றிருந்தாள்..

# 40

வாசலில் நின்றிருந்த வெளிநாட்டுக் காரை பார்த்த உடன் அதன் விலையை உணர்ந்து கொண்ட சந்தோஷ்.. இவ்வளவு பெரிய மனிதர்கள் ஏன் நம் வீட்டிற்கு வந்திருக் கிறார்கள் என்று பிடிபடாமல் திகைத்தான்..

தான்யாவோ குந்தவை அணிந்திருந்த வைர அட்டிகைகளையும் வைர வளையல்களையும் 'ஆ'வென்று பார்த்துக் கொண்டிருந்தாள்..

'தங்கத்திற்கே ததிங்கிணத்தோம் போடும் இந்த காலத்தில் நடமாடும் வைரக் கடை போல் வந்திருக்கும் இந்த மகாராணி யார்..?' என்ற எண்ணத்துடன் கணவனைப் பார்த்தாள்..

குந்தவையும் அவளுக்குப் பின்னால் வந்து நின்ற பார்த்தசாரதியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்வதைப் பார்த்த சாந்தோஷ்..

"உள்ளே வாங்க.." என்றான்..

"நீங்க யாரு தம்பி.. சம்யுக்தாவின் அண்ணனா..?"

குந்தவையின் கேள்வியைக் கேட்டதும் அங்கே மந்திரக் கோலைச் சுழற்றியதைப் போல சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டது.. பலராமன் எழுந்து அவசரமாக வீட்டுக்குள் வர.. பூரணி உயிர் வந்தவளாக பரபரப்புடன் குந்தவையைப் பார்த்தாள்..

"நீங்க யாருங்கம்மா.. எங்க மகளை உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"பதறாதீங்கம்மா.. நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்கிறேன்.. என் மகன் பெயர் திலீபன்.. நீங்கள் நிச்சயம் பண்ணியிருந்த மாப்பிள்ளை பிரதீப்புடைய முதலாளி.."

"அவன்தான் இப்போது எங்கள் வீட்டு மாப்பிள்ளை இல்லையே.." பலராமன் வெறுப்புடன் கூற.. பார்த்தசாரதி ஆதரவாக அவரைப் பார்த்து புன்னகைத்தார்..

"எங்களுக்கும் அது தெரியும்.. இன்னும் சொல்லப் போனால் அவன் உங்கள் மகளின் மேல் ஏதாவது ஒரு பழியைப் போட்டு நிச்சயதார்த்தத்தை நிறுத்தி விட்டு அந்த அந்த சுகுணாவை கல்யாணம் பண்ணிக் கொள்ளத் திட்ட மிட்டிருந்ததும் எங்களுக்குத் தெரியும்.. இது மட்டுமா.. நீங்கள் கொடுக்கும் கார் முதற்கொண்டு விற்றிவிட அவன் பிளான் பண்ணியிருந்தானாம்.. திலீபன் இதை எங்களிடம் சொல்லி வருத்தப்பட்டபோது நான்தான் மனது தாங்காமல் உங்கள் பெண்ணைக் கோயிலில் பார்த்தபோது.. இந்த விஷயங்களைச் சொல்லிவிட்டேன்.. அது இப்படி வந்து முடியும்னு நான் நினைக்கவே இல்லை.."

பலராமன் இப்போது சுத்தமாக தன் நிலைக்கு திரும்பிவிட்டார்.. மகள் ஓடிப்போகவில்லை.. அவள் மேல் எந்தத் தவறும் இல்லை என்று தெரிந்துகொண்டவுடன் அவர் உடம்பில் புது ரத்தம் பாயத் தொடங்கி விட்டது..

"நீங்கள் இதை எங்களிடம் சொல்லியிருக்கலாமே அம்மா.."

"எதையும் திட்டமிட்டு செய்யவில்லை தம்பி.. யதேச்சையாய் கோயிலில் சம்யுக்தாவைப் பார்த்தேன்.. திலீபன்தான் அடையாளம் காட்டினான்.. நானும் இருக்க மாட்டாமல் அதனிடம் உளறிவிட்டேன்.."

"அதைக் கேட்டவுடன் சம்யுக்தா ஏன் வீட்டுக்கு வரவில்லை.."

"அவள் நியாயம் கேட்க.. திலீபனின் கம்பெனிக்கே போய்விட்டாளாம்.. இவள் போன நேரம் அந்த பிரதீப் ஸீட்டில் இல்லையாம்.. கலங்கிப் போய் நின்றவளை வீட்டில் விட்டுவிடலாம்ன்னு திலீபன் காரில் கூப்பிட்டுக் கொண்டு வந்தானாம்.."

"ஊம்.. அப்புறம்.."

கதை கேட்கும் பாவனையில் கேள்வி கேட்ட மனைவியின் செவிப்பறை கிழிய ஒரு அறை கொடுக்கும் உத்தேசத்துடன் சந்தோஷ் அவளை முறைத்துப் பார்க்க.. அவள் அடங்கிப் போனாள்..

"அன்றைக்குன்னு பாருங்க.. அவங்க வந்த வழியில் யாரோ ஒரு தீவிரவாதி தப்பித்து ஓடுகிறான்னு போலீஸ் கண்டபடி சுட்டுக்கிட்டு இருந்தாங்களாம்.. திலீபன் காரை யோசிக்காமல் நேரே விட்டு விட்டான்.. கார்பாட்டுக்கு வேறு பாதையில் போய்விட்டதாம்.. கடைசியில் வழிமாறி வருகிறோமுன்னு கண்டு பிடித்து அவன் காரைத் திருப்பு வதற்குள் ராத்திரி பன்னிரண்டு மணிக்கு மேலாகி விட்டது.."

"ஆனால் என்னம்மா.. பேய் பிசாசுன்னு எதையாவது கண்டு பயந்துவிட்டாங்களா..?" பூரணி அப்பாவியாய் கேட்டு வைத்தாள்..

"நல்ல குடும்பத்துப் பெண்ணுங்க பேய் பிசாசைக் கண்டால்கூடப் பயப்பட மாட்டாங்க.. ஒரு கெட்ட பெயர் வந்துவிட்டால் பயந்துவிடுவாங்க இல்லையா..? அதற்கு மேல் காரைத் திருப்பிக் கொண்டு வந்தாலும் வீடு வந்து சேர்வதற்குள் விடிந்துவிடுமேன்னு உங்க பொண்ணு அழ ஆரம்பித்தாளாம்.."

"விடிந்தால் என்னம்மா.. அதற்குப் போய் என் அழுதாள்..?"

"ஒரு இரவு முழுவதும் நான் உங்களுடன் காரில் வந்தேன்னு சொன்னால் யார் நம்புவாங்க..? நான் இப்போதே செத்துவிடுகிறேன்னு சொல்லி ரோட்டில் குதிக்கப் போனாளாம்.. என்ன செய்வதுன்னு தெரியாமல் என் மகன் எங்களிடம் உங்கள் பெண்ணைக் கூப்பிட்டுக் கொண்டு வந்துவிட்டான்.. நாங்க பெரியவங்க யோசித்தோம்.. அவங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைத்து விட்டோம்."

'கடைசியில் அந்த திலீபன்கூடத்தான் இவள் கம்பி நீட்டியிருக்கிறாளா..? இந்தப் பொம்பளையை விட்டால் புதிதாக ராமாயணமே எழுதிவிடுவாள் போல இருக்கு.. அவ்வளவு கற்பனை வளம்.. எனக்குத் தெரிந்ததைச் சொல்லி நான் ஏன் பணக்கார வீட்டு ஆள்களைப் பகைத்துக் கொள்ள வேண்டும்..?'

தான்யா ஒன்றும் அறியாதவள் போல வாய்மூடிக் கொண்டாள்..

# 41

சென்னையில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் திலீபனின் திருமண வரவேற்பு நடந்தது.. கருநீல கோட் சூட்டில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்த திலீபனின் அருகே ரோஜா வண்ணப் புடவையில்.. மாசுமருவற்ற பேரழகுடன் நின்று கொண்டிருந்தாள் சம்யுக்தா..

அவளுடைய ஒவ்வொரு அசைவிலும் அவள் அணிந்திருந்த வைர நகைகள் ஒளிர்விட்டு வெளிச்சத்தை அள்ள இறைக்க.. அதைப் பார்த்து வயிறு எரிந்தாள் தான்யா..

"இவளுக்கு வந்த வாழ்வைப் பாருங்கம்மா.. இவளுடைய நிச்சயத்தின்போதே இந்த திலீபன், இவள் மேல் கண்வைத்து விட்டான்... அதை இல்லைன்னு ஆக்கிவிட்டு ஊரறிய ரிசப்ஷன் வைத்து விட்டாங்களே.." வரவேற்புக்கு

வந்திருந்த தாயாரிடம் பொருமிக் கொண்டிருந்தாள் தான்யா..

"விடுடி.. இதைச் சொல்லி உனக்கு ஆகப் போவ தென்ன.. பணக்கார நாத்தனாரைப் பகைத்துக் கொள்ளாமல் இரு.. அது உன் பிள்ளையின் எதிர்காலத்திற்கு நல்லது.." என்று உபதேசம் செய்தாள் தான்யாவின் தாயார்..

"மாப்பிள்ளையின் அழகையும் கம்பீரத்தையும் பார்த்தாயா பூரணி..." பலராமன் பெருமையாக மனைவியிடம் வினவினார்..

"அதைத்தான் இந்த ஊரே சொல்லுதே.. நம் சம்யுக்தா அதிர்ஷ்டசாலி.." பூரித்துப் போனாள் பூரணி..

"என்ன சந்தோஷ்.. அந்தக் கம்பெனியில் வேலை பார்ப்பவருக்கு பெண் கொடுக்கப் போகிறேன்னு சொல்லி விட்டு கம்பெனி முதலாளிக்கே பெண் கொடுத்து விட்டீங்களே.." உறவினர் ஒருவர் விசாரிக்க..

"இன்னார்க்கு இன்னாருன்னு இறைவன் விதிச் சிருக்கும்போது நம்ம கையில் என்ன இருக்கு.." என்று மிதப்பலாக பதில் கூறினான் சந்தோஷ்..

அவனது விழிகள் ஓரமாய் ஒதுங்கி பவ்யமாய் மரியாதையுடன் நின்றுகொண்டிருந்த பிரதீப்பின் மேல் கர்வத்துடன் படிந்தன..

'என்னமாய் ஆட்டம் போட்டாய்டா.. இப்போது பார்த்தாயா.. ஒற்றை ரூபாய் வரதட்சணை வாங்காமல் பெண்ணைக் கொடுத்தால் போதுமென்று உன் கம்பெனி முதலாளியே என் தங்கையின் கைபிடித்து விட்டார்..' என்று அவன் பார்வை கூறியது.. பிரதீப் தலை கவிழ்ந்தான்..

திலீபனும் சம்யுக்தாவும் முறைப்படி மறு வீட்டு விருந்திற்கு பலராமனின் வீட்டிற்கு சென்று வந்தார்கள்..

"மும்பைக்குப் போகாமல் இங்கேயே இருந்தால் என்னம்மா..?"

மசக்கையாக இருக்கும் மகளின் அருகே இருந்து கவனிக்க முடியாத வருத்தத்துடன் பூரணி வினவினாள்..

"இல்லைம்மா.. அவருடைய ஹெட் ஆபீஸ் மும்பையில்தான் இருக்கு.. அதுபோக அவர் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் பறந்து கொண்டிருப்பார்.. அதற்கு மும்பைதான் வசதி.."

சம்யுக்தா பெருமையுடன் கூறியதை தான்யா பொறாமையுடன் கவனித்துக் கொண்டிருந்தாள்..

மும்பையின் பீச் ஓரம் காரை நிறுத்திவிட்டு இறங்கி நடந்தார்கள் திலீபனும் சம்யுக்தாவும்..

"இப்போது சந்தோஷமாடி.."

"ம்ம்ம்.."

"அதைச் சிரித்துக் கொண்டே சொல்லேன்.."

"சிரிக்கக் கூலி வேண்டாமா..?"

"கொடுத்துவிட்டால் போச்சு.. என்ன வேண்டும்.. சொல்லு.."

"அதை நைட் சொல்லுகிறேன்.."

"ஏய்ய்.. சம்யுக்தா.."

திலீபன் ஆச்சரியத்துடன் மனைவியைப் பார்க்க.. அவள் முகம் சிவந்து விலகி நடந்தாள்.. அன்றைய இரவின் தனிமையில் அவள் கேட்ட கூலியை அள்ளிக் கொடுத்தான் திலீபன்..

"திலீப் இதெல்லாம் கனவா நினைவான்னு சந்தேகமாய் இருக்கு.."

"நான் கனவில்லைடி.."

"அதுதான் எனக்குத் தெரியுமே.. நீங்கள் கனவில்லை.. கனல்.."

"கனலா..?"

"ஆமாம்.. அனல் வீசும் கனல்.. அப்பப்பா.. என்னமாய் கோபம் வந்தது உங்களுக்கு.. புருவத்தை நெரித்து முறைத்துப் பார்த்து என்னைக் கடத்திக் கொண்டு போய் சிறை வைத்து.. கட்டாய தாலி கட்டி.. நீங்கள் பண்ணிய அட்டூழியம் கொஞ்சமா..?"

"அதைக் கொஞ்சிக் கொண்டே சொல்கிறாயே.."

"வேறு என்ன செய்வது.. இந்தக் கனலின் மேல் காதல் கொண்டு விட்டேனே.."

"அதற்காக என்ன செய்து கிழித்தாய்..?"

"இதற்கு முன் செய்யாததற்கெல்லாம் சேர்த்து வைத்து இந்தக் கனலுக்கு ஒரு மகனைப் பெற்றுக் கொடுக்கப் போகிறேனே.."

இமைகளை மூடித் திறந்து சிரித்த மனைவியை கனல் வீசும் காதலோடு இழுத்து அணைத்துக் கொண்டான் திலீபன்.

- முற்றும் -